
தேசவிடுதலைக்காக



பாப்பா பிரசுரம்

ருஷ்யக் கதாசிரியர்கள் ருஷ்ய நாட்டு வாழ்க்கையை மிக அழகாகச் சித்தரிக்கிறார்கள். அவர்கள் ஆகாயத்திலே பறந்து வர்ணஜாலச் சிறகடிப்பதில்லை. அவர்கள் தங்களூரில், தங்கள் வீட்டில் நடப்பவை பற்றியே தான் கதை எழுதுகிறார்கள். இந்தக் கதைத் தொகுப்பிலுள்ள கதைகளைப் படித்துப் பாருங்கள் கதை என்றால் எப்படி யிருக்க வேண்டுமென்று.

ரூ. இரண்டேகால்

தபால் செலவு தனி

தேச விடுதலைக்காக

(ருஷியக் கதைகள்)

மொழிபெயர்த்தவர் :

ஆர். ராமநாதன்

பாப்பா பிரசுரம்
ராயவரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

விற்பனை உரிமை :
நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி

முதற் பதிப்பு: அக்டோபர் 1946

விலை ரூ. இரண்டேகால்

அச்சிட்டோர்:
பாப்பா பிரஸ்
ராயவரம்

பொருளடக்கம்

தேச விடுதலைக்காக

[வாண்டா வாஸிலெவ்ஸ்கா]

"பாட்டி ! பாட்டி !"

அன்னீஸா நிமிர்ந்து பார்த்தாள். வேலிக்கு மறு பக்கத்திலிருந்து நடால்கா அவளைக் கூப்பிட்டாள்.

"என்ன ?"

"ஒரு நிமிடம் உன்னிடம் பேசலாமா ?"

"ஏன் பேசக் கூடாது ? வேண்டுமானால் இங்கே வா !" என்று அன்னீஸா வழக்கம் போல் கடுகடுப்புடன் கூறினாள்.

சூரியன் வெப்பத்தை அள்ளி வீசுகிறது ! விறைத்த அவள் எலும்புகள் சூரியன் கிரணங்கள் பட்டு உரம் பெறும் ; வேதனை கொஞ்சம் குறையும். கருணை சுரக்கும் ஜூலை மாதத்துக் கதிரவன் அது ! மழை மாத்திரம் பெய்யாமல் இருந்தால் ! மழை என்னும் சொல் அவளுக்குக் கவலையை அளித்தது. மழை ! மழையைவிடக் கொடிது வேறில்லை. மழை பெய்ய ஆரம்பித்ததும் அவள் எலும்புகள் வலிக்கும் ; இணைப்புகள் வீங்கும். அதற்குப் பிறகு அவளால் அடி எடுத்து வைக்க முடியாது. ஆனால், சூரியன் ஒளி வீசும் பொழுது—சூரியன் அப்பொழுது இருப்பதைப் போன்று இருக்கும் பொழுது—நிலைமை வேறு

விதமாக இருக்கும். ஜூலை மாதத்துக் கதிரவன் தங்க
மயமான கிரணங்களால் பூமியைத் தழுவிற்று.

"பாட்டி!"

"என்ன?"

"நான் சொல்லுவது உனக்குக் கேட்கிறதா?"

"ஏன் கேட்காது...ஆம்; எனக்குக் கேட்கிறது" என்று அலக்ஷியமாகக் கூறினாள் அன்னிஸா. "இந்தச் சிறுக்கி ஏதோ விஷமம் செய்யப் போகிறாள்...ஒரு கிழவியை இவர்கள் ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்? நான் வாழ்க்கையில் சாந்தியைத் தவிர வேறு எதையும் வேண்டவில்லை. சாந்தியை மாத்திரம் தான் நான் வேண்டுகிறேன். மரணத்திற்கு முந்தின சில மணி நேரத்தை மரணப் பாதையில் தயங்கி நின்ற அந்தக் குறுகின காலத்தை அமைதியாகக் கழிக்க நான் ஆசைப்படுகிறேன்" என்று அவள் தனக்குத் தானே கூறிக் கொண்டாள்.

"பாட்டி! என்னைப் பார்!" என்று நடால்கா மீண்டும் கூறினாள்.

தயக்கத்துடன் கிழவி நிமிர்ந்து பார்த்தாள். அவள் மங்கின, திரை மூடின கண்கள் சிறுமியை உற்றுப் பார்த்தன.

"பாட்டி! ஜெர்மானியர் வருகிறார்கள்!"

அன்னிஸா தோளைச் சுருக்கினாள். இந்த வதந்தியை அவள் பல நாட்களாகக் கேட்கிறாள். அவர்கள் வருகிறார்கள், அல்லவா? அவர்கள் வரட்டும்! தன்னைப் போன்ற கிழவியை அமைதியாகச் சாக ஜெர்மானியர் அனுமதிப்பார்கள். அவர்கள் வந்தால் அவளுக்கு என்ன? ஜெர்மானியன் என்னும் சொல் அவளுக்கு எத்தகைய

பொருளையும் உணர்த்தவில்லை. அது சாரமற்ற சொல் என்று அவள் நினைத்தாள். அவள் சம்பந்தப்பட்ட வரையில் சூரியன் ஒளியில் குளிப்பதும், மகிழ்ச்சி அளிக்கும் கதிரவன் கிரணங்கள் எலும்புகளில் பாய்வதும் தான் முக்கியமானவை. ஜெர்மானியன்! ஜெர்மானியனை எண்ணி வாலிபர்கள் கவலைப்படட்டும். அவளைப் போன்ற கிழவிக்கு ஏன் அந்தக் கவலை?...

"பாட்டி! நாங்கள் காட்டுக்குப் போகிறோம்."

"நீ விரும்பினால் போ!" என்று கிழவி முணுமுணுத்தாள். "அதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?... நான் உன்னுடன் காட்டுக்கு வரவில்லை."

பொறுமை இழந்த நடால்கா அவள் கைகளைப் பற்றினாள்.

"கையை விடு......எனக்கு வலிக்கிறது......என்னைப் பார்... என்ன..."

"பாட்டி! பாட்டி! ஒரு நிமிடம் நான் சொல்லுவதைக் கேள்!"

"நான் கேட்கிறேன்........."

"நான் சொல்லுவது கேட்கிறதா?"

"ஆம்! விஷயம் என்ன?"

"பாட்டி! நாங்கள் காட்டுக்குப் போகிறோம். அப்பா போகிறார்; நான் போகிறேன்; எல்லோரும் போகிறோம்!"

"அப்படியானால், எல்லோரும் போவது தானே... ஜெர்மானியர் வருகிறார்கள், அல்லவா?...அப்படியானால் நீங்கள் கட்டாயம் காட்டுக்குப் போக வேண்டும். ஆனால்,

நான் இங்கேயே இருக்கப் போகிறேன். சூரியன் ஒளி யில் நான் குளிக்கப் போகிறேன்..."

"பாட்டி! எங்கள் தோட்டத்தில் இரண்டு செம் படை வீரர்கள் இருக்கிறார்கள்."

"யார்?"

"இரண்டு செம்படை வீரர்கள்! உனக்குப் புரி கிறதா?"

"ஆம்...ஆனல், அதற்கும் எனக்கும் என்ன சம் பந்தம்?..."

சிறுமி கிழவியின் தோளைப் பிடித்துக் குலுக்கினள்.

"பாட்டி! நீ மீண்டும் மயங்குகிறாய்! தூங்காதே, பாட்டி!"

"நான் தூங்கவில்லை...எனக்குத் தூக்கம் வருகிறது— அவ்வளவுதான்..."

"பாட்டி! நான் சொல்லுவதைக் கேட்கிறாயா? எங்கள் தோட்டத்தில், கிராக்ஷைச் செடிகளுக்கு அருகில் இருக்கும் கொட்டகையில் இரண்டு செம்படை வீரர்கள் இருக்கிறார்கள்."

"அதனல் என்ன? அவர்களில் ஒருவனை நீ காதலிக் கிறாயா?"

நடால்கா நிராசையுடன் பெரு மூச்செறிந்தாள். அவள் கீழே உட்கார்ந்தாள். மங்கின, வரண்ட, முதிர்ந்த கண்களை இமைகொட்டாது பார்த்துக் கொண்டு அவள் அழுத்தம் திருத்தமாகக் கூறினள்.

"பாட்டி! எங்கள் தோட்டத்தில் இரண்டு செம் படை வீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் காயம் அடைந்

திருக்கிறார்கள். நாங்கள் அவர்களைக் காட்டுக்கு அழைத்துச் செல்ல முடியாது. அவர்கள் நிலை மிக மோசமாக இருக்கிறது. உனக்கு விளங்குகிறதா?"

"ஆம், எனக்குப் புரிகிறது...அவர்கள் சூரியன் ஒளியில் குளிக்க வேண்டும்........."

"பாட்டி! அவர்கள் படு காயம் அடைந்திருக்கிறார்கள், தெரிகிறதா? நாங்கள் காட்டுக்குப் போகிறோம். எந்த நிமிடத்திலும் ஜெர்மானியர் இங்கே வரலாம்......அவர்களை யாராவது பராமரிக்க வேண்டும்; அவர்களுக்கு யாராவது குடிக்க ஜலம் கொடுக்க வேண்டும், தெரிகிறதா?"

"இதில் தெரிந்து கொள்ள என்ன இருக்கிறது?"

"இதை நீ செய்வாயா?"

"கட்டாயம் செய்வேன்! சூரியன் ஒளி வீசும் வரையில், என் எலும்புகள் வலிக்காத வரையில், இந்த வேலையை நான் கண்டிப்பாகச் செய்வேன்."

"கொட்டகை எங்கே இருக்கிறது என்பதை நீ மறக்க வில்லையே?"

"இல்லை; நான் மறக்கவில்லை......"

"அப்படியானால், நீ அவர்களைப் பராமரிப்பாய், அல்லவா?"

"ஆம்; நான் அவர்களைப் பராமரிப்பேன்......"

"ஜெர்மானியர் விஷயத்தைத் தெரிந்து கொள்ள அனுமதிக்காதே......"

"அவர்கள் எதையும் கண்டு பிடிக்க முடியாது... ஒரு கிழவியை அவர்கள் ஏன் கண்காணிக்க வேண்டும்?

நான் அங்கு மிங்கும் சுற்றுவேன்; திராக்ஷைச் செடி களைக் கடந்து செல்வேன்—திராக்ஷைச் செடிகளை சாயர்த் தியமாகக் கடந்து செல்வேன்......''

"நீ மறக்க மாட்டாயே, பாட்டி!''

"நான் மறக்க மாட்டேன்...இருவர் என்றாய் அல்லவா?...அவர்களுக்குக் குடிக்க ஜலம் வேண்டும்; அவர்கள் படுக்கையை விரிக்க வேண்டும்; இதைப் போன்ற உதவி அவர்களுக்குத் தேவை......''

"உணவும் அவர்களுக்கு வேண்டும் என்று நினைக் கிறேன். ஆம்; அவர்களுக்கு உணவு வேண்டும்......''

சிறுமி ஆனந்தக் கூத்தாடினாள்.

"ஆம், பாட்டி! அவர்கள் தற்பொழுது உண்ண முடியாது. பாவம்!...இன்னும் இரண்டு தினங்களில், அவர்கள் கொஞ்சம் குணம் அடைந்ததும் அவர்கள் உண்ணலாம்......''

"என்னால் கூடுமானதை நான் செய்கிறேன்...அவர் களுக்கு ரொட்டி கொடுப்பேன்...அல்லது வேறு ஏதே னும் கொடுப்பேன்...நான் அவர்களைப் பார்த்துக் கொள்வேன்.''

"நீ எப்பொழுது போவாய்?''

"இப்பொழுதே போகிறேன். சிறிது நேரத்திற்குப் பிறகு, மீண்டும் போவேன்...நீ கவலைப் படாதே! எல் லாம் ஒழுங்காக நடக்கும்; எல்லாம் முறையாக நடக் கும்......''

"நீ மறக்க மாட்டாயே!''

கிழவிக்குக் கோபம் வந்தது.

"அசட்டுத் தனமாகப் பேசாதே! அன்னீஸா வாக்குறுதி அளித்தால், அதை அவள் நிறைவேற்றுவாள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள். நீ எதற்காகக் கவலைப் படுகிறாய்? அன்னீஸா ஜீவசக்தியற்ற கிழவி, அவள் எதற்கும் பிரயோஜனமற்றவள் என்று நீ நினைக்கிறாயா? நீ நினைப்பது தவறு...சூரியன் ஒளி வீசும் வரையில் நான் என் கடமையைச் செய்வேன்......"

சுருங்கின, நடுங்கும் கைகளை நடால்கா பற்றினாள்.

"போய் வருகிறேன், பாட்டி...நாங்கள் விரைவில் கிராமத்திற்குத் திரும்புவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது......ஆனால், தற்காலிகமாக நாம் பின்வாங்க வேண்டும். காட்டிலிருந்து கொண்டு நாங்கள் அவர்களை இடைவிடாது கொத்துவோம்."

"அதுதான் சரி" என்று முணுமுணுத்தாள் கிழவி. "காட்டிலிருந்து...கவலைப்படாதே! நீ திரும்பி வரும்பொழுது அவர்கள் சௌக்கியமாக இருப்பார்கள்... அந்த வாலிபர்களை நான் மறக்க மாட்டேன்......"

வேலிக்கு அந்தப் பக்கத்திலிருந்து யாரோ அவளை அழைத்தார்கள் :

"நடால்கா! நீ எங்கே இருக்கிறாய்? நடால்கா!"

"வருகிறேன், அப்பா! நான் இதோ வருகிறேன்!"

செருப்பு அணியாத அவள் பாதங்கள் சூரியன் ஒளியில் மின்னின. அன்னீஸா தலையைக் குலுக்கினாள்.

"உல்லாசமான ஆட்டுக் குட்டியைப்போல் இருக்கிறாள். அவர்களை உடனே பார்க்க வேண்டும்......"

சிரமத்துடன் கிழவி எழுந்தாள். உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்க கிழவி சிரமப்பட்டாள். ஆனால்,

எழுந்திருந்த பிறகு அவள் சிரமமின்றி நடந்தாள். கைத் தடியைப் பலமாக ஊன்றிக்கொண்டு அவள் தோட்டத்தைச் சுற்றி நடந்தாள். ஒளி இழந்த அவள் கண்கள் சூரிய வெளிச்சத்தின் உதவியுடன் பழக்கமான வழிகளைப் பார்த்தன. கண்ணை மூடிக்கொண்டு அவள் அந்த வழிகளில் நடப்பாள். இங்கே—இதே இடத்தில்—அவள் எத்தனை வருடங்களாக வசிக்கிருள்? தொண்ணூறு? தொண்ணூற்றி ஒன்று?......

"என்னல் எண்ண முடியவில்லை. வருடங்களைக் கணக்கிட முடியாது. எத்தனை வருடங்களை நான் கண்டிருக்கிறேன்?"

அவள் அங்கு மிங்கும் நடந்து பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் பிரவேசித்தாள். சூரிய காந்திப் புஷ்பங்களுக்கும், சணல் செடிகளுக்கும், முள்ளிக்காய் புதர்களுக்கும் அப்பால் இருக்கிறது திராக்ஷைச் செடி. வைக்கோலால் வேயப்பட்ட அந்தச் சின்னஞ் சிறிய கொட்டகை கிளைகளாலும், தழைகளாலும் மூடப்பட்டிருந்தது. வாசற் படியைக் கண்டு பிடிப்பதற்காக அவள் அங்கு மிங்கும் தடவினள்.

"அதைக் கண்டு பிடிப்பது சிரமம்... அதை அவர்கள் மூடியிருக்கிருர்கள். எனவே, வாசற் படியைக் கண்டு பிடிக்க முடியாது......"

காயம் அடைந்த இருவர் வைக்கோல் மீது படுத்திருந்தனர். கிழவி மண்டியிட்டு உட்கார்ந்து அவர்களை உற்றுப் பார்த்தாள்.

"அம்மா! சிறுவர்கள்......"

மயங்கிக் கிடந்த ஒருவன் விழித்து, கட்டுக் கட்டியிருந்த தலையை உயர்த்தினன்.

"யார் அங்கே? என்று அவன் கூவினன்.

"சத்தம் போடாதே!...பாட்டி அன்னீஸா உன்னைப் பார்க்க வந்திருக்கிருள்...பேசாமல் படு!......"

"ஜலம்......"

"ஜலம்?......நான் ஜலம் கொண்டு வருகிறேன், மகனே! உனக்குத் தேவையானதை நான் தருகிறேன்..."

தனக்கு அந்த சக்தி எங்கிருந்து வந்தது என்பது அன்னீஸாவுக்கு விளங்கவில்லை. வேதனை மாயமாக மறைந்தது. வேதனையை அவள் மறந்தாள். கிணற்றிலிருந்து அவள் குடத்தில் ஜலம் எடுத்தாள். பிறகு, ஜலத்துடன் திராக்ஷைச் செடிக்கு அப்பாலிருந்த கொட்டகைக்குத் திரும்பினாள்.

"ஜலத்தைக்குடி, மகனே! ஜலத்தைக்குடி!...அருமையான ஜலம் இது. நமது கிணற்று ஜலம்! அருமையான, குளிர்ந்த ஜலம்! ஜலத்தைக்குடி....இது சாதாரண ஜலமல்ல, உயிர் அளிக்கும் அமிர்தம்."

இன்னொருவன் ஜுரத்தின் துன்பம் தாங்க முடியாமல் அங்கு மிங்கும் புரண்டான். துணியை ஜலத்தில் நனைத்து அதை அவன் நெற்றியில் வைத்தாள் கிழவி.

"கிழவி இன்னும் பிறருக்கு உதவி புரிய முடியும்... டால்கா! அவள் என்னை என்ன பாடுபடுத்தினாள்!... புரிந்து கொள்ள என்ன இருக்கிறது? நோயாளிக்குக் குடிக்க ஜலம் வேண்டும் என்பது யாருக்குத் தெரியாது?... மகனே! நீ படுத்துக்கொள்...இரண்டு நாட்கள் பொறு. பிறகு, எல்லாம் சரியாய் விடும்......"

குடத்தை நோயாளிகளுக்கு அருகில் வைத்து விட்டு அவள் மெதுவாகத் தன் வீட்டை நோக்கி நடந்தாள்.

வீடு திரும்பினதும் அவள் வாசற் படியிலே உட்கார்ந்து தூங்க ஆரம்பித்தாள். அவளுக்குத் தாங்க முடியாத களைப்பு. தூங்கி வழியும் சோம்பேறி ஈக்களின் ரீங்காரத்தில் கூட அவளுக்குக் கேட்டது; சூரியன் ஒளி அவள் மீது விழுந்தது; சூரியன் வெப்பத்தில் அவள் தேகம் கலந்தது. மாலையில் வீசின குளிர்ந்த காற்று அவளைத் துயில் எழுப்பிற்று. வெகு சிரமத்துடன் அவள் நோயாளிகள் இருக்கும் இடத்திற்குச் சென்று விட்டு, மீண்டும் தன் குடிசைக்குத் திரும்பினாள்.

"ஒரு நாள் ஓடி மறைந்து விட்டது...நாளைய தினம் நிர்மலமாக இருக்கும்!"

மறு நாள் காலையில் மூவர் அவள் வீட்டில் பிரவேசித்தனர். அவர்களைக் கண்டு அன்னீஸா பயப்படவே இல்லை. ஜெர்மானியரைப் பற்றி அவளுக்கு என்ன கவலை? இன்னும் சில நாட்களில், நீண்ட நாட்களாக அவளுடன் விளையாடும் மரணம், அவளைத் தழுவும்.

பொறுமையுடன் அவள் காத்தாள். அவளுக்கு விளங்காத பாஷையில் அன்னியர் கடுமையாகப் பேசினர். அவர்கள் பிதற்றட்டும்! அதனால் அவளுக்கு என்ன...... அவர்கள் சொன்னது அவளுக்கு விளங்கவே இல்லை!

அவர்கள் கூச்சலிட்டனர். அவள் பெருந்தன்மையுடன் புன்னகை புரிந்தாள். அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதை அறிய அவள் முயன்றாள். அங்கே மூவர் இருந்தனர். மூவரும் வாலிபர்கள். பக்கத்து வீட்டுத் தோட்டத்திலுள்ள கொட்டகையில் படுத்திருக்கும் வாலிபர்களின் வயது தான் இவர்களுக்கும் இருக்கும். திடீரென்று அவள் மனதில் ஒரு எண்ணம் உதித்தது: குடத்தில் போதுமான அளவு ஜலம் இல்லையென்றால்? அவர்கள் அப்பால் சென்றால்? அமைதியாக வாழ அவளை அன்னி

யர் அனுமதித்தால்? அவர்களை உடனே பார்க்க வேண்டும்... அவள் தந்திரமாக அவர்களைச் சந்திப்பாள்; அவள் ரொம்பத் தந்திரமாக அவர்களைச் சந்திப்பாள். இதை யாரும் காணமாட்டார்கள்...எழுந்து நடப்பதற்குக் கூட வலிமையற்ற ஒரு கிழவியை யார் கண்காணிக்கப் போகிறார்கள்?

அவர்கள் கூச்சலிட்டார்கள்—இடை விடாது கூச்சலிட்டார்கள். பிறகு அவர்கள் போய் விட்டார்கள். விஷயம் அத்துடன் முடிந்தது என்று நினைத்தாள் அன்னீஸா. ஆனால், அவள் வாசற் படியிலிருந்து எழுந்து நிற்கு முன் பல ஜெர்மானியர் அங்கே வந்தனர்.

"இது உன் குடிசையா?"

சூரியன் ஒளியைத் தடுப்பதற்காக அவள் தன் கையால் கண்களை மறைத்தாள். உக்ரேனிய பாஷையில்—தன் தாய் மொழியில்—யாரோ பேசுகிறார்கள். ஆனால், வார்த்தைகள் முரட்டுக் குரலில் உச்சரிக்கப்படுகின்றன. அவன் சொன்னதெல்லாம் அவளுக்குப் புரிந்தது. ஆனால், அவள் பேச விரும்பவில்லை.

அதிகாரி மீண்டும் கேட்டான்:

"இது உன் குடிசையா? பதில் சொல்!"

"என் குடிசைதான்...ஏன்?"

அதிகாரிகள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டனர். அன்னீஸாவுக்கு அவர்கள் மீது கடும் கோபம். ஏனெனில், அவர்கள் சூரியன் ஒளியை மறைத்தனர். கோபத்துடன் அவள் சீறினாள்.

"என்ன?"

"ஒன்றுமில்லை...ஒன்றுமில்லை..."

"கதவைத் திற!"

"ஏன்? கதவு திறந்து தானே இருக்கிறது!" என்று ஆச்சரியத்துடன் கூறினாள் அன்னிஸா.

"கதவைத் திறக்கும்படி உனக்குக் கட்டளை இட்டால் நீ கதவைத் திறக்க வேண்டும்" என்று துவிபாஷகன் கூறினான்.

மெதுவாக முனகிக் கொண்டும், தள்ளாடிக்கொண்டும் அவள் எழுந்திருந்தாள். கைத்தடியின் மீது சாய்ந்து கொண்டு அவள் உள்ளே சென்றாள். அவளைத்தொடர்ந்து அதிகாரிகளும் உள்ளே நுழைந்தனர்.

"இது சிறிய, காற்றோட்டமில்லாத குடிசை" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு கூறினான் கர்னல்.

"ஜன்னலைத் திறக்கலாம்" என்று கூறிக்கொண்டே முன்னே பாய்ந்து ஜன்னலைத் திறந்தான் இன்னொரு அதிகாரி. ஜன்னல் கதவுகள் கிலுகிலுத்தன. நிழல் கவிந்த தோட்டத்திலிருந்து குளிர்ந்த காற்று உள்ளே வீசிற்று.

"கிராமவாசிகள் எங்கே இருக்கிறார்கள் என்று அவளைக் கேள்" என்று கட்டளை இட்டான் கர்னல்.

கைத்தடியில் சாய்ந்துகொண்டு அசையாமல் மௌனமாக நின்றாள் அன்னிஸா. அவள் அன்னியரைப் பரிசீலனை செய்தாள்.

"எனக்கு எப்படித்தெரியும்?" என்று தோளைச் சுருக்கிக் கொண்டே கிழவி கூறினாள். "நான் கிழவி, நான் வெளியில் செல்வதே இல்லை.

"நீ இங்கே தனியே இருக்கிறாயா?"

" ஆம்; தன்னந்தனியே இருக்கிறேன்........பத்து வருடங்களாக நான் தனியே வசிக்கிறேன்......"

அதற்கு மேல் அவர்கள் அவளைத் தொந்தரவு செய்யவில்லை. அவர்கள் மெத்தையிலும், பெஞ்சியிலும் உட்கார்ந்தனர். பிறகு எதைப்பற்றியோ அவர்கள் உரத்த குரலில் பேசினர். அவள் கொஞ்ச நேரம் அங்கேயே நின்ருள். பிறகு அவள் கதவை நோக்கி நடந்தாள். கொடிய கரம் அவள் தோளைப்பற்றி அவளைப் பின்னுக்கு இழுத்தது. வீட்டிலிருந்து வெளியே செல்ல எதிரிகள் அவளை அனுமதிக்க மாட்டார்கள் என்பதை அன்னீஸா உணர்ந்தாள். துவிபாஷகனுடன் கர்னல் எதையோ நீண்டநேரம் விவாதித்தான்.

" இவளைக் கண்காணிக்க வேண்டும். அவள் கிழவியாக இருக்கலாம்; குருடாகவும் இருக்கலாம். எனினும் அவள் என்ன செய்யப் போகிருள் என்பது யாருக்குத் தெரியும்?......நிலைமை என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ளுமுன் நாம் இங்கே இருப்பதாக அவள் யாருக்காவது செய்தி அனுப்பலாம். வீட்டிலிருந்து வெளியில் செல்ல அவளை அனுமதிக்கக் கூடாது; அவளை இடைவிடாது கண்காணிக்க வேண்டும். இது என் கட்டளை..."

அவள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என்று துவிபாஷகன் சொன்னபொழுது அன்னீஸா அந்த உத்தரவுக்கு அடிபணியும் முறையில் பன்முறை தலையை அசைத்தாள். இந்த உத்திரவு அவளை எந்த விதத்திலும் பாதிக்காது......வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பது கட்டளை! அவள் வீட்டிலேயே இருப்பாள்!

அடுப்புக்கு மேலே இருக்கும் தட்டில் அவள் படுப்பது வழக்கம். சிரமத்துடன் அவள் தட்டின் மீது ஏறினுள். படுக்கையில் படுத்ததும் அவள் தூங்கி விட்டாள். ஜெர்

மானியர் உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தனர். மேஜை மீது பூகோளப்படம் இருந்தது. அவர்கள் சண்டை போட்டுக்கொண்டனர்; சீழ்க்கை அடித்தனர்; பூட்ஸால் தரையில் தாளம் போட்டனர். இதைப்பற்றி அவள் கவலைப்படவே இல்லை. ஈக்கள் இடைவிடாது பாடின. கதவுகள் கிரீச்சிட்டன. சிப்பாய்கள் உள்ளே வந்தனர்—வெளியே போயினர். கனமான மூடுபனித் திரையைக் கிழித்துக் கொண்டு இவை அவளுக்குக் கேட்டன. அவள் தேகம் தளர்ந்து, விறைத்திருந்தது.

பாலையில் அவள் கலங்கினாள். திராக்ஷைச் செடிகளால் மறைக்கப்பட்ட கொட்டகையில் ஒரு சொட்டு ஜலம் கூட இல்லாமல் இருக்கலாம். சிறுவர்கள் ஆசையுடன் அன்னீஸாவின் வருகையை எதிர் பார்ப்பார்கள். இங்கே என்ன நடக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளமுடியாது. கிழவி தங்களை மறந்துவிட்டாள், அவள் நடப்பதற்குச் சோம்பல் படுகிறாள் என்று அவர்கள் நினைக்கலாம்......

அவள் துயில் எழுந்தாள். அறையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டாள். அறை நிறைய ஜெர்மானியர் இருந்தனர். கதவுக்கு அருகில் அவர்கள் கூட்டமாக நின்றனர். சிலர் கதவுக்கு முன்னே முன்னும் பின்னும் நடந்தனர். ஒரு காவற்காரன் கதவுக்கு முன்னே நின்றான். அவர்கள் கண்ணில் படாமல் வெளியே செல்ல முடியாது. முனகிக் கொண்டே அவள் கீழே இறங்கினாள்.

“நீ எங்கே போகிறாய்?”

திடீரென்று துவிபாஷகன் மாயமாக அவள் முன் தோன்றினான்.

தன் கைத்தடியால் கோபத்துடன் அவள் துவிபாஷகனைத் தள்ளினாள்.

"விளையாடாதே......சில சமயங்களில் நான் வெளியில் செல்ல வேண்டும். தெரிகிறதா?......"

அவன் பின் வாங்கினான். ஆனால், அவள் வெளியில் சென்றதும் துவிபாஷகன் தன்னைப் பின் தொடர்வதை அவள் கண்டாள். அவள் தோளைச் சுருக்கினாள்.

"வேடிக்கைதான்! ஜெர்மானியர் கிழவியைக்கண்டு அஞ்சுகின்றனர்......நான் கிழவியானாலும், என்னால் சில வேலைகளைச் செய்யமுடியும் என்பது வெளிப்படை. என்னைப் பின் தொடர்! விடாது பின் தொடர்!......"

அவள் வீடு திரும்பினாள். மீண்டும் அடுப்புக்கு மேலே இருந்த தட்டில் ஏறிப் படுத்துக் கொண்டாள். அந்த இரண்டு சிறுவர்களைப் பற்றி அவள் கவலைப்பட்டாள். கவலை அவள் ஹிருதயத்தை அறுத்தது.

"நடாஷா காட்டுக்குச் சென்றிருக்கலாம். நான் கிழவி......பிறர் கண்ணில் படாமல் வெளியில் செல்லுவது அசாத்தியமாக இருக்கும்பொழுது, அவர்கள் என்னை இடைவிடாது பின் தொடரும் பொழுது நான் என்ன செய்யமுடியும், மகனே! நான் அவ்வளவு பெரியவளா? நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்யவேண்டும்?"

நீண்ட நேரம் அவள் பெருமூச்செறிந்து கொண்டே படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள்.

இறுதியில் அவள் தூங்கினாள். உடனே அவர்களைக் கனவில் கண்டாள். அவர்கள் குடிக்க ஜலம் கேட்டனர்; ஜலம் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்டனர். ஆனால்,

கொட்டகையில் ஒரு சொட்டு ஜலம்கூட இல்லை. அவர்கள் அவளைக் கூவி அழைத்தனர்; பாட்டி அன்னீஸாவை அழைத்தனர். ஆனால், அவள் வரவில்லை. ஒரு செம்படை வீரனின் தலையில் கட்டியிருந்த கட்டு நகர்ந்தது. அதைச் சீர்படுத்த அங்கே யாரும் இல்லை. பாட்டி அன்னீஸா தன் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அவர்கள் நடாஷாவிடம் கூறினர். நடாஷா அவளை அச்சுறுத்தினள். தான் நினைப்பதை அவள் கடுமையாகச் சொன்னள். அம்மா! அவள் எவ்வளவு கடுகடுப்பாகப் பேசுகிருள்? பாட்டியின் முதிர்ந்த கண்களில் கண்ணீர் நிறைந்தது! அவர்கள் திக்குகள் எட்டும் கிடுகிடுக்கும்படி கூச்சலிடு கிருர்கள்; ஜலம் வேண்டுமென்று கதறுகிருர்கள்! அவர்கள் உரத்த குரலில் கூவியதால், அன்னீஸா திடுக் கிட்டு எழுந்தாள். ஏதோ ஆபத்து நேரப்போவதாக அவள் நினைத்தாள். அவள் கீழே எட்டிப்பார்த்தாள். ஆம்; அவள் கனவு கண்டாள்!

அதிகாரிகள் மேஜையைச் 'சுற்றி மெத்தையிலும், நாற்காலிகளிலும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்னே சிப்பாய்கள் மீது சாய்ந்துகொண்டு நின்றனர் கொட்டகையிலிருந்த செம்படை வீரர்கள். பல வருடங் களாகத் தன் கண்களை மறைத்த திரை திடீரென்று மறைந் ததை உணர்ந்தாள் கிழவி. அவள் எல்லாவற்றையும் தெளிவாகக் கண்டாள்; பல வருடங்களாகக் கண்டதை விட மிகத் தெளிவாக அனைத்தையும் கண்டாள். தலையிலும், கைகளிலும், கால்களிலும் கட்டுகள்; இளம் முகங்களில் கரிய ரோமங்கள்! அவர்கள் கண்கள் சுடர்விட்டு எரிந் தன. அன்னீஸா எழுந்தாள். கூச்சல் போடாமல் இருப் பதற்காக அவள் கைகளை இறுக மூடியதால் நகங்கள் அவள் உள்ளங்கையை அறுத்தன.

கர்னல் மத்தியில் உட்கார்ந்திருந்தான். அவன் அசைந்த பொழுது சுவரில் தெரிந்த பூதாகாரமான நிழலும் அசைந்தது. சிறிய விளக்கு அறையில் எரிந்தது. காயம் அடைந்த சிப்பாய்களுக்கு அருகில் நின்றான் துவிபாஷகன். கர்னல் தன் பாஷையில் ஏதோ கேட்டான் உடனே துவிபாஷகன் கனத்த குரலில் அதை ரஷிய மொழியில் சொன்னான்:

" நீ எந்த யூனிட்டைச் சேர்ந்தவன் ? "

அவளுக்கு எல்லாம் தெளிவாகக் கேட்டது. பல வருடங்களாக அவள் காதுகளை அடைத்திருந்த அடைப்பு அகன்றது. ஒவ்வொரு வார்த்தையும் அவள் காதுகளில் கணீரென்று ஒலித்தது.

அவள் தட்டில் இருந்தாலும் காயம் அடைந்த செம்படை வீரர்களின் நெடுமூச்சு அவளுக்குக் கேட்டது. மூச்சுவிடுவதற்காக அவர்கள் அடிக்கடி உலர்ந்த அதரங்களைத் திறந்தார்கள். அவர்கள் சிரமத்துடன் மூச்சு விடுகிறார்கள் ! அவர்கள் தள்ளாடினார்கள். ஆனால், ஜெர்மன் கரங்கள் அவர்களை உறுதியாகப் பற்றின.

" நீ எந்த யூனிட்டைச் சேர்ந்தவன் ?"

அவர்கள் பதில் சொல்லவில்லை. கோபத்துடன் கர்னல் மேஜைமீது குத்தினான்.

" இவர்களை உபசரிக்க எனக்கு நேரமில்லை என்பதை இவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிடு. பேசுவது நல்லது என்பது என் உபதேசம். இவர்களைப் போன்றவர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது எனக்குத் தெரியும். இவர்கள் எந்த யூனிட்டைச் சேர்ந்தவர்கள், அந்த யூனிட் எப்பொழுது இங்கே இருந்தது, அது எங்கே போயிற்று எங்கிருந்து வந்தது, இப்பொழுது

2

எங்கே இருக்கிறது, எந்த யுத்தத்தில் ஈடுபட்டது, கிராம வாசிகள் எங்கே இருக்கிறார்கள் என்பதை விபரமாகச் சொல்ல வேண்டும்! அவ்வளவுதான். கேள்!"

அவன் குரல் அச்சுறுத்தும் தோரணையில் இருந்தது. இது அன்லீஸாவுக்குத் தெரிந்தது. அவள் ஹிருதயம் வெடித்து விடும் போன்றிருந்தது. அவள் நெஞ்சு வேகமாக அடித்தது. அவ்வளவு வேகமாக அவள் நெஞ்சு பல வருடங்களாக அடித்ததில்லை. அவள் ஹிருதயத்தை அறுக்கும் துன்பம் மேஜையைச் சுற்றி இருப்பவர்களுக்குத் தெரிந்து விடுமென்று அவள் பயந்தாள். ஆனால், யாரும் அவள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. சிப்பாய்கள் மீது சாய்ந்து கொண்டிருந்த அந்த இரண்டு நோயாளிகளை எல்லோரும் உற்றுப் பார்த்தனர்.

"நீ எந்த யூனிட்டைச் சேர்ந்தவன்?"

தலையில் காயம் பட்ட செம்படை வீரன் நெடு மூச்சு விட்டான். நடுங்கிக் கொண்டே அவன் சொல்லப் போவதைக் கேட்கத் தயாரானாள் அன்லீஸா.

"நான் சொல்ல மாட்டேன்!"

"நீ சொல்ல மாட்டாயா? ஹான்ஸ்! பேச இவனுக்கு உதவி புரி! இவனால் பேச முடியவில்லை. இவனுக்கு உதவி புரி!"

தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி செம்படை வீரன் முகத்தில் குத்தினான் ஜெர்மன் சிப்பாய். ரத்தக் கறை தோய்ந்த காயக் கட்டு கீழே விழுந்தது. ஆனால், பெரு முயற்சியுடன் தன்னைச் சமாளித்துக் கொண்டான் செம்படை வீரன்:

"நான் சொல்ல மாட்டேன்!"

"ராணுவம் எங்கே?"

"எனக்குத் தெரியாது!"

"உனக்குத் தெரியாதா? ஹான்ஸ்! ஞாபக சக்தியைப் பெற இவனுக்குத் துணைபுரி! இவன் ஞாபக சக்தியைப் புதுப்பித்துக் கொடு! இவன் விஷயத்தை மறந்து விட்டான், பாவம்!......ஆனல், விஷயத்தை நினைவிற்குக் கொண்டு வர நாம் இவனுக்கு உதவி புரிவோம்! விஷயத்தை இவனுக்கு ஞாபக மூட்ட நம்மால் கூடுமானதையெல்லாம் செய்வோம்......"

மீண்டும் இரண்டு அடிகள்! முகத்திலிருந்து ரத்தம் பெருகி ஓடிற்று. கூச்சலிடுவதைத் தடுக்க அன்னீஸா பெரு முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

"கிராம வாசிகள் எங்கே?"

"எனக்குத் தெரியாது......நான் யாரையும் பார்க்கவில்லை" என்று அவன் துடுக்காகக் கூறினன்.

கோபத்தால் துடித்த கர்னல் மேஜைமீதிருந்த தஸ்தாவேஜிகளைக் கசக்கினன்.

"இவன் யாரையும் காணவில்லை, ஹான்ஸ்!......இவன் யாரையுமே பார்க்கவில்லை......ஹான்ஸ்! நடந்ததைக் காண இவனுக்கு உதவி செய்! தெரிகிறதா? நடந்ததைத் தெளிவாகக் காண இவனுக்கு உதவி செய்!......"

செம்படை வீரன் தரையில் விழுந்தான். அன்னீஸா எழுந்து உட்கார்ந்தாள். இது நடக்காது! முதிர்ந்த அவள் கண்கள் அவளை ஏமாற்றுகின்றன! சிப்பாய் குத்துவாளை எடுத்தான். விழுந்து கிடக்கும் செம்படை வீரன் மீது இருவர் உட்கார்ந்தனர். ஹான்ஸ் ஜாக்கிரதையாக செம்படை வீரனின் இடது கண்ணைக் குத்து

வாளால் குத்தினான்! மனிதத் தன்மை சிறிது மற்ற குரல் காற்றில் கலந்தது. உடனே, அது நின்றது.

"ராணுவம் எங்கே?"

"எனக்குத் தெரியாது.........நான் சொல்ல மாட்டேன்...நான் எதையும் சொல்ல மாட்டேன்..." என்று முரட்டுத் தனமாகக் கூறினான் செம்படை வீரன். இடது கண்ணிலிருந்து ரத்தம் பெருகி ஓடிற்று. வாயிலிருந்தும் ரத்தம் வந்தது. கர்னல் நாற்காலியிலிருந்து எழுந்திருந்து இறந்து கொண்டிருக்கும் செம்படை வீரனை அணுகினான். ஆசைக் குறி அவன் முகத்தில் தென்பட்டது. அசையாது கிடந்த தேகத்தை அவன் மிதித்தான்.

"அவன் பேசத் தயாரா என்று கடைசி முறையாகக் கேட்டு விடு."

தரையில் கிடக்கும் மனிதனுக்கு அருகில் உட்கார்ந்தான் துவிபாஷகன். காயம் அடைந்த வீரன் தொண்டையில் ரத்தம் சலசலவென்று ஓடும் சத்தம் அன்னீஸாவுக்குக் கேட்டது. இந்தப் பயங்கரமான சத்தத்திற்கு மத்தியில், வேதனைக்கும், முனகலுக்கும் இடையில், அவன் விட்டு விட்டுச் சொன்ன வார்த்தைகள் அன்னீஸாவுக்குத் தெளிவாகக் கேட்டது.

"தோழர்களே...அணிவகுத்து நில்லுங்கள்...இது முடிவான போர்...நாம்......"

"என்ன? என்ன? அவன் என்ன சொல்லுகிறான்?" என்று அவனுடன் கேட்டான் கர்னல்.

"ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லை என்று சொல்லுவதன் அர்த்தமென்ன? அவன் என்னமோ சொன்னான்......"

"அர்த்தமற்ற எதோ சொன்னான்......"

"அவனைக் கொன்று விடு" என்று கட்டளையிட்டான் கர்னல்.

சிப்பாய் குத்து வாளை ஓங்கினான்.

" இங்கே வேண்டாம், வெளியே எடுத்துச் செல்" என்று கூச்சலிட்டான் கர்னல்.

அசையாது கிடந்த தேகத்தை ஜெர்மன் சிப்பாய் இழுத்துச் சென்றான். செம்படை வீரனின் கால்களிலிருந்து ரத்தம் பெருகுவதையும், அறை முழுதும் ரத்தக் கறை தோய்ந்திருப்பதையும் அன்னிஸா கண்டாள்.

கையால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவள் உட்கார்ந்திருந்தாள். கரிய நிழல்கள் சுவரில் நர்த்தனமாடின; பூட்ஸ் அணிந்த கொடிய பாதங்கள் அறையை அசுத்தப் படுத்தின. இரண்டாவது செம்படை வீரன் மேஜைக்கு முன்னே நின்றான். அவன் கால்கள் தள்ளாடின. ஜெர்மன் சிப்பாய்களின் முரட்டுக் கரங்கள் அவனைத் தாங்கின.

" அவனிடம் கேள்வி கேள் ! "

அன்னிஸா மெத்தையில் தலையைப் புதைத்துக் கொண்டாள். அவர்கள் பேச்சைக் கேட்கக் கூடாது என்பதற்காக அவள் காதைப் பொத்திக் கொண்டாள். நடப்பவைகளைப் பார்க்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவள் கண்களை மூடிக் கொண்டாள். தொண்ணூறு வருடங்கள், தொண்ணூற்றி ஒன்று வருடங்கள் இழுத்துக் கொண்டு நின்ற தன் வாழ்க்கையை அவள் சபித்தாள்; இந்த இரவு வரையில், இந்தப் பயங்கரமான இரவு வரையில் உயிர் வாழ நேர்ந்ததற்காக அவள் வருந்தினாள்! அவள் கண்கள் அது வரையில் பார்வையை இழக்காமல்

இருந்ததற்காகத் தன் கண்களைச் சபித்தாள் அன்னிஸா. அவள் குருடாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவள் குருடாக இருந்திருந்தால் இந்தக் காட்சியைக் காண நேர்ந்திராது! தன் காதுகளை அவள் சபித்தாள். உரிய காலத்தில் அவள் செவிடாக இருந்திருந்தால் இந்தப் பேச்சை அவள் கேட்டிருக்க மாட்டாள்.

அவள் காதுகளைப் பொத்திக் கொண்டிருந்தாலும் முனகல் சத்தம் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது. அதே வார்த்தைகள் மீண்டும் அவளுக்குக் கேட்டன!

"எனக்குத் தெரியாது! நான் சொல்ல மாட்டேன்!"

எங்கும் அமைதி! ஆனால், வெகு நேரம் வரையில் அவள் எதையும் பார்க்கத் துணியவில்லை. பிறகு, அவள் எட்டிப் பார்த்தாள். ஜெர்மானியர் பூட்சுகளையும், உடைகளையும் கழற்றினர். அவர்கள் படுக்கப் போகிறார்கள். அவர்கள் ஜன்னல்களையும் கதவையும் தாளிட்டார்கள். சிப்பாய்கள் வீட்டுக்கு வெளியில் படுத்தனர். காவற்காரன் முன்னும் பின்னும் நடந்தான். எனினும் அதிகாரிகள் யாரையும் நம்பவில்லை. கர்னல் கதவும் ஜன்னல்களும் ஒழுங்காகத் தாளிடப்பட் டிருக்கின்றனவா என்பதைப் பரிசோதனை செய்தான். கிழவி தூங்குகிறாளா என்பதை அறிய அவன் தட்டைப் பார்த்தான்.

அன்னிஸா கண்களை மூடினாள். அவள் முறையாக மூச்சு விட முயன்றாள்.

விளக்கு அணைக்கப்பட்டது. தன் கால்களும், கைகளும் விறைப்பதை அவள் உணர்ந்தாள். அவள் கைகளையும், கால்களையும் ஏதோ அழுத்திற்று.

அவள் காத்திருந்தாள். காலம் மெதுவாக ஊர்ந்தது! அறையில் இருள் சூழ்ந்திருந்தது. காலம் நகர

மறுப்பதாக அவள் நினைத்தாள். அன்னீஸாவின் கைகளும், கால்களும் விறைத்தன. வியர்வை முத்து முத்தாக வடிந்தது. எனினும், அவள் அதைச் செய்து தான் தீர வேண்டும்!

சிலர் குறட்டை விட்டனர். ஓசைப்படாமல் அன்னீஸா அடுப்பின் மீது உட்கார்ந்தாள். இருளில் தன்னை அவர்கள் கண்டு பிடிப்பார்கள் என்றும், அவள் அசைவது அவர்களுக்குக் கேட்கு மென்றும் அவள் நினைத்தாள். ஆனால், ஜெர்மானியர் அயர்ந்து தூங்கினர். குறட்டைச் சத்தம் அறையை நிறைத்தது. மெத்தையில் கர்னல் படுத்திருந்தான். அவள் ஜாக்கிரதையாக ஒரு காலைக் கீழே வைத்தாள். அவள் காத்திருந்தாள். யாரும் அசையவில்லை. பிறகு, இன்னொரு காலையும் கீழே வைத்தாள். அதுவரையில் எல்லாம் ஒழுங்காக நடந்தன. அவள் நெஞ்சு பறை அறைந்தது. அந்தச் சத்தம் அவர்களை எழுப்பாமல் இருந்தால்! அது அவர்களை எழுப்பாது, ஏனெனில், அவர்கள் ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து கிடந்தனர். தளர்ந்த சிப்பாய்கள் அயர்ந்து தூங்குகிறார்கள்! இருளில் தடவிக் கொண்டே அன்னீஸா கதவை நோக்கி நடந்தாள். அவள் மூச்சை அடக்கிக் கொண்டு கதவைப் பூட்டிவிட்டு, சாவியைப் பூட்டிலிருந்து எடுத்தாள். பிறகு, பலகணிகளை நன்றாக மூடினாள். அந்த வீங்கின, நடுங்கும் கைகளுக்கு எங்கிருந்து பலம் வந்தது! இப்பொழுது கதவும், ஜன்னல்களும் இறுக முடுக்கப் பட்டன. இனி யாரும் உள்ளே வர முடியாது; அதிகாரிகளை யாரும் எழுப்ப முடியாது!

அவள் சிறிது நேரம் காத்திருந்தாள். பிறகு, அவள் பெஞ்சுக்குக் கீழே தடவினாள். ஆம்; சீசா அதே இடத்தில் இருந்தது. அது நிறைந்திருந்தது. சமீபத்தில் தான் நடாஷா அதை அங்கே வைத்தாள். சீசா நிறைந்திருந்தது!

அன்னிஸா அடைப்பை எடுத்தாள். சத்த மின்றி கர்னலின் காலுக்குக் கீழே இருந்த வைக்கோலில் கொஞ்சம் மண் எண்ணெயை ஊற்றினாள். பிறகு நிதான மாக அவள் தரையில் மண் எண்ணெயை ஊற்றினாள்.

உத்திரங்கள் காய்ந்திருந்தன; மரச் சுவர்களும், தரை யும் காய்ந்திருந்தன. அந்த வீடு கட்டி எத்தனை வருடங் கள் ஆகின்றன? பலகைகள் வைக்கோலைப் போன்று காய்ந்திருந்தன. ஆம்; வைக்கோல்—வைக்கோல்... அவள் வைக்கோல் மெத்தைகள் மீதும் மண் எண்ணெயை ஊற் றினாள்.

நடுங்கும் விரல்கள் தீப்பெட்டியைத் தேடின. அடுப்புக்கு மேலே தீப்பெட்டியை அவள் வைப்பது வழக்கம். தீப்பெட்டி அங்கே இருந்தது!......

மெத்தையால் தலையை மூடிக் கொண்டு அவள் தீக் குச்சியை உரைத்தாள். அந்தச் சத்தம் குண்டுச் சத்தத்தை விட அதிகமாக இருப்பதாக அவள் நினைத்தாள். ஆனால், குடிசையில் பரிபூரண அமைதி நிலவிற்று. தளர்ந்த சிப்பாய்கள் குறட்டை விடும் சத்தம் மாத்திரம் தான் அவளுக்குக் கேட்டது. அவள் குனிந்து நாற் புறமும் தீ வைத்தாள். அதற்குப் பிறகு அவளால் நிமிர முடியவில்லை. நாளத்திலே பாம்பு பாய்வதைப் போன்று தீ எங்கும் பாய்ந்தது.

அவள் தீயை உற்றுப் பார்த்தாள். தன் பாவாடை பற்றி எரிவது அவளுக்குத் தெரியவே இல்லை!

கூவிக் கொண்டே ஒரு அதிகாரி விழித்து எழுந்த பொழுது வீடு முழுதும் தீப்பற்றி எரிந்தது. நிராசை யுடன் யாரோ கதவைத் தட்டினர்.

அன்னிஸா சிரமத்துடன் எழுந்து நின்றாள். மறு கணம் அவள் தீயில் விழுந்தாள். கதவும் ஜன்னலும் திறந்திருக்கக் கூடாது; யாரும் வெளியேற முடியாத வாறு அவை இறுக மூடிக்கப் பட்டிருக்க வேண்டும்! இது தான் அவள் கடைசி ஆசை!

கல்லறை

[அனடோல் ஃபிரான்ஸ்]

ஸராபூ வீட்டுக்கு முன்னே இருந்த பூவரசு மரங்கள் காற்றில் துக்கத்துடன் கிறீச் சென்று ஒலித்தன. பேயா மழை பெய்து கொண்டிருந்தது. மரக் கிளைகளில் இருந்த காகங்கள் சிறகடித்துக் கொண்டு பரிதாபகரமாகக் கத்தின. ஓடு வேயப்பட்ட கூரை நனைந்திருந்தது. மரங்களி லிருந்த இலைகள் எல்லாம் உதிர்ந்து விட்டன. வெண்மை யாக விளங்கின ஓடுகள் மீது அவை கறையைப் போன்று விழுந்து கிடந்தன. ரீகா குடாக் கடலிலிருந்து வீசின பேய்க் காற்று உறுமிக் கொண்டே மர வீடுகளைத் தாக் கிற்று. அங்கங்கே ஒட்டிக் கொண்டிருந்த பனிக் கட்டி களை அது பூமியில் இழுத்துச் சென்றது. அது செம்மறி ஆட்டுக் கூட்டம் வீதியில் நடப்பதைப் போன்றிருந்தது. அழுக்குப் படிந்த வீதியில் தேங்கி நின்ற ஜலத்தை அது கலக்கிற்று. குட்டைகளில் தேங்கி நின்ற ஜலம் ஸராபூ வீடு வழியாக ஓடிற்று.

உழவு சாலைப் போன்று காட்சி அளித்த வீதி மரத் தொழிற்சாலை யிலிருந்து, தேவதாரு மரங்கள் நிறைந்த காட்டிலிருந்து ஆரம்பமாகிறது. அது ஆக்கென் பெர்க் பிரபுவின் மாளிகையைக் கடந்து பள்ளத் தாக்கில் இருக் கும் தொழிலாளர் குடிசைகளை அடைகிறது. சிலேட்டு களால் வேயப்பட்ட தொழிலாளர்களின் வீடுகள் மூடுபனியில் விசனகரமாகக் காட்சி அளித்தன.

வீதி பள்ளத்தைக் கடந்து பரந்த புல் வெளியை அடைந்தது. அப்பொழுது அது ஜலத்திலிருந்து தோன்றி னதைப் போன்று இருந்தது. குத்தகைக்காரன் ஸாபூ வின் வீட்டுக்கு அருகில், தனியே நின்ற பூவரசு மரத்தை நோக்கித் திரும்பிற்று வீதி. காற்று தேவதாரு மரத்தைக் குலுக்கிற்று. காற்று ஓய்ந்ததும் மரம் தளர்ந்தது. இலை களற்ற கிளைகள் பற்றின்றித் தொங்கின. கல்லறையின் மீது நட்டிருந்த மரச்சிலுவையை, அசைந்தாடின கிளைகள் ஆர்வத்துடனும், அன்புடனும் சீராட்டின. பழுக்கக் காய்ச்சின இரும்பால் யாரோ சிலுவையில் சுருக்கமாகப் பொறித்திருக்கிறார்கள் :

> "எஸ்தோனியாவின் விடுதலைக்காக 1941 ஆம் வருடம் ஜூலை மாதம் மடிந்த தினம் தெரியாத ரஷிய சிப்பாய் இங்கே புதைக்கப் பட்டான். அவன் பெருமையும் நினைவும், என் றென்றும் நிலைத்திருக்கட்டும்."

கல்லறையை உலர்ந்த புற்கள் மூடியிருந்தன. சரத் கால இலைகள் அதன் மீது விழுந்து கிடந்தன. அவை காற்றிலும், மழையிலும் சலசலத்தன—தாழ்ந்த குரலில் பேசின.

கல்லறைக்கு அப்பால் மழையிலும், மூடு பனியிலும் வீதி மறைந்தது. நார்வா ரோடில் கலக்கும் இடத்தில் தான் அது மீண்டும் தெரிகிறது. வீதிக்கு அப்பால் இருந்த இருள் சூழ்ந்த தேவதாரு மரத் தோப்பைக் கனமான மூடு பனித்திரை மறைத்தது. ஒரு ஓப்பல் மோட்டார் தோப்பிலிருந்து வெளியில் வந்து நார்வா வீதியை அடைந் தது. மேடு பள்ளங்கள் நிறைந்த பாதையில் பெண் தாரா வைப் போன்று ஊர்ந்தது மோட்டார். ஆனால், வீதி நல்ல நிலைமையில் இருந்த இடங்களில் அது காற்றாகப் பறந்தது.

சேறு நிறைந்த குட்டைகளி லிருந்து மோட்டார் சக்கரம் பட்டு நாற் புறமும் தெறித்த ஜலம் அறுந்த சிறகு துடிப்பைப் போன்றிருந்தது. மோட்டாரின் அசைவு தீமையின் அறிகுறி. பூவரசு மரத்தருகில் மோட்டார் திடீரென்று நின்றது.

வயது முதிர்ந்த கூனன் மோட்டாரி லிருந்து ஆபாசமாகக் கீழே இறங்கினன். அவன் பூட்ஸ் பட்டு சேறு நாற் புறமும் தெறித்தது.

அவன் ஆந்தைக் கண்கள் கல்லறையைக் கண்டன. வியப்புக் கலந்த கோபத்துடன் அவன் கூவினன் :

"அக்கிரமம் !"

நசுக்கப் பட்ட பூச்சிகளைப் போன்று கோழிக் குஞ்சின் வெண் இறகுகள் கூனனுக்கு அருகிலிருந்த சேறில் சிதறிக் கிடந்தன. தாரில் தோய்த்து எடுக்கப் பட்ட வைக்கோல் காற்றில் சலசலத்தது. மஞ்சள் பூவரசு இலைகள் ஜலத்தில் மிதந்தன.

மெல்லிய பிரம்பில் சாய்ந்து கொண்டு கூனன் கல்லறையைப் பார்த்தான். அவன் கூன் விழுந்த முதுகு நடுங்கிற்று. திடீரென்று காற்று பொத்தான் போடப்படாத கோட்டைப் பற்றி இழுத்தது. தன் தொப்பியைக் கையால் பிடித்துக் கொண்டு அவன் டிரைவர் பக்கம் திரும்பினன்.

"ரூடால்ப்! குத்தகைக்காரனைக் கூப்பிடு...அவன் உயிருடன் இருந்தால்" என்று நடுங்கும் குரலில் கூறினன்.

மெலிந்த மழைக் கோட்டு அணிந்த மனிதன் மோட்டாரிலிருந்து கீழே இறங்கினன். அவன் ஒளி வீசும்

ஓடு வேயப்பட்ட வீட்டை நோக்கி ஓடினான். பாதி வழியில் சேறு நிறைந்த உழப்பட்ட வயலில் சபித்துக் கொண்டே இறங்கினான். அவன் குத்தகைக்காரனின் வீட்டுக்குப் போகிறான்.

இருண்ட முகப்பில் உட்கார்ந் திருந்தான் குத்தகைக்காரன். புகை குடித்துக் கொண்டே அவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். வெளிச்சத்தை மனிதன் உருவம் மறைத்ததும் அவன் நிமிர்ந்து பார்த்தான்.

கிழவன் ஸராபூவின் மிருதுவான கன்னங்கள் நடுங்கின. மிரள மிரள விழித்துக் கொண்டே கோடாலி யையும், மரத் துண்டையும் கீழே வைத்தான். பிறகு அவன் மெதுவாக எழுந்து நின்றான். தேவதாரு மரச் சிராய்கள் பிஸ் கெட்டைப் போன்று அவன் கால் பட்டு நொறுங்கின.

கேலியாக டிரைவர். தொப்பியை உயர்த்தினான்.

"என்னைத் தெரிகிறதா?" என்று அவன் கிண்ட லாகக் கேட்டான். அவன் சிவப்பு மீசை துடித்தது. அவன் நடத்தையிலும், குரலிலும் விஷமம் தொனித்தது.

"நீ பெரியவனென்று நினைக்கிறாயா, திருட்டுப் பயலே!" என்று வெறுப்புடன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான் ஸராபூ. கோழிக் குஞ்சு சிறகு அடிக்க ஆரம்பித்தால் அது நல்ல லக்ஷணமல்ல. அது விரைவில் பருந்துக்கு இரையாகும் என்பது இதன் பொருள்!" பிறகு அவன் புன்னகை புரிந்தான்.

"உன்னைத் தெரியாமல் இருக்குமா!" இறகைக் கொண்டு பறவையைக் கண்டு பிடித்து விடலாம்; நாற்றத் தால் சாணத்தைத் தெரிந்து கொள்ளலாம்......"

ஒளி இழந்த டிரைவரின் கண்கள் கோபத்தால் சுழல் வதை ஸராபூ கண்டான். உதாசீனமான நடத்தையால் தன் கோபத்தை மறைக்க முயன்முன், டிரைவர்.

"கேள் இடையா!" என்று அவன் வெறுப்புடன் கூறினன். "ஆக்கென் பெர்க் பிரபு ஜெர்மனியிலிருந்து திரும்பி விட்டார். பிரபு உன்னைக் காண விரும்புகிருர். மோட்டாரில் அவர் இருக்கிருர்......"

கிழவனைக் குறும்புத் தனமாகப் பார்த்தான் டிரைவர். பிறகு சட்டைப் பையிலிருந்து சிகரெட்டை எடுத்து அதைக் கொளுத்தினன். மூக்கு வழியாகப் புகையை விட்டுக் கொண்டு அவன் வீட்டிலிருந்து வெளியேறினன்.

ஸராபூ வெளிறினன். இந்தச் செய்தியை அவன் எந்த நிமிடத்திலும் எதிர் பார்த்தான். ஆனல், இந்த சந்திப்பைப் பற்றி நினைக்க அவன் மனம் மறுத்தது. அவன் உள்ளத்தில் நம்பிக்கை பிறந்தது. எல்லாம் ஒழுங்காக முடியும் என்னும் நம்பிக்கை அவன் மனதில் இடம் பெற்றது. விரிந்த தோள் படைத்த அந்த மனிதன் வாசற் படியைக் கடக்கும் பொழுது குனிந்தான். மூடு பனிக் கிடையே தீமையே உருவெடுத்த கூனனின் கரிய வடிவம் அவனுக்குத் தெரிந்தது. அவன் நடுங்கினன்......

டிரைவருக்குப் பின்னே நடந்த ஸராபூ அவன் குறு கின முதுகை விரோதத்துடன் பார்த்தான். அவன் மழைக் கோட்டிலிருந்து ஜலம் வடிந்தது. கோட்டு அவன் தேகத் திலிருந்து கீழே விழுவதாக ஸராபூ நினைத்தான். அது தார் பூசப் பட்ட கோட்டு என்பது ஸராபூ முடிவு. எந்த நிமிடத்திலும் மழை தாரைக் கழுவலாம். பிறகு அவன் கண் முன்னே நத்தையைப் போன்ற ஒரு உருவம் தோன்றும். ஸராபூ காறி உமிழ்ந்தான்.

"கீழ்த்தரமானவர்கள் ஜெர்மானியரைச் சுற்றி நிற்கிறார்கள்...? என்று ஸராபூ தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

வானம் அவனை பூமியில் அழுத்துவதைப் போன்று அவன் குனிந்து நடந்தான். திருப்தியுடன் ஆக்கென் பெர்க் பிரபு ஊரை விட்டு ஓடினதை அவன் எண்ணினான்.

எஸ்தோனிய சோவியத் குடியரசு ஸ்தாபிக்கப் பட்ட மூன்றாவது நாள் அது நடந்தது. சூரிய அஸ்தமனத் திற்குப் பிறகு ஜனங்கள் பண்ணையில் கூடினார்கள். தெளிர்ந்த வேனிற் காலக் காற்று அப்பொழுது குளிர்ந் திருந்தது. மாலைக் காற்று குன்றின் மீது வீசிற்று. அங்கே பிரபுவின் மரத் தொழிற் சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் இருந்தார்கள்; விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் ஆர்வத்தால் தூண்டப் பட்ட கிழவிகள் இருந்தார்கள்; சர்வ வியாபகமான சிறுவர்கள் இருந்தார்கள்; மகிழ்ச்சி அளிக்கும் அந்தக் காலத்தைக் குடித்துக் கொண்டாடின வயதானவர்கள் இருந்தார்கள்; தொழிலாளர்களும் கூலிக்கு வேலை செய்யும் விவசாயிகளும் குழுமி இருந்தார்கள். விலங்கு களும் அங்கே கூட்டம் கூட்டமாக இருந்தன. குதிரை லாயத்திற்கு அருகில் யஜமானனின் நாயைக் கண்டதும் அவைகள் நின்றன. பயத்தால் அவைகளின் ரோமங்கள் குத்திட்டு நின்றன. பிறகு, தாம்பூ சீழ்க்கை அடித்தான். பிரபுவின் மாளிகையின் ஜன்னல்கள் அந்தச் சத்தத்தால் குலுங்கின. ஜனங்களின் சிரிப்பும், நாயின் ஊளையும் காற்றில் தவழ்ந்து சென்றன.

குத்தகைக்காரன் ஸராபூவும், தொழிலாளி பெண்டும் நந்தவனத்திற்கு அருகில் நின்றனர். தேவதாரு மரத்தில் சாய்ந்து கொண்டு நின்றான் ஸராபூ. மரக் கிளைகள்

அவன் தலைக்கு மேலே குடையைப் போன்று விரிந்து தொங்கின. வெளிறின அந்தி வானத்தின் பின்னணியில் அவை கறுப்பாகக் காட்சி அளித்தன. ஒரு நட்சத்திரம் வானத்தில் மின்னிற்று. மரத்தின் துளிர்களிலிருந்து அது பிறந்தது போலும். துளிர்கள் அதைப் பிடித்து விட்டன போலும். அது மின்னிக் கொண்டு அங்கே உல்லாசமாகத் தொங்கிற்று......

விவசாயியின் அதரத்தில் புன்னகை பூத்தது. அது திருப்தியில் பிறந்த புன்னகை.

"ஜனங்கள் ஆட்டுத் தோல் சட்டையைப் போன்றவர்கள். இவ்வளவு காலம் கம்பளியை வெளியே வைத்திருந்தோம். நாம் குளிரால் நடுங்கினோம்; பிறரைக் குளிரால் நடுங்கச் செய்தோம். இப்பொழுது வாழ்க்கை நிலைமையைத் தலை கீழாக மாற்றி விட்டது. இப்பொழுது வாழ்க்கை கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. குளிர் ஓடி மறைந்து விட்டது........."

மோட்டார் மெதுவாக வந்தது. ஜனக் கூட்டத்தில் சிக்கிக் கொண்டதைப் போன்று அது வாசலில் நின்றது. தாம்பூ, மோட்டாரை அணுகி அதில் உட்கார்ந்தான். அவன் டிரைவரைப் பார்த்துப் பெருமூச் செறிந்தான்.

"நீ திரும்பி வர மாட்டாயா, ருடால்ப்? நீ வரமாட்டாயா......சரி, சரி...உன் கழுத்தைத் திருக எங்களுக்கு எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும்? நீ சொல்லுவது எனக்குக் கேட்கவில்லை, துரோகி!......நீ கேவலமாகப் பேசுகிறாய், ருடால்ப்! இது நல்லதல்ல."

ஜனங்களின் சிரிப்பை மோட்டாரின் சத்தம் அமுக்கிற்று. ஜனங்களை இருண்ட கண்ணாடி ஜன்னல்கள் வழியாக அந்த வீடு பார்த்தது. சிறு கோபுரங்கள் படைத்த கூரை வானத்தில் கலந்தது......

கூனனைக் கொடிய கரங்கள் தாங்கின......

கூனன் வீட்டிலிருந்து வெளியேறினதும் நந்தவனத்தில் வாண வேடிக்கை ஆரம்பமாயிற்று. ஒருவன் பழைய எஸ்தோனிய பாட்டுப் பாடினன். கடந்துபோன காலம் அவைகளை விறைக்கச் செய்ததைப் போன்று தேவதாரு மரங்கள் தீயை நோக்கிக் கிளைகளை நீட்டின. மரத்தடியில், சதுப்பு நிலத்தில் சிறுமிகள் நடனமாடினர்கள்......

ஸராபூவை அணுகினன் தாம்பூ.

"அரசியல் என்ன செய்கிறது என்பதைப் பார்!" என்று சொல்லிக் கொண்டே அவன் காறி உமிழ்ந்தான். "கூனன் விலை உயர்ந்த பொருள் என்பதைப் போல் அவனைத் தூக்கிச் சென்று விட்டார்கள்......"

தாம்பூவைப் பார்த்துப் புன்னகை புரிந்தான் ஸராபூ. காலமெல்லாம் பிரபுவை வேரறுப்பதைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தான் தாம்பூ. அவன் பெருமூச்செறிந்தான். பிறகு தோப்பில் நுழைந்து இருளில் மறைந்தான்...ஆகாச வெடிகள் எழுப்பின ஒளியில், நனைந்த கிளைகள் படபடத்தன. நெருப்பின் ஜுவாலை இருளைத் துரத்திற்று......

சிந்தனையால் ஸராபூவின் ஹிருதயம் நிறைந்தது. பழைய நினைவுகள் இன்பத்தைத் தூண்டி விட்டன. அந்த இன்பம் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக அவன் மெதுவாக நடந்தான்.

அடர்ந்து வளர்ந்த அவன் வெண் புருவத்தில் மழைத் துளிகள் மின்னின. அவை ஒன்று சேர்ந்தன; கொஞ்ச நேரம் நடுங்கின; பிறகு கிழவனின் வெண் புருவங்கள் உருகி வடிவதைப் போன்று மழைத் துளிகள் தரையில் விழுந்தன.

அவன் சிந்தனை சிதறிற்று. கிழவன் பெருமூச் செறிந்தான். அவன் வீதியை அடைந்ததும் நின்றான்.

“ வந்தனம், சார் ! ”

ரத்த ஓட்டமற்ற பிரபுவின் அதரங்கள் அசைந்தன. ஆனால், எந்த விதமான சத்தமும் ஸராபூவுக்குக் கேட்கவில்லை. அவன் சிறிய தலை அசைந்தது. கூனன் கிழவனைப் பார்த்த பொழுது அவன் பார்வை பருந்தின் பார்வையைப் போன்றிருந்தது. தன் தாத்தாவின் தொப்பியை அணிந்திருந்தான் ஸராபூ. சில இடங்களில் அது கிழிந்திருந்தது. அவன் பழைய சட்டை அணிந்திருந்தான். அவன் பூட்சில் மரத்தூள் ஒட்டிக் கொண்டிருந்தது. ஒரு வருடத்திற்கு முன் “ அடிமை ! ” என்று கூறின கென்பெர்கை ஸராபூ வரவேற்றிருப்பான். ஆனால், அப்பொழுது “ வந்தனம் ! ” என்றான் அவன்.

ஜெர்மானியன் அதரங்களில் துன்பப் புன்னகை பூத்தது. அவன் குரல் கரகரத்தது.

“ நான் உன்னைக் கண்டு வெகு நாட்களாகின்றன, ஸராபூ ! ”

“ ஆம் ! ”

“ நான் திரும்பி வந்து விட்டேன், ஸராபூ. மகிமை பொருந்திய ஜெர்மன் ராணுவம் எனக்கு மீட்டுக் கொடுத்த என் நிலத்தைப் பார்ப்பது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது...... ”

பிரபு பூவரசு மரத்தை உற்றுப் பார்த்தான். அதன் மிருதுவான, பச்சை கலந்த வெண் அடி மரத்தை அவன் இமை கொட்டாது பார்த்தான்.

“ அது தங்கள் உரிமை...... ”

" மோசமான பருவ காலமும், துன்பகரமான செய்தியும் என்னை இங்கே வரவேற்றன, ஸராபூ......"

பிரபுவின் கோபத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டவனைப் போன்று ஸராபூ கையை வீசினான். பிறகு கரடு முரடான குரலில் சொன்னான் :

"நாளைய தினம் பௌர்ணமி. பருவ காலம் நாளை மாறலாம்......"

ஸராபூவின் குரல் மதுரமானது. ஆனால் அப்பொழுது வார்த்தைகள் கூழைப் போன்று மெதுவாக வெளி வந்தன. நல்லெண்ணமோ, அனுதாபமோ அவன் பேச்சில் தொனிக்கவில்லை.

நிமிர்ந்து பார்க்காமலே பிரபு தோளைச் சுருக்கினான். கூன் விழுந்த இடத்திற்கு மேலே கோட்டு சாக்கைப் போன்றிருந்தது.

" பருவ காலத்தைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சுவர்க்கத்திலும், பூமியிலும் இருக்கும் சூனியக்காரிகள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும். நம்மைச் சுற்றி யிருக்கும் நிலம் எனக்குச் சொந்தமானதா என்பது தான் எனக்குத் தெரிய வேண்டும். "

பிரபுவின் முகம் சூன்யமாக இருந்தது; சுருக்கு விழுந்திருந்தது. அவன் புருவம் கண்ணுக்குத் தெரியவில்லை. பிரபு அதரங்களை இறுக மூடிக்கொண்டான். பதிலை எதிர் பார்த்துக் கொண்டு அவன் வலது கண்ணைச் சிமிட்டினான்.

ஸராபூவின் கண்கள் பிரகாசித்தன. அவன் வாயின் ஓரத்தில் சுருக்குகள் தெரிந்தன.

" ஆம் இந்த நிலமெல்லாம் மீண்டும் உங்களுக்குச் சொந்தம். "

பிரம்பால் கல்லறையைத் தட்டினன் பிரபு.

" என் நிலத்தில் நீ இதைச் செய்யவில்லை என்று நினைக்கிறேன். "

ஸராபூ கல்லறையை உற்றுப் பார்த்தான்.

" அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை ! "

" இன்று நீ அந்தக் கல்லறையை இடித்துத் தகர்க்க வேண்டும், சிலுவையைச் சேறில் எறிந்து விடு. "

ஆச்சரியத்தால் புருவத்தை நெறித்தான் கிழவன்.

" நான் சொன்னது கேட்டதா, ஸராபூ ? "

அந்தக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான் கிழவன். வழக்கம் போல் அவன் தலை வணங்கினன்.

" ஆம்...நான் அதைச் சொல்கிறேன்..." என்று அவன் கலக்கத்துடன் கூறினன்.

தோளைச் சுருக்கிக் கொண்டே கூனன் மோட்டாரை அணுகினன். பிரம்பால் வீதியின் மறு பக்கத்தை டிரைவருக்குக் காட்டினன். சாக்கடையிலே துருப்பிடித்த முள் வேலிக் கம்பி கிடந்தது.

" ரஷிய ராணுவத்தின் கடைசிச் சின்னம் !" என்று குறும்புத்தனமாகச் சிரித்துக் கொண்டே கூறினன் பிரபு. " சரிதானே, ஸராபூ ! "

" சரிதான் !......அந்தச் சின்னம்......எனினும் அது முள்..." என்றான் ஸராபூ.

அப்பொழுதும் சிரித்துக் கொண்டிருந்த கூனன் விவசாயி பக்கம் திரும்பினன்.

" விஷயம் இன்னும் முடிந்து விடவில்லை. நிலைமை மாறி விட்டது, ஸராபூ. என்னை நம்பு. வரவிருப்பதை நாம்

எல்லோரும் அனுபவிக்க வேண்டும். நீ விழிப்புடன் இரு. நீ செய்ய வேண்டியது அது தான்!''

விலங்கின் வாயைப் போன்று மோட்டாரின் கதவு சாத்தப்பட்டது. புகையைக் கிளப்பிக் கொண்டே மோட்டார் மாளிகையை நோக்கிப் பறந்தது. மூடு பனியில் அது கண்ணுக்குத் தெரியவில்லை.

சரத்காலக் கானகத்தின் மூச்சை இழுத்துக் கொண்டு வந்த காற்று மைதானத்தை அடைந்ததும் துர்நாற்றம் வீச ஆரம்பித்தது. பண்ணைக் கதவு சாத்தப்பட்டது. கிழவனின் அசைவற்ற தேகத்தை அறுத்தது பனிப் புயல். ஸாரபூ பெருமூச் செறிந்தான். சிறிது நேரம் சும்மா நின்றான். பிறகு கல்லறை மீது குனிந்தான்.

"கேவலமான வேலை!'' என்று அவன் உளறினான்.

"பயப்படாதே!'' என்றது பின்னே இருந்து ஒரு குரல்.

ஸாரபூ திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

"பார்ட்டிஸான் தூம்பூ.........'' என்று அவன் ஆச்சரியத்துடன் கூறினான்.

"பேசாதே, தாத்தா! உனக்கு என்னைத் தெரியாது. நீ என்னைக் கண்டதில்லை.........

தூம்பூ கழுத்தையும், கழுத்துப் பட்டையையும் தடவினான். தலையைச் சிறிது சாய்த்துக் கொண்டு திருப்தியுடன் நெடு மூச்சு விட்டான்.

"பயப்படாதே என்று சொன்னேன்......'' என்று சிரித்துக் கொண்டே கூறினான் தூம்பூ. "இன்று மண் குழம்பியிருக்கிறது. தரையில் உட்கார்ந்தால் சேறு உன் மீது ஒட்டும்......வித்தியாசமாக நினைக்காதே! என்

குணம் தான் உனக்குத் தெரியுமே. என் அத்தை வீட்டிற்கு நான் சென்றேன், தெரியுமா?......அவள் — என் அத்தை—ரொம்பக் கண்டிப்பானவள்......அங்கிருந்து வெளியேறுவது சிரமம். ஜெர்மானியர் என்னைத் தேடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.''

சந்தேகத்துடன் ஸராபூ தலையை அசைத்தான்.

"உனக்கு அத்தை இருப்பது எனக்கு இதற்கு முன் தெரியாதே!......ஜெர்மானியர் உன்னைத் தேடுகிறார்கள். உன்னைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பணம் தருவதாக வாக்களித் திருக்கிறார்கள்......"

தூம்பூ வியந்தான். ஆனால், அவன் இந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ந்தான்.

"நீ அவர்களிடம் சொல்லி விடு......" கிழவனின் காதருகில் சென்று கூறினான்: "தூம்பூ இன்னும் உயிருடன் இருக்கிறான் என்று அவர்களிடம் சொல்...... தாத்தா......" அவன் திடீரென்று பேசுவதை நிறுத்தினான். ஒரு அடி பின்வாங்கி ஸராபூவை உற்றுப் பார்த்து விட்டுப் பெருமூச் செறிந்தான். "தாத்தா! நீ எங்களையும் ஆதரிக்கவில்லை, அவர்களையும் ஆதரிக்கவில்லை!"

உணர்ச்சி யற்ற விரல்களை ஸராபூ உற்றுப் பார்த்தான். தன் விரல்களை அவன் கடித்து விட்டு அவை மீது துப்பினான்.

"வாலிபர்கள் போர் புரிவார்கள். வயோதிகர்கள் சிந்திப்பார்கள்...வயோதிகனுக்கு ஓய்வு தான் தேவை!"

தூம்பூ சட்டைப் பையில் கையைச் சொருகினான்.

"நீ பொய் சொல்லுகிறாய், தாத்தா!" என்று அவன் கடுமையாகக் கூறினான். "பயந்து கொண்டே நீ வாழ்க்கை

நடத்துகிறாய். என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியவில்லை. பழக்கமில்லாதவன் எங்கள் வழியைப் பின்பற்றுவது கஷ்டம் தான்; ஆனால், ஜெர்மானியர் விரும்புவது போல் நடக்க உன்மனம் உன்னை அனுமதிக்காது. நீ வேலி மீது உட்கார முயலுகிறாய். நல்ல பெயர் குபேர சம்பத்தை விடப் பெரிது என்பதை நீ மறந்து விட்டாயா?"

வயோதிகனின் புருவம் துக்கத்தால் விறைத்தது. மீசை முளைக்காத சிறுவன், கலாசாலையில் மழைக்குக் கூட ஒண்டாத சிறுவன் அவனுக்கு உபதேசம் செய்வதென்றால், அவன் ஹிருதயத்தின் அடித்தளத்தைத் தொடுவதென்றால் அது பெருத்த அவமானம்! தன் மன வேதனையை மறைக்க முயலாமல் அவன் கோபத்துடன் இருமினான்.

உனக்கு இவ்வளவு துணிச்சல் என்று வந்தது, பாப்பா! உன்னைவிட எனக்கு மூன்று மடங்கு அதிக வயதாய் விட்டது! நீ முயல் குஞ்சைப் போன்று இருந்த பொழுது என்தலை நரைக்க ஆரம்பித்தது...நான் மறந்து விட்டேனா? தயிர் கடைய உன்னால் முடியாது என்பதையும், நல்ல பெயர் எவ்வாறு சம்பாதிப்பது என்பது உனக்குத் தெரியாது என்பதையும் நீ தெரிந்து கொள். வாழ்க்கை திருகாணி அல்ல, அதைக் கழற்றி விட்டு உன் பையில் வைத்துக் கொள்ள...கால் தடுமாறும் பொழுது தலையில் அடித்துக் கொள்வது என்று சொல்லுவார்கள். என்னை நம்பிக் கொண்டு பலர் இருக்கிறார்கள். உனக்கு என்ன இருக்கிறது? மேலே பார்த்தால் ஆகாசம், கீழே பார்த்தால் பூமி!"

தாம்பூ புன்னகை புரிந்தான். பிறகு வேடிக்கையாகச் சொன்னான்:

" உலகத்திற்கு யாரை அனுப்புகிறான் என்பது கடவுளுக்குத் தெரியும்... "

கிழவன் மறு பக்கம் திரும்பினான்.

" விளையாடி நீ அலுத்த பிறகு, அவசியமற்ற விஷயங்களில் தலையிட்டு, முதியோருக்குப் புத்தி புகட்ட முயலுகிறாய்..." என்று சலிப்புடன் கூறினான் கிழவன்.

தாம்பூ சுற்றுமுற்றும் பார்த்தான்.

" என்னை மன்னி தாத்தா! சரிதானா? என்று அவன் ஆர்வத்துடன் சொன்னான். என் மீது கோபம் கொள்ளாதே! நாம் எதற்காகச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்? ஆம்...மோட்டாரில் வந்தது யார்? கூனனா? "

" கூனன் தான்! "

" உன்னைச் சபித்தானைக்கூம்? கல்லறை எப்படி எழுந்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினானா? யார் அதைக் கட்டினார்கள் என்று கேட்டானா? "

" ஆம்..."

" அப்படியானால் கல்லறை மறைய வேண்டும்...நான் போகிறேன், தாத்தா. நான் உன்னை மழையில் நனைய வைக்கிறேன். உன்னை நான் வீட்டிற்கு அழைக்க முடியாது...என்னைச் சந்தித்ததை மறந்து விடு. சரிதானே!...ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள் தாத்தா! இது யுத்த காலம்; இது நீதிசகாப்தம்..."

"போ, வாலிபனே, போ!" என்று மந்தமாகக் கூறினான் ஸராபூ. ஆனால், அவன் குரலில் கோபம் தொனிக்கவில்லை.

மூடு பனியில் அவன் உருவம் மறையும் வரையில் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றான் ஸராபூ. பிறகு

சிரமத்துடன் சேறில் புதைந்திருந்த காலை எடுத்து, வீட்டை நோக்கி நடந்தான்.

முகப்பில் கிடந்த ஒரு சிராயை எடுத்து பூட்சில் ஒட்டிக் கொண்டிருந்த சேறைத் துடைத்தான். பிறகு சிராயை வீசி எறிந்தான். வாசற்படியில் கிடந்த சாக்கில் பூட்ஸை நன்றாகத் துடைத்து விட்டுச் சமையல் அறையில் பிரவேசித்தான். கண்ணாடி பீரோவில் இருந்த தட்டுகள் அவன் நடந்த பொழுது அசைந்தாடின. அறையில் புகை சூழ்ந்திருந்தது. கழியிலும், மரத்தட்டிலும் தொங்கின உலர்ந்த பசுத்தோல் துர்நாற்றம் வீசிற்று. நெருப்பு சுடர் விட்டு எரிந்தது. துருத்திக்கு முன் பதிக்கப்பட்ட இரும்புத் தகட்டில் உட்கார்ந்து கொண்டு கிழவனின் ஐந்து வயதுப் பேரன் பூவரசுப் பட்டையால் சாம்பலைத் தூவி விளையாடினான். கிழவனின் இருபத்தி நான்கு வயதுப் பெண் மார்த்தா தன் மகனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு போகணியைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

கிழவன் கோட்டைக் கழற்றி விட்டு என்ன செய்வது என்று தெரியாமல் தயங்கினான். புகைக் குழாயைத் தேடுவதைப் போன்று வயிற்றிலும், நெஞ்சிலும் தட்டினான். சட்டைப் பைகளில் தடவினான். பிறகு தன் படுக்கை அறைக்குச் சென்று முன்னும் பின்னும் நடந்தான். பழைய கடிகாரம் சலிப்புடன் காலத்தைச் சுவைத்தது. பெரிய ஜன்னலுக்கு அருகிலிருந்த அரளிச் செடியின் கம்பியைப் போன்ற மெல்லிய கிளைகள் ஜன்னலில் மிருதுவாகத் தட்டின. அடுப்பின் ஒளி சலிப்பைத் தந்தது. மேஜை மீதிருந்த சிறிய சீனப் பசு கிழவனைப் பார்த்தது. அதற்கு வர்ணப் போர்வை போர்த்தியிருந்தது. பெண்ட் அளித்த பரிசு அத்தப் பசு. எட்டு வருடங்களுக்கு முன் வாஸ்க் நார்வா சந்தையில் அவன் அதை வாங்கினான்......

ஸராபூ மீண்டும் சமையல் அறைக்குச் சென்றான். பிறகு போலி மகிழ்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் மார்த்தாவிடம் சொன்னான்:

" இப்பொழுது நரகம் ஜெர்மானியரால் நிறைந்து விட்டது போலும். பூதம் கூனனை அங்கீகரிக்காது..."

குனிந்த தலை நிமிராமல் அவள் பதில் சொன்னாள்:

" அப்படித்தான் நானும் கேள்விப்பட்டேன் ...... நான் கதவருகில் சென்றேன்......"

அசாதாரண வேகத்துடன் அவள் பாத்திரத்தைத் தேய்த்தாள். அவள் களைத்து விட்டாள். பிறகு நிமிர்ந்து உட்கார்ந்து நெற்றியிலிருந்த வியர்வையைப் புறங்கையால் துடைத்தாள்.

" அவன் உன்னை எதற்காகக் கூப்பிட்டான்? "

திடீரென்று ஸராபூ சிரித்தான். பிறகு கை கொட்டிக் கொண்டே தலையைக் குலுக்கினான்.

" காலத்தின் கோளாறு. சிறிய விஷயங்கள் கூட நம்மைத் தொந்தரவு செய்கின்றன. கல்லறை அவன் மூச்சை அடைத்தது........."

மார்த்தா அவனை நூதனமாகப் பார்த்தாள். அதைக் கண்டு அவன் கலங்கினான். குழம்பின அவன் இருமினான். பிறகு நீலக் கைக்குட்டையால் நனைந்த நெற்றியைத் துடைத்தான்.

" கல்லறையை இடிக்கும்படி அவன் என்னிடம் சொன்னான். சிலுவையைச் சேறில் எறிய வேண்டுமாம் ...... " என்றான் ஸராபூ.

பீதியால் மார்த்தாவின் கண்கள் கலங்கின. எஸ்தோனிய விவசாயிப் பெண்கள் அணியும் " புரூச் " மின்னிற்று.

"நீ அதைச் செய்யப் போகிறாயா?" என்று அவள் கேட்டாள்.

கிழவன் தோளைச் சுருக்கினான்.

"நான் என்ன செய்ய முடியும்?........அதை நான் இடிப்பேன்..." அவன் உறுதியாகவும், அமைதியாகவும், நம்பிக்கை ஊட்டும் முறையிலும் பேச முயன்றான். "அதனால் இறந்த சிப்பாய்க்கு என்ன நேரப் போகிறது.........சிலுவை அவன் மீது குத்தப்படவில்லை. சிலுவை இல்லையென்றால் அவனுக்கென்ன?......பெயர் இல்லாத கல்லறை ...அந்த இடம் கல்லறைக்குரிய இடமே அல்ல......"

தன் செயலை நியாயப்படுத்த அவன் நீண்ட நேரம் முயன்றான்; குழம்பின சிந்தனையிலிருந்து இதற்கு ஆதாரம் தேடவும் முயன்றான். ஆனால், இவைகளெல்லாம் அவனைத் திருப்தி செய்யவில்லை. அவன் பெருமூச் செறிந்தான். இது முறையற்ற செயல் என்னும் உணர்வு போலிக் காரணங்களை முறியடித்தது. நியாயம் அவன் ஹிருதயத்தை அரித்தது.

"நீ எதைப் பார்க்கிறாய்?" என்று கோபத்துடன் மார்த்தாவைப் பார்த்துக் கூவினான் கிழவன். உன் வேலையைக் கவனி! நாம் நிலைமையைத் தெரிந்து கொள்ளுமுன் அவர்கள் நம் மீது பாய்வார்கள். தூக்கு மரத்தில் தொங்க நான் விரும்பவில்லை..."

சூரியன் அஸ்தமித்ததும் அவன் சட்டையைக் கழற்றி விட்டு முகப்புக்குச் சென்றான். பிறகு, விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"அவள் முட்டாள்" என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான். "வாழ்க்கையின் தன்மையை நீ தெரிந்து கொள்ளவேண்டும். இனி என்ன நடக்கும்

என்பது யாருக்குத் தெரியும்? பேயைக் கண்டதைப் போன்று அவள் மிரள மிரள விழித்தாள்...''

அவன் விளக்கைச் சுழற்றினன். ஆனால், பாரை இருந்த கொட்டகைக்கு அருகில் கூட அவன் போக வில்லை. பெருமூச்செறிந்து கொண்டே அவன் பெஞ்சில் உட்கார்ந்தான்.

கடந்து போன கார் காலத்திலே, அந்தி நேரத்தில், பூமி சேருக மாறின சமயத்தில் புகை குடித்துக் கொண்டே பெஞ்சில் உட்கார்ந்து காலத்தைக் கழித்தான் ஸாபூ. அன்று தன் இளமையைப் பற்றி அவன் நினைத்தான். அடுப்புக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு பயங்கரமான பழங் கதைகளை, லிவோனியன்ஸ் செய்த துரோகத்தை அவன் பெற்றோர்கள் வர்ணித்தார்கள். பழைய ஞாபகங் கள் அவனுக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. அவன் முகம் இருண்டது. அந்த உணர்ச்சியை அவன் விரும்பவில்லை. எதிர் காலத்தை அவனல் நம்பிக்கையுடன் பார்க்க அவனைப் பிடித்திருந்த தீய எண்ணம் அவனை அனுமதிக்க வில்லை. பழைய ஞாபகங்களை அவன் உதறித் தள்ளினன். தன் செயலை அவன் மானசிகமாக நியாயப் படுத்தினன். "விஷயம் முடிவாய் விட்டது. நான் தப்ப வேண்டு மானல்...''

"வாழ்க்கை விளையாட்டுப் பண்டம்!'' என்று அவன் துக்கத்துடன் கூறினன். பிறகு நெருப்பில் காறி உமிழ்ந் தான்.

பூஞ்சை போன்று பயம் அவன் ஹிருதயத்தைப் பற்றிக் கொண்டது.

"பிறர் கல்லறையைப் பாதுகாக்க நீ முயன்றல் உன் சவக் குழியை நீ தோண்ட வேண்டியதுதான்!'' என்று

அவன் தனக்குத் தானே கூறிக் கொண்டான். "இதைத் தவிர வேறு வழியில்லை..."

மை இருட்டு, சமையல் அறைக் கண்ணாடி ஜன்னலை இருள் மூடியிருந்தது. கிழவன் எழுந்திருந்து விளக்கைக் கொளுத்தினான், சிறு குச்சியால். ஸராபூ தொப்பியை இழுத்து விட்டுக் கொண்டான். கோட்டைத் தோளில் போட்டுக் கொண்டு கொல்லைக் கதவு வழியாக வெளியில் சென்றான்.

முற்றத்தின் மூலையில் நடுங்கும் வெளிச்சம் தெரிந்தது. முதலில் அது கொஞ்சமாகத் தெரிந்தது; பிறகு, பெரிதாகத் தெரிந்தது. மீண்டும் வெளிச்சம் பங்கிற்று. விளக்கு வெளிச்சத்தில் சதுப்பு நிலம் பிரகாசித்தது. சிறிய மடுக்கள் மின்னின. பழைய தண்ணீர் தொட்டியிலும் வெளிச்சம் தெரிந்தது. அதன் ஓரங்கள் நொறுங்கி இருந்தன. கிணற்றைச் சுற்றியிருந்த பலகைச் சுவரும், பம்பும், முன் பக்கம் இல்லாத பழைய வண்டியும் கண்ணுக்குத் தெரிந்தன. இறுதியில் கொட்டகையின் கதவிலும் கூரையில் இருந்து பிதுங்கின உத்திரத்திலும் வெளிச்சம் தெரிந்தது. ஸராபூ கதவைத் திறந்தான். முற்றத்தில் நடக்கும் பொழுது அவன் பூட்ஸ் உண்டுபண்ணின சத்தம் வைக்கோலில் நடக்கும் பொழுது வேறு விதமாக இருந்தது.

இரண்டு சக்கரங்களும், அறுந்த லகானும், துருப் பிடித்த பக்கெட்டும் வைத்திருந்த மூலையிலிருந்து மண் வெட்டியையும், பாரையையும் எடுத்தான் ஸராபூ.

ஸராபூ கொட்டகையின் மத்தியில் நின்றான். வருத்தத்துடன் அவன் மூலையைப் பார்த்தான். குதிரை கட்டுமிடம் காலியாக இருந்தது. குதிரையின் வழக்கமான கனைப்பு

அவனுக்குக் கேட்கவில்லை. அது புல்லைச் சுவைக்கும் சத்தமும் அவனுக்குக் கேட்கவில்லை. அதன் குளம்பின் சத்தம் கூட அவனுக்குக் கேட்கவில்லை. அங்கே ஜீவச் சின்னம் எதுவும் தென்படவில்லை. உத்திரத்திலிருந்து வெளவால்கள் கூடப் பறக்கவில்லை; சிறகடித்துக் கொண்டு விளக்கை நோக்கிப் பாயவில்லை. உத்திரத்தில் புருக்கள் கலக்கத்துடன் அசையவில்லை; தூக்கக் கலக்கத்தில் அவை கூவவும் இல்லை..........

துக்கத்தால் ஸராபூ ஹிருதயம் துடித்தது. ஜெர்மானிய கொள்ளைக்காரர்கள் குதிரையைக் கடத்திச் சென்றதால் ஸராபூ ஏழையாய் விடவில்லை; வாழ்க்கை தான் அதனுல் ஏழையாயிற்று. ஜெர்மானியர் இன்னெரு சொட்டு ரத்தத்தைக் குடித்தார்கள். ஜெர்மானியர் ஸராபூவுக்குச் சொந்தமான பசுவைத் தின்றதால் ஸராபூ பாப்பராய் விடவில்லை; அதனுல் மாட்டுத் தொழுவம் தான் ஏழையாயிற்று; அதனுல் ஒரு துண்டு நிலம் செத்தது.........

சிந்தனை அவன் உள்ளத்தில் அலை மோதிற்று. ஸராபூ பால் கறக்கும் இடத்தை எட்டிப் பார்த்தான். கருகின துணியைப் போன்று இருள் நடுங்கிக் கொண்டே மறைந்தது. பால் கறக்கும் பாத்திரத்திலும், மத்திலும் வெளிச்சம் தெரிந்தது.

அங்கே அப்பொழுது கூடப் பால் மணம் கமழ்ந்தது.

விவசாயி ஏக்கத்துடன் அங்கிருந்து வெளியேறினன். அவன் விளக்கை அணைத்தான. இருள் உலகத்தைச் சூழ்ந்து கொண்டது. அவன் கதவைத் திறந்து கொண்டு சமையல் அறையில் பிரவேசித்தான்.

நெருப்பின் நிழல் சுவரில் நர்த்தனமாடிற்று. புகை போக்கியில் காற்று முனகிற்று. போன் அதை உற்றுக் கேட்டு விட்டுத் தணிந்த குரலில் சொன்னன் :

"பிசாசு!"

வெளியில் மழைக் காற்று பலமாக வீசிற்று. மார்த்தா மெழுகு வத்தியைக் கொளுத்தினாள். பிறகு ஜன்னல்களை நன்றாக மூடினாள். விளக்கை பெஞ்சுக்குக் கீழே வைத்தான் ஸாபூ. கையிலிருந்த பாரையை அவன் உற்றுப் பார்த்தான். அதை அவன் மூலையில் வைத்தான். இனி அவன் முற்றத்தைக் கடக்க வேண்டியது தான் பாக்கி. ஆனால், ஸாபூ புகைக் குழாயிலிருந்த சாம்பலைத் தட்டினான்; ஒரு கம்பியால் அதைச் சுத்தம் செய்தான். பிறகு புகைக் குழாயைக் கொளுத்தினான். அவன் மார்த்தாவை ஓரக் கண்ணால் பார்த்தான். அவள் புன்னகை புரிவதை அவன் கண்டான். கோபத்தை அடக்க அவன் முயன்றதால் அவன் முகம் சிவந்தது. சட்டைப் பையில் கைகளைச் சொருகிக் கொண்டு அவன் வெளியே சென்றான்.

காரிருள் அவனைக் குருடாக்கிற்று. அவன் திறந்திருந்த வாயில் பனிக் கட்டியைத் திணித்தது காற்று. மூடு பனி அவனைத் திரையிட்டு மறைத்தது. சிரமத்துடன் மூச்சுவிட்டுக் கொண்டே அவன் கல்லறையை நோக்கி நடந்தான்.

இருளில் அவன் கல்லறை மீது இடறி விழுந்தான். ஒரு நிமிடம் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தான். அவன் தலைக்கு மேலே காற்று பயங்கரமாக ஊளையிட்டது. திடீரென்று கண்ணுக்குத் தெரியாத மரக்கிளை கிழவன் முகத்தில் ஓங்கி அறைந்தது. அவன் திடுக்கிட்டுப் பின்னே சாய்ந்தான். குளிர் காற்றும், மழையும் அவன் நெஞ்சைத் தாக்கின. கண்ணுக்குத் தெரியாத கை கல்லறையிலிருந்து அவனை அப்பால் தள்ளுகிறது போலும்! பயம் அவனை ஆட்கொண்டது. ஆனால், அவன் பயத்தைத் துரத்தினான்.

"போதும்!" என்று கோபத்தால் கூவினன். "நீயே அதை இடித்து விடலாம்........."

ஊளையிடும் காற்றில் அவன் குரல் கேட்கவில்லை. இருளில் அவன் யாரையோ அச்சுறுத்தினன். பிறகு, கோபத்தால் கூவினன்:

"நான் இதைச் செய்ய மாட்டேன்!"

பேய்க் காற்று அவன் குரலை இழுத்துச் சென்றது. கார் காலப் புயலில் அது வெகு தூரம தவழ்ந்து சென்றது......

2

ஸராபூ சாப்பிட உட்கார்ந்தான். மார்த்தா அவனுக்கு உணவு பரிமாறினள்.

ஈசல் அவன் தலைக்கு மேலே தீமை நிறைந்த குரலில் பாடிற்று. பிறகு, அது விளக்கின் மீது பாய்ந்தது. அது மேஜை மீது விழுந்து பீதியுடன் துடித்தது— மரணப் போர் புரிந்தது. கிழவன் அதை எடுத்து நசுக்கி விட்டு, கையைக் கால் சட்டையில் துடைத்துக் கொண்டான்.

"ஈசலைப் போன்று நீயும் நெருப்புடன் விளையாடு கிறுய்!" என்று அவன் தனக்குத் தானே கூறிக் கொண் டான்.

சூப்பில் ரொட்டித் துண்டைத் தோய்த்துவிட்டு, அவன் அதை மெதுவாகச் சுவைத்தான்.

அன்னையின் மடியில் உட்கார்ந்திருந்த என்டெல் கோபத்தில் ஏதோ முணுமுணுத்தான். அது அவனைத் தவிர வேறு யாருக்கும் விளங்காது. பெரிய கரண்டியால் அவன் சூப்பைக் குடித்தான். அவன் மோவாயில் சூப்பு வழிந்தது. இவைகளை யெல்லாம் கிழவன் கவனிக்கவில்லை.

மறுநாள் பிரபுவின் வீட்டிலிருந்து சிப்பாய்கள் வந்து, தங்கள் கொடிய பூட்ஸ் அணிந்த பாதங்களால் அவன் வீட்டை மிதித்து அவனை இழுத்துச் செல்லுவதை அவன் கனவு கண்டு கொண்டிருந்தான். அவன் தன் சவக் குழியைத் தோண்டுவான்; மண் வெட்டியால் மண்ணை வெளியில் எடுப்பான்.........குண்டுச் சத்தம் அவனுக்குக் கேட்காது! இடியைப்போன்று குண்டுச் சத்தம் குன்றில் எதிரொலிக்கும்.........ஈரமான, குறுகின குழியில் அவன் கிடப்பான். பீதி அடைந்த எலிப்புகள் கல்லறையிலிருந்து அவசரம் அவசரமாக வெளியேறும்.........நான்கு மாத காலத்தில் நடக்கும் எட்டாவது படுகொலை இது...

கிழவன் சோர்வுடன் உணவருந்தினன். மறுநாள் புழுக்கள் அவனை அரித்துத் தின்னும். அப்படியானல் அவன் ஏன் உணவருந்த வேண்டும்? இந்த எண்ணம் வேடிக்கையானது......

தன் கால்கள் கனப்பதையும், மூச்சு விடுவது சிரமமாக இருப்பதையும், கைகளை அசைப்பது கஷ்டமாக இருப்பதையும், துக்கம் அவனை ஒன்று இரண்டு தாக்குவதையும் அவன் உணர்ந்தான்.

சாப்பிடுவதை நிறுத்தி விட்டு அவன் ஒரு நிமிடம் அசையாது உட்கார்ந்திருந்தான். பிறகு அவன் எழுந்திருந்து அடுப்புக்கு அருகில் சென்று அங்கே உட்கார்ந்தான். புகைக் குழாயில் அவன் புகையிலையை நிறைத்து விட்டு அடுப்பிலிருந்து ஒரு நெருப்புக் கட்டியை எடுத்தான். அதை உள்ளங் கையில் சிறிதுநேரம் வைத்துக் கொண்டான், அதை நிறுப்பதைப் போல். பிறகு அதைப் புகையிலை மீது வைத்துவிட்டுப் புகை குடிக்க ஆரம்பித்தான். புகை அவன் முகத்திற்குத் திரையிட்டது. கையை

மோவாயில் ஊன்றிக் கொண்டு அவன் கவலை யுடன் தன் பேரனை உற்றுப் பார்த்தான். காற்றும், மழையும் பட்டு ஜன்னல் கதவுகள் கல்கலவென்று ஒலித்தன.

“படுக்க நேரமாய் விட்டதா?” என்று என்டெல் தன் தாயாரைக் கேட்டான்.

“நாம் நடனமாடப் போகிறோம் என்று நினைத் தாயா?” என்று சிரித்துக்கொண்டே மகனைக் கேட்டாள் மார்த்தா. அவள் என்டெலைக் கீழே நிறுத்தினாள்.

என்டெல் குனிந்து காலைச் சொறிந்தான்.

“நான் உன்னுடன் படுக்கட்டுமா?” என்று அவன் தாத்தாவைக் கேட்டான்.

ஸராபூ புன்னகை புரிந்தான்.

“நீ எதற்காக என்னுடன் படுக்க வேண்டும்? உனக் குத்தான் சின்னஞ் சிறிய மெத்தை இருக்கிறதே!”

சிறுவன் கால்சட்டைப் பையில் கைகளைச் சொருகிக் கொண்டு சிறிது நேரம் யோசித்தான். பிறகு தாத்தாவின் யோசனையை அவன் அங்கீகரித்தான்.

“எனக்கு மெத்தை இருக்கிறது...உனக்குப் பெரிய மெத்தை இருக்கிறது. நான் பெரியவன் ஆனதும் எனக்குப் பெரிய மெத்தை கிடைக்கும்; நான் இன்னும் பெரியவன் ஆனால் இன்னும் பெரிய மெத்தை கிடைக்கும். ஆனால், அப்பொழுது உனக்கு மெத்தை இராது. அதற்குப் பதிலாக உனக்கு சவப் பெட்டி இருக்கும் அல்லவா, தாத்தா?”

வெயிலில் வாடும் பூவரசு மரத்தைப் போன்று கிழவனின் முகம் வாடிற்று. அவன் எழுந்திருந்தான்.

குளிரால் நடுங்குவதைப் போன்று அவன் நடுங்கினான். அவசியமின்றி அவன் அங்குமிங்கும் நடந்தான். பிறகு கோட்டை அணிந்து கொண்டு வீட்டிலிருந்து வெளியேறினான். அவன் ஜுரத்தால் வாடினான். அவன் கால்கள் தடுமாறின. பன்முறை ஸராபூ இடறினான். ஆனால், அவன் கீழே விழவில்லை. இருளில் பிடித்துக் கொள்ள எதையோ தேடுவதைப் போன்று கைகளை வீசினான்.

கொடிய காற்று கிழவனைத் தாக்கிற்று. மழை அவனை நனைத்தது. காற்று கோபத்துடன் சீறிற்று; அவனைப் பின்னுக்குத் தள்ளிற்று; அவன் தலைக்கு மேலே ஊளையிட்டது.

கையை முன்னே நீட்டிக் கொண்டு ஸராபூ குருடனைப் போல் நடந்தான். மழைத் துளிகள் விழாமல் இருப்பதற்காக முகத்தை மூடிக் கொண்டான். காட்டிலுள்ள மரங்களையெல்லாம் காற்று மொட்டையாக்கி விட்டதாகவும், தேவதாருக் கதிர்களை அது அடித்துச் சென்றதாகவும் அவனுக்குத் தோன்றிற்று. இருளில் கல்லறை இருக்குமிடம் கிழவனுக்குத் தெரியவில்லை.

"வேடிக்கை தான்!......" என்று முரட்டுத்தனமாகக் கூறினான் கிழவன்.

அவன் வீதிக்குத் திரும்பினான். அவன் எதிர் பார்த்த இடத்தில் வீதி இருக்கவில்லை. பிசாசுகளிடத்தில் அவனுக்கு நம்பிக்கை இருந்தால் இதைப் பேயின் வேலை என்று அவன் முடிவு செய்திருப்பான். ஆனால், கிழவனுக்கு அப்பொழுது கோபம் தான் வந்தது. திடீரென்று காற்றின் ஊளைக்கும், கர்ஜனைக்கும் மத்தியில் ஏதோ கிறீச்சிடும் சத்தம் கேட்டது. மரம் தான் அந்தச் சத்தத்தை உண்டு பண்ண முடியும். அந்தத் திசையை

நோக்கி அவன் ஓடினான். ஆனால், புயல் அவனை ஏமாற்றி விட்டது......மீண்டும் வீதியைக் கண்டுபிடிக்க அவன் முயன்றான். அவன் இருளில் நடந்தான். சிறிது தூரம் நடந்ததும் வழி தவறி விட்டது என்பதை அவன் உணர்ந்தான்.

அவன் பயப்படவில்லை. ஆனால், ஆத்திரம் எல்லை மீறிற்று. அவன் நனைந்திருந்தான். குளிரால் அவன் நடுங்கினான். இடது கால் பூட்சில் சேறு நிறைந்திருந்தது. கண் வலிக்கும் வரையில் அவன் இருளை உற்றுப் பார்த்தான்... அந்தத் துன்பகரமான இருளில் சத்தத்தைத் தவிர வேறொன்றும் கேட்கவில்லை. ஸராபூ பல்லை நற நற வென்று கடித்தான். கோபத்தில் அவன் பாரையை வீசி எறிந்தான்.

எட்டு அல்லது பத்து அடிகளுக்கு அப்பால் பாரை மரத்தின் மீது விழுந்தது. கிழவன் கையை முன்னே நீட்டிக் கொண்டு அந்தத் திசையை நோக்கி நடந்தான். மூன்று அடி தூரம் நடந்ததும் சிலுவை அவன் மீது இடித்தது. அவன் மண்டியிட்டு உட்கார்ந்து தரையில் தடவினான். அவனுக்குத் தெரியாமலே கொடிய, தீமை நிறைந்த மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. பாரையை அவன் கண்டு பிடித்தான். அவன் எழுந்திருந்து சிலுவையை வலம் வந்தான். காலால் கல்லறையைத் தடவினான். பிறகு வெண்ணெயைப் போன்று மிருதுவாக இருந்த பூமியில் பாரையைச் சொருகினான்.

கோபம் அவனை விட்டு அகலவே இல்லை. கோபத்துடன் அவன் பூமியைத் தோண்டினான். ஆனால், பாரை கூழாங்கல் மீது பட்டதும் புதைக்கப்பட்ட சிப்பாயின் ஞாபகம் அவனுக்கு வந்தது. கிழவன் நிலை குலைந்தான். மூட பக்தியால் ஏற்பட்ட பயமல்ல இது. தன் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த அவன் முயன்றான். கல்லறையை

அசுத்தப் படுத்துவதைப் பற்றி அவன் மனம் நினைக்காமல் இருக்க வேண்டுமே......

ஸாரூ அவசரப்பட்டான். உறுதியுடன் அவன் சிலுவையை முன்னும் பின்னும் அசைத்தான். அவன் நடுங்கினன். சிலுவையை அவன் சதுப்பு நிலத்திற்கு எடுத்துச் சென்றான். கடைசி நிமிடத்தில் நிலை குலைந்து விடுவோமோ என்று அவன் பயந்தான். அவன் கொஞ்ச தூரம் நடந்தான். சிலுவையை அங்கே எறிந்து விட்டு, தடுமாறிக் கொண்டே வீடு திரும்பினன். காற்றால் கலைக் கப்பட்ட இருள் அவனைச் சுற்றி முனகிற்று—அழுதது...

3

இரவு முழுதும் இடை விடாது புயல் அடித்தது. கிழவன் கண்ணை மூடவே இல்லை. காற்றின் மிருகத்தன மான ஊளையைக் கேட்டுக் கொண்டு அவன் அசையாது படுத்திருந்தான்...புகை போக்கியில் காற்று சீழ்க்கை அடித்தது. தகதகவென்று எரியும் நிலக்கரி அறையில் எட்டிப் பார்த்தது.

அடைப்புக்கு அந்தப் பக்கம் படுத்திருந்த என்டெல் எழுந்திருந்து மெல்லிய குரலில் அழுதான். மார்த்தா உடனே விழித்து எழுந்தாள். தூக்கக் கலக்கத்தில் அவ னைத் தேற்றினள். துக்கத்துடன் குழந்தைக் குரலில் மெதுவாக அவள் பாடினள். குழந்தையின் தந்தை வெகு தூரத்தில் இருந்தாலும் அவன் தாய் நாட்டில் இருக் கிறான். போர் முடிந்த பிறகு அவன் தேவதாரு மரத்தடி யில் துப்பாக்கியை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந் திருக்கிறான். போர் முடியும்; தந்தை மகனிடம் திரும்பி வருவான். இப்பொழுது அன்னை குழந்தையைப் பாது காக்கிறாள். அவள் பாடின பாட்டு இதை வர்ணித்தது.

திடீரென்று புயல் நின்றது. அமைதி நிலவும் அகழியில் வீடு விழுந்து விட்டதா, என்ன? அமைதி ஸராஹூவைத் துன்புறுத்திற்று.........

மார்த்தா விழித்து எழுந்தாள். ஜன்னல் கதவுகளை அவள் திறந்தாள். காலை ஒளி அறையில் வீசிற்று. அந்த மங்கின வெளிச்சத்தில் பொருட்களின் வடிவங்கள் மங்கலாகத் தெரிந்தன. பாழ் வெளியில் அவை அந்தரத்தில் தொங்குவதைப் போன்று காட்சி அளித்தன. கிழவன் திக்கு முக்காடினன்.

கிழவன் எழுந்திருந்து சோர்வுடன் கால் சட்டையையும், சட்டையையும் அணிந்து கொண்டான். பிறகு ஜன்னலுக்கு அருகிலிருந்த பெஞ்சில் உட்கார்ந்தான்.

மூடு பனி காற்றில் தவழ்ந்து சென்றது. பாதி விழுந்திருந்த வேலியினூடே மூடு பனி வயலுக்கு மிதந்து சென்றது. காலம் அப்படித்தான் சோர்வுடன் தவழ்கிறது என்று நினைத்தான் கிழவன்.

கால் சட்டையில் ஒட்டிக் கொண்டிருந்த சேற்றை நீண்ட நகத்தால் சுரண்டினன். அவன் பெருமூச்செறிந்தான். புது நாள் அவனுக்கு எதை அளிக்க முடியும்? அது காலி சீசா!

ஜூன் மாதத்தின் ஆரம்பம் அவன் நினைவிற்கு வந்தது......... பழைய காலம் கிழவனைப் பெரிதும் கவர்ந்தது.

மரச் சுவரிலிருந்த ஜன்னல் வழியே சூரியன் கிரணங்கள் மாட்டுத் தொழுவில் வீசினதும், சூரியன் ஒளி இருளை ஓட்டினதும் அவன் நினைவிற்கு வந்தது. சூரியன் ஒளி பட்டு எல்லாம் உயிர் பெற்றன. புதிய சாணத்திலிருந்து ஆவி கிளம்பிற்று. ஒரு பசுவின் வீங்கியிருந்த வயிறு

விம்மி விம்மித் தணிந்தது; இன்னொன்று கண்ணாடி போன்ற கண்களால் திறந்த வெளியை உற்றுப் பார்த்தது. பசுவின் வாயிலிருந்து நுரை வழிந்தது. மேல் மாடத்தில் வைக்கோல் காய வைக்கப்பட்டிருந்தது. இரண்டு வைக்கோல் துரும்புகள் கீழே தொங்கின. சூரியன் ஒளியில் அவை அசைந்தாடின. அந்த ஒளியில் லட்சக்கணக்கான அணுக்கள் மிதந்தன. மூன்றாவது பசு அசை போட்டுக் கொண்டிருந்தது. ஒரு குருவி கொட்டகையில் வேகமாகப் பறந்தது. காய்ந்த, அசுத்தமான வைக்கோலின் துர்நாற்றமும், சாணியின் நாற்றமும் காற்றில் கலந்தது. அவன் புதல்வி பால் பாத்திரத்தைக் கீழே வைத்தாள். பசு குனிந்தது. "சும்மா இரு, அம்மா!" என்று தூக்கக் கலக்கத்தில் சொன்னாள் மார்த்தா. பாவாடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவள் பால் கறந்தாள். பால் பாத்திரத்தில் விழுந்தது. "புது நாள் பிறந்தது...... புது நாள் பிறந்தது......" என்று அது பாடிற்று. கிழவன் மனக் கண் முன் கண்ட சித்திரம் இது.

ஆசையும், நிராசையும் கிழவன் மீது படை எடுத்தன. அவன் பெருமூச் செறிந்தான். காற்று திறந்த கதவு மூலம் மூடு பனி கொட்டகையில் நுழைவதை அவன் சோர்வுடன் பார்த்துக்கொண்டிருந்தான். ஆட்டு ரோமம் காற்றில் தவழ்வதைப் போன்று மூடு பனி காற்றில் தவழ்ந்தது.

சிந்தனை என்னும் சுழலிலிருந்து கரையேறுவதற்காக அவன் வேலை செய்ய முடிவு செய்தான். அவன் மத்தைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தான்.

அன்று மத்தியானம் வரையில் அவன் அந்த அறையில் இருந்தான். அவன் கால்களை நீட்டிக் கொண்டு தரையில் உட்கார்ந்திருந்தான். சம்மட்டி, திருகாணி

முதலியன அவனுக்கு அருகில் கிடந்தன. மத்தியானம் மார்த்தா கதவைத் திறந்தாள். அவள் வதனம் பீதியால் கலங்கிற்று. ஈரமான கைகளைச் சட்டையில் துடைத்துக் கொண்டு அவள் கிழவனை அணுகினாள்.

"அப்பா! பிரபு வந்திருக்கிறான்!" என்று தணிந்த குரலில் நடுங்கிக் கொண்டே அவள் சொன்னாள்.

கோபப் பார்வையுடன் கதவுக்கு முன் நின்றான் கூனன். மொட்டைக்கோஸ் சூப்பின் மணத்தை அவன் நுகர்ந்தான். அடுப்பில் ஜலம் கொதிக்கும் சத்தம் அவனுக்குக் கேட்டது. பிரபு கறுப்பு மழைக் கோட்டும், நீண்ட பூட்சும் அணிந்திருந்தான். கதைகள் சித்தரிக்கும் சித்திரக்குள்ளனைப் போன்றிருந்தான் கூனன். பிரம்பில் சாய்ந்து கொண்டு அவன் நின்றான். பிரம்பின் அழகிய கைப்பிடி வெளியில் தெரிந்தது. கைப் பிடியிலிருந்த வெள்ளிப் புலி குடியானவனை உற்றுப் பார்த்தது.

"என் கட்டளையை நிறைவேற்றினாயா? கல்லறையை இடித்து விட்டாயா?" என்று கேட்டான் கூனன்.

"ஆம்; நான் கல்லறையை இடித்து விட்டேன்!"

கூனன் சிரித்தான். பழைய இரும்புத் துண்டுகள் நிறைந்த சாக்கைக் குலுக்கினால் ஏற்படும் சத்தம் அது.

"நான் அதைக் காண விரும்புகிறேன். கல்லறையைக் காட்டு........."

கிழவன் பயந்தான். அவன் குரலில் ஈனம் தொனித்தது.

"நீங்கள் இதை விரும்பினால்........." என்று முணுமுணுத்தான் கிழவன்.

அவன் படுக்கை அறைக்குச் சென்று பூட்ஸ் அணிந்து கொண்டு வெளியில் வந்தான். ஆணியில் தொங்கின தொப்பியை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டான். வீட்டிலிருந்து முதலில் வெளியில் வந்தவன் ஸாராபூ தான்.

வீட்டுக்கு எதிரில் நின்றது பிரபுவின் மோட்டார். சிகரெட் குடித்துக் கொண்டு மோட்டாரில் உட்கார்ந்திருந்தான் ருடால்ப். அவன் எதையோ பார்த்துச் சிரித்தான்.

ஸாராபூ காற்றில் மிதந்து செல்லும் பனிச் சுருள்களைப் பார்த்தான். முப்பது கஜம் நடந்ததும் அவன் திடுக்கிட்டான். கல்லறையைக் கண்டதும் அவன் வதனம் வெளிறிற்று. தன் கண்களை நம்பாமல் அவன் தள்ளாடிக் கொண்டு நடந்தான்.

கல்லறை பழைய நிலையில் இருந்தது—ஒரு வாரத்திற்கு முன், அல்லது ஒரு மாதத்திற்கு முன் இருந்ததைப் போல் இருந்தது. மேட்டில் புதுப்புல் முளைத்திருந்தது. வித்தியாசம் இது தான்.

கிழவன் பூவரசு மரத்தை அணுகினான். சிலுவையின் மீது கையை வைத்தான். பிறகு உலர்ந்த அதரங்களை நக்கினான். அவனுக்குப் பின்னே வந்த பிரபு கேட்டான்:

"இப்பொழுது என்ன சொல்லுகிறாய், ஸாராபூ?"

கிழவன் திரும்பினான்.

"உங்கள் கட்டளையை நான் நிறைவேற்றினேன்......" என்று அவன் முனகினான். "கடவுள் எனக்குச் சாட்சி. இது புதிய கல்லறை!"

வார்த்தை கிழவன் தொண்டையை அடைத்தது. சிலுவையிலும், புல்லிலும் ஒட்டிக் கொண்டிருந்த சேறை அவன் சுட்டிக் காட்டினான்.

"அதை நான் கண்டேன்" என்று கூச்சலிட்டான் பிரபு. "மழையில் காளானைப் போன்று கல்லறை தானாகவே முளைக்காது! நீ போன பிறகு இங்கே யார் வந்திருக்கக் கூடும்?"

ஸராபூ தோளைச் சுருக்கினான்.

"அது எனக்குத் தெரியாது."

ஒன்றும் பேசாமல் பிரபு மோட்டாரை நோக்கி மெதுவாக நடந்தான்.

மூடு பனியில் மோட்டார் மறைந்ததும் கிழவன் சொன்னான் :

"ஜனங்கள் செய்தார்கள், பிரபு........ஜனங்கள் செய்தார்கள்!"

ஜனங்களின் பரிசுத்தமான முகத்தைக் கண்டு விட்டதைப் போன்று அவன் கலங்கினான். அவன் முகம் நாணத்தால் சிவந்தது. அவன் தலை வணங்கினான். அவன் மிக மெதுவாக வீட்டை நோக்கி நடந்தான்.

கதவுக்கு முன் சிறிது நேரம் நின்றான். தரையில் சேறைத் தேய்த்து விட்டு, தொப்பியைக் கூட எடுக்காமல் ஜன்னலுக்கு அருகில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தான். அவன் தோள் சுருங்கி இருந்தது. அசைவற்று அவன் வெகு நேரம் உட்கார்ந்திருந்தான். கரையும் மூடு பனியை அவன் இமை கொட்டாது பார்த்தான். திடீரென்று கண்களை உயர்த்தி கண்ணாடி ஜன்னலில் முகத்தைச் சாய்த்தான்.

இருவர் கல்லறையைத் தரை மட்டமாக்குவதை அவன் கண்டான். அவர்கள் வேலை செய்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான் ஜெர்மன் சிப்பாய்.

கல்லறையைப் பார்த்துக் கொண்டு வீதியில் நின்ற நான்கு பெண்கள் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டனர். கிழவன் அப்பால் சென்றான். நிராசையுடன் கிழவன் முணுமுணுத்தான்:

"எப்படி இருக்கிறது!"

வலது காதை அவன் சொறிந்தான். முழங்காலைக் கட்டிக் கொண்டான். பிறகு எழுந்து நடந்தான். சேறு படிந்த அடிச் சுவடுகளை மார்த்தா துடைப்பதை அவன் கண்டான். சுவரில் சாய்ந்து கொண்டு அவன் கோட்டையும், பூட்சையும் கழற்றினான்.

அப்பொழுது அங்கே தோன்றினான் பென்ட்.

"விரைவில் பெய்பஸ் தடாகத்திலிருந்து காற்று அடிக்கும்!" என்று அவன் சொன்னான். உள்ளே வந்ததும் அவன் கதவைச் சாத்தினான்.

ஸராபூவின் முதிர்ந்த கண்கள் ஒளி வீசின.

"நீ கிழ விவசாயியை மறக்கவில்லை!"

"இல்லை, நண்பா"! எனக்கு ஒரு பாட்டில் வோட்கா கிடைத்ததும் உன் உருவும் என் கண்முன் தோன்றும்.

ஸராபூ சிரித்தான்.

"நீ உபயோக மற்றவன், கால்ஜு பென்ட்! பேய் தோன்றுவதைப் போன்று நீ காட்சி அளிக்கிறாய்!"

சிரித்துக் கொண்டே சட்டையைக் கழற்றினான் பென்ட்.

"பேய் என் வழியில் வராது. சாத்தான் திரும்பி வந்ததைக் கொண்டாடுவதற்காகப் பேய்கள் பிரபுவின் மாளிகைக்குச் சென்றிருக்கின்றன."

இதைக் கேட்டுப் புன்னகை புரிந்தான் ஸராபூ வேடிக்கையை அவன் விரும்பினான். வேடிக்கை

அருமருந்து. அந்த நெருக்கடியான கட்டத்தில் நண்பனின் உல்லாசமான பேச்சு அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது.

பென்ட் மேஜையை நோக்கி நடந்தான். அவன் பெஞ்சில் உட்கார்ந்ததும் வோட்கா பாட்டிலைப் பையிலிருந்து எடுத்தான்.

"நீ போய் விடு, மார்த்தா!" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு கூறினான் பென்ட்.

மார்த்தா புன்னகை புரிந்தாள். அவள் தந்தையைப் பார்த்தாள். தந்தை அவளுக்கு விடை கொடுத்தான். அவர்கள் ஜெர்மானியர் கண்ணில் படாமல் கோதுமை, மாமிசம் முதலியவைகள் ஒளித்து வைத்திருந்த இடத்திற்குச் சென்றாள்.

வெளியில் எட்டிப் பார்த்து விட்டு பென்ட் கவலையுடன் சொன்னான் :

"இந்த வருடம் பனி கடுமையாக இருக்கும். வேனிற் காலத்தில் சுண்டெலி தானியத்தின் மீது வசிக்கும்."

வருத்தம் கலந்த சந்தேகத்துடன் ஸராபூ தலையைக் குலுக்கினான்.

"ரத்தத்தில் திக்கு முக்காட சுண்டெலி விரும்பவில்லை, கால்ஜா!......"

பென்ட் அவனை உற்றுப் பார்த்தான். சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு இருவரும் பேசாமல் இருந்தனர். பிறகு நெடு மூச்சு விட்டுக் கொண்டே பென்ட் சொன்னான்:

"நீ சொல்லுவது எனக்குப் புரிகிறது!"

பென்ட் உண்மையைச் சொன்னான்.

கிராமப் பண்டிகையன்று நடந்த போட்டிப் பந்தயத்தில் அவர்கள் இருவரும் ஈடுபட்டார்கள். அன்று அவர்களிடையே நட்பு மலர்ந்தது. அது நடந்து பல வருடங்களாகின்றன. தடாகப் சதுப்பு நிலமாக மாறிற்று. அவர்கள் மணந்தார்கள்; தங்கள் மனைவிகளை இழந்தார்கள். அவர்கள் இருவருப் முதுமையை எட்டிப் பிடித்தார்கள். எனவே, பேச்சுக்கு இடமின்றி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதில் வியப்பென்ன?

பூவரசு மரத்தால் செய்யப்பட்ட புகையிலைப் பெட்டியை பென்ட் மேஜை மீது வைத்தான். புகைக் குழாயை வெளியில் எடுத்து அதில் புகையிலையை நிறைத்தான். புகையிலைத் துண்டுகள் அவன் முழங்கால்களில் விழுந்தன. அவன் ஸாராபூவை இமை கொட்டாது பார்த்தான்.

"தாம்பூ என்னிடம் என்ன சொன்னான் என்பது உனக்குத் தெரியுமா?" பென்ட் சிரித்தான். "நாம் காலத்துடன் விளையாடுகிறோம் என்று அவன் சொன்னான். ஒவ்வொரு நிமிடத்தையும் நல்ல காரியத்திற்காகச் செலவு செய்கிறவன் தான் நிலைமையைச் சமாளிக்க முடியும் என்று அவன் சொன்னான். பாதிரியின் குரலில் தாம்பூ இதைச் சொன்னான். அவன் சொன்னது யாருக்கும் விளங்கவில்லை. அவன் கிராமத்திலிருந்து மறைந்த பிறகு தான் நிராயுத பாணியாக்கப் பட்ட ஒரு ஜெர்மன் சிப்பாயை நான் வீதியில் கண்ட பொழுது தான் அவன் சொன்னதன் பொருள் எனக்குத் தெரிந்தது......"

கால்ஜூவைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தான் ஸாராபூ. அவன் நினைத்தான்: "நீ சொல்லுவது எனக்குப் விளங்குகிறது... நீ என்றும் நுனிப்புல் மேய்கிறவன்.......துன்பத்தில் சிக்கிக் கொள்ள நீ இன்றும் தயார்."

உரத்த குரலில் ஸராபூ சொன்னான்:

"நான் தூம்பூவின் யோசனையைக் கேட்கவில்லை, கால்ஜு. உன் மந்தையிலுள்ள காளை தூம்பூ. அவன் தேர்ச்சி பெற்ற தொழிலாளி; உல்லாசமானவன்...எழுந்து கவலையின்றி நடக்கிறான். அவனுக்கு வீடில்லை, தொழு வில்லை, பசுவும் இல்லை......"

"பசுத் தோலும் இல்லை!" என்று எரிச்சலுடன் பென்ட் சொன்னான். அவன் இருமினான்.

"நான் பேச்சாளன் அல்ல, கால்ஜு. ஆனால், நான் நேற்றுப் பிறந்த கன்றுக் குட்டியல்ல. என்னால் சிந்திக்க முடியும்......"

"முட்டாள் தனமாகப் பேசாதே!" என்று கூறிச் சிரித்தான் பென்ட். "நான் என்ன சொன்னேன்? நீ நன்றாக யோசனை செய்! ஆனால், உரிய காலத்தில் செயலாற்று." அவன் எழுந்திருந்து பைப்பைக் கொளுத்துவதற்காக அடுப்புக்கு அருகில் சென்றான்.

"அது தான் விஷயம்" என்றான் ஸராபூ. "கழுத்தில் என்று வேண்டுமானாலும் சுருக்குப் போட்டுக் கொள்ளலாம்...நமக்குள் மனம் விட்டுப் பேசிக் கொள்ளலாம், கால்ஜு. இன்றுள்ள நிலையில் உணர்ச்சிக்குத் தாளிடுவது தான் நல்லது......"

அவன் நீண்ட நேரம் பேசினான். ஜாக்கிரதையாக அவன் வார்த்தைகளைப் பொறுக்கினான். அடுப்புக்கு அருகில் புகை குடித்துக் கொண்டு வீற்றிருந்தான் பென்ட். அடிக்கடி அவன் சிரித்தான்.

வறுத்த மீன், வெண்ணெய், பொரித்த மாமிசம் ஆகியவைகளுடன் அங்கே பிரசன்னமானாள் மார்த்தா

அவள் அவைகளைத் துண்டு துண்டாக வெட்டி ஒரு துண்டை என்டெல் படுக்கைக்கு எடுத்துச் சென்றாள். என்டெல் தூங்கி வழிந்தான். பிறகு, கையைக் கட்டிக் கொண்டு சுவருக்கு அருகில் அவள் நின்றாள்.

பெண்ட் தகரக் குவளையில் வோட்காவை ஊற்றினான்.

“தரையில் கிடக்கும் கல்லை அடிக்கடி மிதிக்கிறார்கள் ஜனங்கள்...” என்றான் பெண்ட்.

“உன் சிந்தனை ஊர்க் குருவியைப் போன்று வேகமாகப் பாய்கிறது, கால்ஜா. அலை மோதாத ஜலப் ஆழமாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஒரு நிமிடம் பொறு! நாமும் மௌனமாகச் சில வேலைகள் செய்யலாம்...உட்கார்! நாம் வோட்கா குடிப்போம்...இனம் தெரியாத சிப்பாய் சாந்தி அடையட்டும்!”

பெண்ட் உட்கார்ந்தான். அவன் சந்தேகத்துடன் புன்னகை புரிந்தான்.

“குடி இந்த விஷயத்தில் நமக்குத் துணை புரியாது.”

முழங்கையை மேஜையில் ஊன்றிக் கொண்டு ஸாராபூ குனிந்தான்.

“இன்று நள்ளிரவுக்குள் நாம் ஒரு சிலுவை செய்தால் என்ன?”

அவன் சொன்னதை பெண்ட் புரிந்து கொண்டான். புகைக் குழாயை அவன் கன்னத்தில் தேய்த்தான். பிறகு அதைக் கீழே வைத்தான்.

“நாம் குடிப்போம், நண்பா........” என்று அவன் வேடிக்கையாகச் சொன்னான்.

ஸாராபூ பின்னே சாய்ந்தான்.

"மனச் சாட்சிக்கு விரோத மில்லாமல், நீதியுடன் நாம் வாழவேண்டும்......" என்றான் அவன். பெண்டைப் பார்த்து அவன் தலையை உயர்த்தினான்.

பிறகு ஸராபூ வோட்காவைக் குடித்தான். வெண்ணெயைத் தின்றதும் அவன் முகத்தைச் சுளித்தான். வோட்காவின் ருசியால் அவன் முகத்தைச் சுளித்திருக்கலாம்; அல்லது அவன் மனதில் அலை மோதின எண்ணங்களால் அவன் முகத்தைச் சுளித்திருக்கலாம்.

"அவர்கள் வெறுக்கத்தக்கவர்கள்" என்றான் அவன். "அவர்கள் மனச் சாட்சியையும், மனித தர்மத்தையும், மனிதத் தன்மை பெற்ற அனைத்தையும் நிர்மூலம் செய்ய முயலுகிறார்கள். 'மயான அமைதி' என்று நாம் அடிக்கடி சொல்லுவோம். கல்லறையில் கூடத் தீப்பொறியைக் காணும் தந்திரசாலிகள் அவர்கள். அதையும் அவர்கள் நாசமாக்க விரும்புகிறார்கள்......"

"நீ சொல்லுவது உண்மை தான்" என்றான் பெண்ட்.

ஸராபூ அர்த்த புஷ்டியுடன் விரலை உயர்த்தினான்.

"ஆனால், அது நடந்த பொழுது கல்லறையில் உயிர் இருப்பதை நான் உணர்ந்தேன், கால்ஜா! என்னை ஆகர்ஷித்த ஏதோ ஒன்று அங்கே இருந்தது. அந்தக் கூனனை......"

பெண்ட் புன்னகை புரிந்தான்.

"சரி! நாம் அவனை ஒரு கை பார்ப்போம்!"

அவன் நிமிர்ந்து பார்த்தான்; நெற்றியைச் சுளித்தான்; புகையை ஊதினான்; ஸராபூவைப் பரிசோதனை செய்வதைப் போன்று அவனை இமை கொட்டாது பார்த்தான்.

கால் சட்டைப் பையில் ஸராபூ எதையோ தேடினான் பிறகு காலுறை அணிந்த காலால் தரையில் தாளம் போட்டான்.

"எனக்குத் தெரியாது, கால்ஜூ! ஒருக்கால் இந்த எண்ணம் உன் மூளையில் தோன்றாமல் இருக்கலாம். கூனனுக்குத் தீங்கு இழைக்க வேண்டுமென்று நான் நினைப்பதாகக் கருதாதே. ஒரு வாலிபன் அந்த வேலையைச் செய்வான். நான் அதைச் செய்ய விரும்பவில்லை. நமது மனச்சாட்சி பரிசுத்தமானது என்பதற்காகப் பிறர் நம்மைக் கௌரவிக்க வேண்டுமென்று நாம் கோரவில்லை. பரிசுத்தமான மனச்சாட்சி விலை மதிக்க முடியாத செல்வம், கால்ஜூ. கூனன் என் செல்வம் முழுவதையும் எடுத்துக் கொள்ளட்டும். அது அவனை மனிதனாக்காது. அப்பொழுதும் அவன் பூமியில் ஊர்ந்து செல்லும் கேவலமான புழுவாகத் தான் இருப்பான். நாம் மனச் சாட்சியை விற்று விட்டால் பிறகு நம்மிடம் எது மிஞ்சி இருக்கும்? கல்லறையில் இருக்கும் சிப்பாய் கண்ணியமாக வாழ்ந்தான். ஆகவே, மனச்சாட்சி விலை மதிக்க முடியாதது, கால்ஜூ. மூன்று பந்தங்கள் நம்மை ரஷிய சிப்பாயுடன் பிணைக்கின்றன: அவன் ரத்தம், நமது விடுதலை, நமது நிலம்......"

பென்ட் குழாயை உறிஞ்சினான். பிறகு பெரு மூச்செறிந்து கொண்டே சொன்னான்:

"பேச்சு அவசியமா என்பது எனக்குத் தெரியவில்லை, நண்ப!......நாம் ஒன்றாக வேலை செய்ய வேண்டுமானால், ஏதாவது ஆயுதத்தைத் தேடு. நாம் பிரபுவின் வீட்டிற்குப் போவோம். கூனன் முதுகில் எட்டு அடி கொடு. பிறகு அவனைச் சமமாக்கும் வேலையை என்னிடம் ஒப்படை...... அதன் பிறகு புதிய ரத்தத்தைப் போன்று நமது மனச்சாட்சியும் சுத்தமாக இருக்கும்."

"பண்ணையையும், குழந்தைகளையும் கைவிட வேண்டுமா?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் ஸராபூ. "கலகக்காரன் தூம்பூ வழியை நானும் பின்பற்ற வேண்டுமென்று நீ விரும்புகிருயா? நான் இந்த மண்ணில் பிறந்தவன். இந்த பந்தம் என்னைப் பலமாகப் பிணைத்திருக்கிறது......"

கால்ஜூ பென்ட் தரையை உற்றுப் பார்த்தான்.

"உன்னை எப்படிக் கோபமூட்டுவது என்பது எனக்குத் தெரியவில்லை. நீ போதிய அளவு ஆத்திரப்படவில்லை. நீ ஐம்பது வருடங்கள் கூனன் நுகத்தின் கீழே இருந்தாய். அதனால் நீ வாடி வதங்கினாய். காலிலுள்ள காய்ப்பை அறுத்தால், அது வலிக்காது...நீ கோபத்துடன் இருந்தால் காய்ப்பு மறைந்து விடும். பிறகு தான் உனக்கு வேதனை தெரியும்......"

4

நடுநிசி. எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. உலகம் உறங்கிற்று. அடிக்கடி முதிய பூவரசு மரத்திலிருந்த கண்ணுக்குத் தெரியாத அண்டம் காக்கை கத்திற்று, அல்லது சிறகடித்தது. தூங்கி வழியும் பறவைகளின் குரலில் பயம் தொனித்தது. பென்டும், ஸராபூவும் நடந்த பொழுது அவர்கள் கால் பட்டு பனிக் கட்டி நொறுங்கிற்று. அந்தச் சத்தம் அவர்களை அச்சுறுத்திற்று, நடுங்கச் செய்தது. கல்லறையை அடையுமுன் ஸராபூ பன்முறை உணர்ச்சியால் நெற்றியில் அரும்பின வியர்வையைத் துடைத்தான்.

எல்லா வேலைகளையும் அவர்கள் சிரமத்துடன் செய்தனர். அவர்கள் கல்லறையைக் கட்டினார்கள்; அதன் மீது சிலுவையை நட்டார்கள்.

"என்னை மன்னி, சிப்பாய்!" என்று தணிந்த குர லில் சொன்னான் ஸராபூ, உடம்பில் ஒட்டிக் கொண்டி ருந்த மண்ணைத் துடைத்துக் கொண்டே.

அவன் சொன்னது கால்ஜூவுக்குக் கேட்கவில்லை.

"என்ன சொன்னாய்?" என்று அவன் கேட்டான்.

"போகலாம், வா என்று சொன்னேன்." சுமை கீழே இறக்கப் பட்டதைப் போன்று அவன் பெருமூச் செறிந் தான். "நமது வேலை முடிந்து விட்டது......"

அவன் வாழ்க்கையிலேயே அத்தகைய சாந்தியை அவன் மனம் அது வரையில் அடைந்ததில்லை. இன்பத்தால் அவன் உடல் பெருத்தது.

"கால்ஜூ! படுக்க இன்னும் நேரமாகவில்லை!" என்று அவன் திடீரென்று கூறினான்.

இருளில் கால்ஜூவின் மெல்லிய குரல் தவழ்ந்தது.

"நானும் அப்படித் தான் நினைக்கிறேன். ஆனால், வீட்டுக் கூரையில் நின்று கொண்டு நான் இதைச் சொல்ல வில்லை. இது தான் வித்தியாசம்......நம் பேச்சை அவர் கள் கேட்டால் நாம் அதி விரைவில் தூங்க நேரும்! ..."

அவர்கள் ஜாக்கிரதையாக நடந்தனர். மடுக்களில் இருந்த பனிக் கட்டி அவர்கள் கால் பட்டு நொறுங்கின சத்தத்தைத் தவிர வேறு எந்த விதமான சத்தமும் கேட்க வில்லை. எதற்காகவோ இரக்கப்படுவதைப் போன்று கதவு மிருதுவாகக் கிறீச்சிட்டது. பூவரசு மரத்திலிருந்த பறவை விழித்து எழுந்து கூவிற்று.

...காலையில் கல்லறை புனர் ஜன்மம் எடுத்த செய்தி ஊரெங்கும் பரவிற்று. அப்பொழுது பெய்ப்பஸ் தடா கத்திலிருந்து குளிர்ந்த காற்று வீசிற்று. பூமியை அழகிய

பனித் திரை மூடியிருந்தது. காற்று பனிச் சுருள்களை எங்கும் இழுத்துச் சென்றது. மத்தியானம் குன்றுகளைக் கூட பனித் திரை மூடி விட்டது. ஆக்கென் பெர்கின் மோட்டார் தொழிலாளர்களின் வீடுகளைக் கடந்து சென்றதும், வீட்டிலிருந்த பெண்கள் சிரித்தார்கள்.

"சிறந்த வேலை!" என்று சிலுவையைப் பிரம்பால் தட்டி விட்டுக் கூறினான் ஆக்கென் பெர்க். "கைதேர்ந்த வேலைக்காரன் இதைச் செய்திருக்கிறான்!......"

"இங்கே மூன்று தொழிலாளர்கள் இருக்கிறார்கள்" என்று நெற்றியைச் சுளித்துக் கொண்டு கூறினான் ரூடால்ப். "தங்கள் மில்லில் வேலை செய்யும் பென்ட் அவர்களில் ஒருவன்......"

"ஆம்......நீ திரும்பிப் போ, ரூடால்ப்! பென்டைக் கைது செய்யும்படி லெப்டினென்டிடம் சொல். நான் ஸராபூ வீட்டிற்குப் போகிறேன்...சீக்கிரம் போ!"

பிரம்பை வீசிக் கொண்டு கூனன் ஸராபூ வீட்டை நோக்கி நடந்தான்.

ஆக்கென் பெர்க் கதவைத் திறந்தான். உள்ளே ஜன்னலுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தான் ஸராபூ. அவன் பாலில் 'ஓட்ஸை'க் கலந்து கொண்டிருந்தான். பிரபுவைக் கண்டதும் அவன் எழுந்திருந்து தலை வணங்கினான். பிரபுவுக்கு நாற்காலி அளிக்கும்படி அவன் மார்த்தாவிடம் கூறினான்.

ஸராபூவுக்கு முன் மார்த்தா நாற்காலியைப் போட்டாள். பிறகு அதிலிருந்த தூசியைத் தன் வெண் சட்டையால் துடைத்தாள்.

கூனன் உட்காரவில்லை. அவன் ஸராபூவுக்கு முன் நின்றான். மேலே தொங்கின மாட்டுத் தோலை அவன் கண்டான்.

"மாட்டுத் தோலை என் மாளிகைக்கு உடனே அனுப்பி விடு. நீ புத்திசாலி, ஸராபூ..." என்றான் ஆக்கென் பெர்க்.

கிழவன் தலை வணங்கினான். பிறகு அவன் சொன்னான்:

"என்னைத் தவறாக நினைக்காமல் இருக்கும்படி நான் வேண்டுகிறேன்......"

பிரபு தாழ்ந்து அருள் புரிந்தான். பிறகு அவன் சிரித்தான்.

"கடவுள் உன் பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பார்... எஸ்தோனியாவில் சோவியத் ஆட்சி மலர்ந்ததும் நீ கடவுளை நினைத்தாயா, ஸராபூ?"

கிழவன் பெருமூச் செறிந்தான்.

"நாங்கள் என்றும் பக்தர்கள்......"

"ஆம்..." என்று ஆத்திரம் கலந்த குரலில் கூறினான் பிரபு. "உங்களில் சிலர் அடிக்கடி கல்லறைக்குப் போகிறார்கள்......"

ஸராபூவின் முகம் பீதியால் இருண்டது. அவன் தணிந்த குரலில் சொன்னான்:

"அது பிரபாதத்தில் மீண்டும் காட்சியளித்தது......"

"அது எனக்குத் தெரியும். அது எப்படி வந்தது என்பது எனக்குத் தெரிய வேண்டும்!"

"அது தீமையின் விளையாட்டு!" என்று முணுமுணுத்தான் ஸராபூ.

கூனனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கூனனின் ஆந்தை விழிகள் வெடித்து விடும் போன்றிருந்தது. பிரபு வியந்தான். அது கற்பனை வியப்பல்ல. ஸராபூவின் முகக்குறி மாறிற்று. அவன் நம்பிக்கையுடன் சொன்னான்:

"நம்பிக்கை இன்மையில் பிறந்தது இது. ஜனங்களைத் தண்டிக்க வேண்டும் என்பதற்காக ஆண்டவன் பேயை விளையாட அனுமதிக்கிறான்......"

கூனன் கோபத்தை அடக்கினான். அவன் வன்மத்துடன் சொன்னான்:

"கடவுளின் போக்கு நமக்குப் புரியாது, ஸராபூ...... கடவுளின் வேலையும் நமக்கு விளங்காது. கடவுளின் கருணை எல்லையற்றது. ஆனால், நீ முட்டாள் வேஷம் போடுவதை நிறுத்த மாட்டாய் என்று நினைக்கிறேன்!"

ஆக்கென் பெர்க் வேகமாக வெளியில் சென்றான். அவன் படீரென்று கதவைச் சாத்தினான்.

கிழவன் மார்த்தாவைப் பார்த்தான். அவன் புருவத்தைச் சுளித்தான். அவன் சிரித்த பொழுது அவன் நெற்றியிலிருந்த சுருக்குகள் ஆழமாயின. ஆச்சரியத்துடன் மார்த்தா தந்தையைப் பார்த்தாள். அந்தச் சிரிப்பை அவள் அதற்கு முன் எத்தனையோ தரம் கேட்டிருக்கிறாள். ஆனால், அப்பொழுது அவன் சிரிப்பில் புதுமை தொனித்தது; அதில் போர் உணர்ச்சி தொனித்தது.

5

தொழிலாளர்கள் வசிக்கும் பிரதேசத்தில் குறுகின வீதி வளைந்து வளைந்து சென்றது. தூரத்தில் நாய் ஊளையிட்டது. வேலியில் துணிகள் தொங்கின. பனிப் புயல் பட்டு துணிகள் விறைத்திருந்தன. பனித் தூள் அவை மீது ஓயாது விழுந்தது. வேலிக்கு அருகில் உளுத்த கம்பம் நின்றது. அதில் தொங்கின பலகையைக் காற்று பலமாக இழுத்தது. அந்தப் பலகையில் பொறித்திருந்த வார்த்தைகளைப் பனித் தூள் மறைத்தது.

"......ரஷிய சிப்பாயின் கல்லறையைப் புதுப்பிக்க யாராவது முயன்ருல் ஜாமீன் கைதி சுட்டுக் கொல்லப் படுவான்!'' அந்தப் பலகையில் இது எழுதப்பட்டிருந்தது.

பனிப் புயலில் தொழிலாளர் வீட்டுக் கரிய ஜன்னல்கள் மங்கலாகத் தெரிந்தன. காற்று துக்கத்துடன் ஊளையிட்டது; கதவுகளை உலுக்கிக் குலுக்கிற்று.

6

நீதியைத் தன்னல் நிலை நிறுத்த முடியும் என்னும் நம்பிக்கை ஸராபூவுக்கு மகிழ்ச்சி அளித்தது. ஆனல், தன் உணர்ச்சியின் ஒரு சிறு பகுதியைத் தான் அவனல் வெளியிட முடிந்தது. பெரும் பகுதி சொல்லுக்கு அப்பாற் பட்டது. ஆனல், மதுவைப் போன்று அந்த உணர்ச்சி அவனை மயக்கிற்று. "வண்டியிலிருந்து குதிப்பவன் பூமியில் நிற்க வேண்டும். ஆனல், நீ இன்னும் அந்தரத்தில் தொங்குகிருய்!...'' என்று அவன் அறிவு அவனுக்குச் சொல்லிற்று.

சிந்தனை அவன் பெருமையைச் சிதைத்தது. அவன் எண்ணங்கள் சிதறின. கால்ஜூ பெண்ட் இல்லாதது வருந்தத்தக்கது.

பொறுமையின்றி ஸராபூ அங்கு மிங்கும் நடந்தான். ஜெர்மன் சிப்பாய்கள் கல்லறையைத் தரைமட்ட மாக்கு வதை அவன் கண்டதும் புன்னகை புரிந்தான். ஜன்னல் மூலம் அவன் வெளியில் எட்டிப் பார்த்தான். பிறகு கால்ஜூவை சபித்தான்.

மாலையில் கூட கால்ஜூ வரவில்லை.

அவன் வத்தியைக் கொளுத்தினன். பிறகு அடுத்த அறைக்குச் சென்று அவன் பிரார்த்தனை செய்தான். அவன்

புகை குடித்தான். பழங்கால எஸ்தோனிய வீரன் கலேவி போயெக் மீது பாடப்பட்ட பாட்டை மெதுவாகப் பாடினன். அசைந்தாடின விளக்கு ஒளி கிழவனின் முகத்தை மேலும் இருண்டதாக்கிற்று. அதில் கோபக் குறி தென்பட்டது. வேலை முடிந்ததும் வத்தித் தூள்களைக் காலால் தள்ளினன். பிறகு சிலுவையைப் பார்த்துவிட்டு, திருப்தியுடன் ஏதோ முணுமுணுத்தான்......

இரவில் பனிப்படலம் எங்கும் தோன்றிற்று. புதிய சிலுவையில் பனி விழுந்து கிடந்தது. காற்று கல்லறையில் பனித் தூளைத் தூவிற்று. மனிதன் கரம் அதைத் தொடவே இல்லையா ?

ஸராபூ மத்தியானம் தான் துயில் எழுந்தான். ஜன்னல் அருகில் நின்று கொண்டு கிழவன் நெடு மூச்சு விட்டான். பூவரசு மரத்தைச் சுற்றி நீலச் சட்டை அணிந்த சிப்பாய்கள் நடமாடினர். ஸராபூ மகிழ்ந்தான். கல்லறையைச் சுற்றி சிப்பாய்கள் நின்றது அவன் ஹிருதயத்தை நிறைத்தது. அவன் சிந்திக்க ஆரம்பித்ததும் குழம்பினன். அது வரையில் செய்தது அவனுக்குச் சாந்தி அளிக்கவில்லை. இன்னும் என்ன செய்ய வேண்டும் என்பது அவனுக்கே விளங்க வில்லை.

உணவருந்தி விட்டு பெண்டை அழைத்து வர அவன் மார்த்தாவை அனுப்பினன். அவன் கால்ஜாவின் வருகையை எதிர் பார்த்தான். ஆனல், அவன் புதல்வி அதி விரைவில் தனியே திரும்பி வந்ததைக் கண்டு கிழவன் ஆச்சரியம் அடைந்தான். அவள் பார்வையைக் கண்டதும் அவன் நடுங்கினன். பீதி தன்னை ஆட்கொள்ளுவதை அவன் உணர்ந்தான். மார்த்தா அசையாது நின்ருள். அவள் கரங்கள் ஜீவனற்றுத் தொங்கின. தலையில் சுற்றியிருந்த கைக்குட்டையை விலக்கிக் கொண்டு அவள் கூந்தல்

வெளியில் எட்டிப் பார்த்தது. அவள் மிரள மிரள விழித்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது.

"என்ன?" என்று அமானுஷ்யமான குரலில் கேட்டான்.

தன் உலர்ந்த அதரங்களை அவள் நக்கினாள். பிறகு மெதுவாகச் சொன்னாள்:

"அவனைத் தூக்கி விட்டார்கள்!........."

கிழவனின் மூச்சு அடைத்தது. அவன் கதவைத் திறந்து கொண்டு தொழிலாளர் வசிக்கும் பகுதிக்குச் சென்றான். மார்த்தா அவன் பின்னால் ஓடினாள். ஒரு போர்வை போர்த்திக் கொண்டு செல்லும்படி அவள் வற்புறுத்தினாள். அவன் தொப்பியைக் கசக்கினான். அவன் வேகமாக நடந்தான். பிறகு நெடுமூச்சு விட்டுக் கொண்டு அவன் ஓடினான்.

வீதி காலியாக இருந்தது. காற்று பலமாக வீசிற்று; தூக்கு மரத்தில் தொங்கும் பென்டை அது தாலாட்டிற்று.

ஸராபூ பின்வாங்கினான். அவன் சக்தி அவனிடம் விடை பெற்றது. பிணத்தைப் பீதியுடன் பார்த்துக் கொண்டு அவன் அசையாது நின்றான். பலகையில் பொறித்திருந்த வார்த்தைகளை அவன் கண்டான். அவை அவன் கண் முன் சிறிது நேரம் நர்த்தனமாடின. பிறகு அவை தெளிவாகத் தெரிந்தன. பயங்கரமான வார்த்தைகள்! அவன் நிலை குலைந்தான்! அவன் கதறி அழுதான்!

"கால்ஜு......எனக்குத் தெரியாது......"

உணர்ச்சி இழந்த அவன் பென்டின் தேகத்தை அணுகினான். அவன் நடுங்கிக் கொண்டே அவன் கால்களைத் தடவினான்.

நான்கு ஜெர்மானியர் அங்கே தோன்றினர். ஸராபூவைக் கண்டதும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். பிறகு அவர்கள் ஸராபூவை அணுகினர்.

ஒரு ஜெர்மன் அதிகாரி கிழவனைப் பிடித்துக் குலுக்கினான்.

" நீ இங்கே என்ன செய்கிறாய்? "

ஸராபூ ஜெர்மானியனை வெறித்துப் பார்த்தான்.

" அங்கே தொங்குவது உன் காதலியா?......"

ஜெர்மானியர் கொக்கரித்தனர். கிழவனின் கண்கள் சுடர் விட்டு எரிந்தன.

" இங்கே என்ன செய்கிறாய்? அந்தப் பக்கம் பார்! கண்ணை மூடிக் கொண்டு வீட்டிற்கு நட!"

காற்று பலமாக வீசிற்று. அது பனிக் கட்டிகளை வானத்திற்கு இழுத்துச் சென்றது. ஸராபூ தடுமாறினான். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் பனி அவனை மூடியிருந்தது. சிரமத்துடன் அவன் குன்றின்மீது ஏறினான். அங்கிருந்து அவன் பிரபுவின் மாளிகையை உற்றுப் பார்த்தான். அவன் கண்கள் அசாதாரணமாகப் பிரகாசித்தன. அவன் தெளிவான குரலில் சொன்னான்:

" கனவான்களே! நான் செய்வேன்.........கண்டிப்பாகச் செய்வேன்........."

ஸராபூ வீட்டை நோக்கி நடந்தான். ஆனால், அவன் வீட்டில் பிரவேசிக்கவில்லை. இடிந்து கிடக்கும் கல்லறைக்கு அவன் சென்றான். நீண்ட நேரம் அவன் அங்கேயே சிலையைப் போல் நின்றான். அவன் சிப்பாயுடன் மானசிகமாகப் பேசினான். அந்த அமைதியான நேரத்தில் பூமி அவனுடன் பேசிற்று. அந்த அமைதி சாரம்

நிறைந்தது. ஜெர்மனியோ, லட்சக்கணக்கான குரல்களோ ரஷிய சிப்பாயின் கல்லறையை அமிழ்த்தி விட முடியாது என்பதை அவன் அப்பொழுது உணர்ந்தான்.........

துன்பம் நிறைந்த தன் ஹிருதயத்தின் ஒலியைக் கேட்பதாக அவன் சந்தேகப்படக்கூட இல்லை.

7

ஸாரா சமையல் அறைக்குத் திரும்பின பொழுது அவன் முதுகு பார்க்கப் பயங்கரமாக இருந்தது. மார்த்தா சமைத்துக் கொண்டிருந்தாள். கண்ணீர் நிறைந்த கண்களால் அனுதாபத்துடன் தந்தையைப் பார்த்தாள் அவள். பிறகு அவள் கதறி அழுதாள்.

அங்கே கிழவன் சிறிது நின்றான். அவன் புது மனிதன். பிறகு மெத்தையில் உட்கார்ந்தவன் மாலை வரையில் அசையவே இல்லை.

முகப்பில் காலடிச் சத்தம் கேட்டதும் மார்த்தா திகில் அடைந்தாள். அவள் மெழுகு வத்தியைக் கொளுத்தினாள்.

கதவைத் திறந்து கொண்டு நீலச் சட்டை அணிந்த இரண்டு ஜெர்மானியர் அறையில் பிரவேசித்தனர்.

“இங்கே நாம் குளிர் காயலாம்” என்றான் அவர்களில் ஒருவன். “ஒருவன் காவல் காத்தால் போதும். ஒருவன் காவல் காக்கும் பொழுது இன்னொருவன் குளிர் காயலாம்.”

கட்டுக் கட்டியிருந்த தன் தொண்டையை மற்றொரு சிப்பாய் தடவினான்.

இடயா! விருந்தினரை உபசரி!” என்றான் ஒரு சிப்பாய். “உன் வீட்டில் வோட்கா இல்லையென்று

சொல்லி விடாதே! நீ குடிகாரன் என்பது உன் கண்ணைப் பார்த்தால் தெரிகிறது."

ஸராபூவின் முகத் தோற்றம் திடீரென்று மாறிற்று. அவன் புன்னகை புரிந்தான்.

"உங்களுக்கு நேரமிருந்தால்........."

"ஆம்" என்று கூறிவிட்டு வன்மத்துடன் சிரித்தான் ஜெர்மன் சிப்பாய். "வேடிக்கை செய்கிறவர்களைப் பிடிக்க நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்......ஆனல், அதற்கும் உனக்கும் சம்பந்தமில்லை. எங்களுக்குப் பதிலாக வேறு சிப்பாய்கள் வரலாம். ஆனல் குடிக்க எங்களுக்கு அவகாசம் இருக்கிறது."

கிழவன் புன்னகை புரிந்தான்.

"காலம் கடந்து வருகிறவர்களுக்கு எலும்பு தான் கிடைக்கும் என்பது பழமொழி என்றாலும் ஸராபூ லோபியல்ல" என்று கூறிக் கொண்டே அவன் அங்குமிங்கும் நடந்தான்.

ஜெர்மன் சிப்பாய் விரல்களில் மூச்சு விட்டான்; விரல்களை நெருப்பில் காட்டினன். பிறகு அவன் சிரமத்துடன் சிகரெட் சுற்றினன். இருமிக் கொண்டும், காறி உமிழ்ந்து கொண்டும் தன் நண்பன் இருக்கும் இடத்திற்குச் சென்றான் அவன்.

"வா, இடயா! நீயும் கொஞ்சம் குடி" என்று அவன் கனத்த குரலில் சொன்னன். "அதில் விஷம் கலந்திருக்கிறதா என்பது தெரிய வேண்டும்."

ஸராபூ திருப்தி அடைந்ததாக நடித்தான். ஒரே வாயில் கோப்பையிலிருந்த வோட்கா பூராவையும் குடித்தான்.

"உங்கள் தேகாரோக்கியத்திற்காக!"

"சரி! நீ போ! எங்களைக் கண்காணிக்காதே! கண் காணித்தால் காதைத் திருகி விடுவேன்."

ஸராபூ அவர்களுக்குத் தலை வணங்கி விட்டு மூலையில் போய் உட்கார்ந்தான்.

மார்த்தா மூலையில் சுருண்டு கிடந்தாள். குழந்தை விரோத உணர்ச்சியுடன் ஜெர்மானியரைப் பார்த்தது. ஒரு சிப்பாய் ஆபாசமான கதைகள் சொன்னான்; இன்னொருவன் மதுவைப் பற்றிப் பேசினான். அவர்கள் மேஜையிலிருந்த எல்லாவற்றையும் தின்றார்கள். பிறகு துப்பாக்கியைத் தோளில் மாட்டிக் கொண்டு ஒரு சிப்பாய் வெளியில் சென்றான்.

ஸராபூ மார்த்தாவிடம் மெதுவாகச் சொன்னான்:

"என்டெலை அழைத்துக் கொண்டு துவல் அத்தை வீட்டிற்குப் போ." அவன் கதவைச் சுட்டிக் காட்டினான். "அங்கே போய் உடை அணிந்து கொண்டு கொல்லைக் கதவு வழியாக வெளியேறு.....!"

ஜெர்மானியன் நெருப்புக்கு அருகில் உட்கார்ந்தான். அவன் பார்வை மார்த்தா மீது விழுந்தது. அவள் அதைக் கவனித்தாள். தன்னை அறியாமலே அவள் நகர்ந்தாள். என்டெலைத் தூக்கிக் கொண்டு அவள் கதவை நோக்கி நடந்தாள். சிறுவன் ஜெர்மானியனைப் பார்த்து நாக்கை நீட்டினான்.

"சுட்டிப் பயல்!" என்றான் சிப்பாய். அவன் குரைத்துக் கொண்டே கிழவனைக் கேட்டான்: "அவள் எங்கே போகிறாள்?"

கிழவனுக்கு அந்தக் கேள்வி தெளிவாகக் கேட்கவில்லை யென்றாலும் அவன் அதை ஊகித்து அறிந்தான்.

"அவள் குழந்தையைப் படுக்க வைக்கிறாள்'' என்று ஸராபூ அமைதியாகக் கூறினான்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர் கதவு படாரென்று சாத்தப்படும் சத்தத்தைக் கேட்டு ஜெர்மானியன் குதித்து எழுந்தான்.

"நீ பொய் சொல்லுகிறாய், இடயா! அவள் வெளியே போய் விட்டாள்!''

கிழவன் விழுந்து விழுந்து சிரித்தான்.

"நீ என்ன சொல்லுகிறாய்? நான் அவளைக் கூப்பிடட்டுமா?''

சிப்பாய் சாந்தம் அடைந்தான்.

"அவளை உள்ளே அனுப்பு!......அவள் என்னுடன் இருக்கட்டும்......ஆனால், நான் உன்னை நம்ப முடியாது. நானே அவளைக் கூப்பிடுகிறேன்......''

சிப்பாய் கதவை நோக்கி நடந்தான். ஆனால், ஸராபூ அவனுக்குக் குறுக்கே நின்றான்.

"நீ எங்கே போகிறாய், முட்டாள்?'' என்று அவன் கோபத்துடன் கேட்டான்.

ஜெர்மானியன் ஆச்சரியம் அடைந்தான். அவன் பீதியுடன் பின்வாங்கினான். கிழவனின் கண்களை அவன் இமை கொட்டாது பார்த்தான். ஸராபூ அவன் கழுத்தைப் பிடித்து அவன் தலையைச் சுவரில் மோதினான். சிப்பாயின் தொப்பி கீழே விழுந்தது. நடுங்கிக் கொண்டே அவன் தரையில் சாய்ந்தான்.

"இன்னும் நீ சாகவில்லையா?'' என்று நெடுமூச்சு விட்டுக் கொண்டு கேட்டான் ஸராபூ.

அவன் ஜெர்மானியனைக் கட்டினான். பிறகு அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

"கோடாலி எளிதாக இருக்கும்" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான் ஸாரபூ. "ஆனால், அது கொலையாய் விடும்......"

ஜெர்மானியன் தன்னுணர்வு பெற்றான். அவன் கூச்சலிட முயன்றான். அவன் குரல் வெளியில் கேட்க வில்லை.

கிழவன் அவனை உற்றுப் பார்த்தான்.

"என்ன? உன் உடம்புக்கு என்ன?" கிழவன் கைகளை விரித்தான். "என்னிடம் இருப்பதை உனக்குத் தருகிறேன். அதை நீ தேட வேண்டாம்" தன் கையி லிருந்த கயிறை அவன் குலுக்கினான்.

கிழவன் சுருக்குப் போட்டான். ஜெர்மானியன் அழுதான்.

"கடவுளை நீ நம்பினால், பிரார்த்தனை செய், புழுவே!" என்று வெறுப்புடன் கூறினான் ஸாரபூ. "பிரார்த்தனை செய். ஏதோ நடக்கப் போவதை நீ உணர்கிறாயா?......"

பயத்தால் ஜெர்மானியன் கண்கள் விரிந்தன. அவன் கிழவனையே பார்த்துக்கொண் டிருந்தான்.

ஜெர்மானியன் கிடந்த பக்கம் திரும்பிக்கூடப் பார்க் காமல் ஸாரபூ சுருக்குகள் தயார் செய்தான். பிறகு ஜெர்மன் சிப்பாயின் யந்திரத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வெளியில் சென்றான்.

புயல் பலமாக வீசிற்று. சிப்பாய் பயத்துடன் சுற்று முற்றும் பார்த்தான். பிறகு வெகு நேரம் அசையாது படுத்திருந்தான். அவன் சிணுங்கினான், துடித்தான், நகர முயன்றான். ஆனால், அவனால் நகர முடியவில்லை. அவன் கோபத்துடன் தரையில் புரண்டான். இதனால் அவன் கைகளைப் பிணைத்திருந்த சுருக்கு சிறிது தளர்ந்தது.

மிருகத்தனமான வேகத்துடன் அவன் இடைவிடாது தரையில் புரண்டான். இறுதியில் அவன் சோர்ந்து படுத்தான். சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு அவன் மீண்டும் கட்டை நகர்த்த முயன்றான். அப்பொழுது ஸராபூ அங்கே பிரசன்னமானன்.

திறந்த கதவு வழியே காற்று உள்ளே பலமாக வீசிற்று. மெழுகு வத்தி நடுங்கி அணைந்தது. நெருப்பின் மங்கின வெளிச்சத்தில் ஸராபூ அங்கு மிங்கும் நடந்தான். அவன் ஒளி வீசும் கண்கள் மின்னின.

அவன் நெடுமூச்சு விட்டான்; தோட்டாக்கள் நிறைந்த பையை பெஞ்சு மீது எறிந்தான்; மூக்கைச் சட்டையில் துடைத்தான்; அவன் அதரங்களில் ரத்தக் கறை தெரிந்தது. அவன் தரையில் எதையோ துப்பினன். பெஞ்சில் உட்கார்ந்ததும் அவன் கண்களை மூடினன்; பெருமூச் செறிந்தான். அவன் கண் முன் பெண்டின் உருவம் தோன்றிற்று. அந்தப் பயங்கரக் காட்சியைக் காணுமல் இருப்பதற்காக அவன் கண்களைத் திறந்தான். அவன் ஜெர்மானியனை உற்றுப் பார்த்தான். பிறகு மெதுவாக அவனை நோக்கி நடந்தான். அந்த இருளில், நெருப்பின் மங்கின வெளிச்சத்தில் அரக்கனைப் போன்று காட்சி அளித்தான் ஸராபூ. சிப்பாய் பயந்தான்.

"குழந்தைகள்......எனக்குக் குழந்தைகள் இருக்கின்றன......எனக்குப் பண்ணையும் இருக்கிறது...... செய்யாதே...கேள்......நான் ஒரு ரகசியத்தைச் சொல்லுகிறேன். என்னிடம் தஸ்தாவேஜிகள் இல்லை......ஆனல் நான் கம்யூனிஸ்டு......உனக்குப் பணம் வேண்டுமா?...... கேள்......"

"பேசாதே, புழுவே! பேசினல் கட்டுகளை அவிழ்த்து விட்டு உன்னை அடிப்பேன்..........."

ஸாபூ குனிந்து சிப்பாயின் காதைப் பிடித்துக் குலுக்கிவிட்டுக் கடுமையான குரலில் சொன்னான்:

"உன் நண்பனைத் தூக்கிலிட்டு விட்டேன். உனக்கும் அதே கதிதான்."

அவன் கோபத்துடன் ஜெர்மானியனின் வலது கண்ணில் துப்பினான். பிறகு அழுகின மாமிசத்தை இழுத்துச் செல்வதைப் போன்று அவனை வெளியில் இழுத்துச் சென்றான்.

பனிக் கட்டியில் அவன் கால்கள் சிக்கிக் கொண்டன. பூவரசு மரத்தை அடைந்ததும் அவன் சோர்ந்து விட்டான். இருளில் அவனால் எளிதில் சுருக்கைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிரமத்துடன் ஸாபூ சுருக்கைக் கண்டு பிடித்தான். அவன் ஜெர்மானியன் கால்களைப் பற்றி இழுத்தான்.

"அவனைப் பின் தொடர்ந்து ஓடு......பிறர் உன்னைப் பின் தொடருவார்கள்..." என்று அவன் கூச்சலிட்டான்.

கிழவன் முணுமுணுத்தான். ஜெர்மானியனை உயரச் சுமந்து சென்றான். அவன் கழுத்தில் சுருக்கை மாட்டி விட்டு அவனைக் கீழே எறிந்தான். சிறிது நேரம் மரக்கிளை கிரீச்சென்று ஒலித்தது......ஸாபூ கால்சட்டையில் கைகளைத் துடைத்துவிட்டு, வெறுப்புடன் அப்பால் சென்றான்.

அது வரையில் அவன் அசாதாரண உணர்ச்சியுடன் எல்லாவற்றையும் மௌனமாகச் செய்தான். ஆனால், வேலை முடிந்ததும் அவன் கோபத்தால் துடித்தான். அவன் வெறியுடன் மிருகத்தனமாகக் கூவினான்:

"மாமிசம்!......ஹிருதயமற்ற பேய்!......ஜெர்மானியர்களே, நான் உங்களை வெறுக்கிறேன்!......"

பேரொளி அவனைக் குருடாக்கிற்று. ஸராபூ நடுங்கினன். அவன் ஹிருதயம் ஒடுங்குவதை அவன் உணர்ந்தான். அவன் எங்கே இருக்கிறன் என்பதை உணரு முன் கண்ணுக்குத் தெரியாத கரங்கள் அவனைப் பற்றி, அவனைக் கீழே தள்ளின. அவன் தொப்பி கீழே விழுந்தது. அவனை அவர்கள் இறுகப் பிடித்தனர்.

தூக்கு மரத்தில் தொங்கும் ஜெர்மானியர் மீது ஒளி விழுந்தது. அந்த ஒளியில் பனிச் சுருள்கள் நர்த்தனமாடின. விளக்கு அணைந்தது. மீண்டும் கிழவன் முகத்தில் ஒளி விழுந்தது.

"அதிசயத்திலும் அதிசயம் !...... ஸராபூ தாத்தா ஜெர்மானியரைத் தூக்கிலிடுகிறார்!" என்றுன் தூம்பூ.

ஒளியால் கிழவன் கண்கள் கூசின. தன் காதுகள் தன்னை ஏமாற்றுவதாக அவன் நினைத்தான். அவன் முகத்தை வேறு பக்கம் திருப்பினன்.

"விதை விதைத்தவன் கதிர் அறுப்பான்" என்று அவன் முரட்டுத்தனமாகக் கூறினன்.

"உண்மை தான்" என்றுன் தூம்பூ. "நீதியை மதிக்கிறவன் இன்று காட்டில் இருக்க வேண்டும். சதுப்பு நிலத்துக்கு அப்பால், கட்டைகள் குவிந்து கிடக்கும் இடத்தில, நீ நண்பர்களைக் காண்பாய்! கல்லறைக்காக அவர்கள் உனக்கு வணக்கம் செலுத்துவார்கள். இப்பொழுதே எங்களுடன் வந்து விடு. பிரபுவின் மாளிகைக்கு நாம் விஜயம் செய்வோம். மரத் தொழிற் சாலையை அக்னி தழுவும்படி செய்வோம்......துப்பாக்கி பால் கொடுக்காது என்றுலும் அது மோசமானது என்று இப்பொழுது நீ சொல்ல மாட்டாய்."

ஸராபூ அப்பொழுதுப் பெருமூச் செறிந்து கொண்டிருந்தான்.

"நான் இப்பொழுது வர முடியாது. கல்லறையின் சிலுவையை நட வேண்டும். சதுப்புநிலையா? அதை நான் கண்டு பிடிப்பேன். நீ பிறக்கு முன்னரே அந்தக் கானகத்தின் ஒவ்வொரு பகுதியும் எனக்குத் தலை கீழாகத் தெரியும்."

இருளில் ஜனங்கள் சிரித்தார்கள். ஜம்பூ சிரித்துக் கொண்டே சொன்னான்:

"கிழவன் பொல்லாதவன்......போய் வருகிறோம், தாத்தா ஸராபூ!"

கிழவன் அங்கே தனியே நின்றான். பனிக் கட்டி சுழன்றது. குளிரால் நடுங்கின ஸராபூ பூவரசு மரத்தை விட்டு அகன்றான்.

அவன் வீட்டிற்குள் சென்று கதவைத் தாளிட்டான். நெருப்பு அணைந்து விட்டது. எனினும் அவன் அதில் சிறிய கட்டைகளை எறிந்தான். பிறகு மேஜை மீது உட்கார்ந்து புகை குடிக்க ஆரம்பித்தான்.

பழைய பூவரசு மரம் கிறீச்சென்று ஒலித்தது. புயல் மேலே ஊளையிட்டது. காற்று மரப் பலகைச் சுவர்களைக் குலுக்கிற்று. அவனுக்கு எல்லாம் கேட்டன. கோவில் மணி அடிக்கும் சத்தம் காற்றில் தவழ்ந்து வந்தது...... வயல்களில் புயல் அடிப்பதையும், குழிகளில் பனிக் கட்டிகள் நிறைந்திருப்பதையும், கல்லறைக்கு மேலே நிற்கும் பூவரசு மரம் காற்றில் அசைந்தாடுவதையும் அவன் மனக் கண்ணால் கண்டான்.........

இறந்தவனின் மங்கின உருவம் ஸராபூ கண் முன் தோன்றிற்று. அவன் கிழவனை வேண்டினான்; அழிக்க முடியாத, ஜீவ சக்தி நிறைந்த நீதி உணர்ச்சி சிப்பாயின் சவத்தில் குடி கொண்டிருப்பதை கிழவன் உணரும்படி செய்தான்.

"ரஷியர்களுக்குத் தெரியும் விஷயங்கள் எல்லாம் எனக்குத் தெரியாது, சிப்பாய் !......" என்று முணுமுணுத்தான் ஸாபூ. "எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியாது......"

அவன் மீண்டும் பெருமூச்சு விட்டான். விளக்கு படபட வென்று அடித்தது—நடுங்கிற்று. கிழவனுக்குத் தலை வணங்குவதைப் போன்று நிழல்கள் அசைந்தாடின. அவன் தாழ்ந்த குரலில் பாடினான் ஆனால், பாட்டு அவனுக்கு மறந்து விட்டது. அவன் விட்டு விட்டுப் பேச ஆரம்பித்தான்.

"அது...அதோ...இருக்கிறது...ஆனால் நாம் சும்மா இருக்கக் கூடாது...இதை...நாம்...செய்யக் கூடாது... அவர்களை நாம் நசுக்குவோம்...புழுக்களைப் போல்......"

சிலுவை தயாரானதும் கிழவன் நிமிர்ந்து நின்றான். பிறகு விளக்கை அணைத்து விட்டு கோடாலியையும், சிலுவையையும் எடுத்துக் கொண்டு வெளியே சென்றான்.

புயல் ஓய்ந்தது. காற்று அப்பொழுதும் வீசிற்று. ஆனால், அதில் பழைய வேகம் இல்லை. அது நாய்க் குட்டியைப் போன்று பரிதாபகரமாக ஊளையிட்டது. பனிச் சுருள்கள் காற்றில் தவழ்ந்து சென்றன. அவை கலகலவென்று ஒலித்தன. இந்தச் சத்தத்துடன் ஸாபூ சிலுவை நட்ட பொழுது ஏற்பட்ட சத்தம் கலந்தது. அந்தச் சத்தம் இரவின் அமைதியைக் குலைத்தது; அந்தச் சத்தம் சதுப்பு நிலம் வரையில் கேட்டது.

ஸாபூ சிலுவையைக் கல்லறை மீது நட்டதும் வானத்தில் செவ்வொளி பரந்தது. தோப்புக்கு அப்பால் மரத் தொழிற்சாலையிலிருந்து எழுந்த தீயின் ஜுவாலை வானத்தைத் தழுவிற்று. நெருப்பின் ஜுவாலை மேகத்தைச்

செங்கிற மாக்கிற்று. குண்டுச் சத்தப் காற்றில் தவழ்ந்து வந்தது.

கிழவன் வன்மத்துடன் சிரித்தான்.

"நல்ல வேலை செய்தாய், தாய்பூ!" என்று சிரிப்புக்கிடையே ஸராபூ முணுமுணுத்தான். "உன்னை வெகு தூரத்திலிருந்து காண முடிகிறது."

கிழவன் விழுந்து விழுந்து சிரித்தான். பிறகு சிரிப்பதை நிறுத்தி விட்டு முகத்தைச் சுளித்தான். அவன் உறுதியுடன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் பெட்டியைத் திறந்து புதிய தொப்பியையும், கை உறையையும், கம்பளித் துண்டையும் எடுத்தான். பேரன் சட்டை மீது அவன் பார்வை விழுந்தது. அந்தச் சட்டையைத் தன் முரட்டுக் கரங்களால் அவன் மிருதுவாகத் தடவினான். பிறகு அவன் உடை அணிந்து கொண்டான்.

துப்பாக்கியைக் கையில் வைத்துக் கொண்டு கதவில் நீண்ட நேரம் நின்றான். அந்த வீட்டில் அவன் வாழ்ந்த வாழ்க்கையை—துன்பம் நிறைந்த பல வருடங்களை—அவன் எண்ணிப் பார்த்தான்...அவன் வாழ்க்கையில் இன்பம் நிறைந்த நாட்களும் இருந்தன. ஆனால், அந்த நாட்களை நினைக்க அவன் வெட்கினான். ஊமையைப் போன்ற வாழ்க்கை இனி அவன் வாழ மாட்டான்!

சிந்தனையுடன் மிஞ்சி யிருந்த கட்டைகளைத் தீயில் எறிந்தான். திடீரென்று, வழக்கத்தால் தூண்டப்பட்டு, புகை போக்கிக்கு அருகிலிருந்த பெஞ்சில் அவன் உட்கார்ந்தான். உடனே அவன் எழுந்து நின்றான். சம்பவங்கள் நடந்த முறையைக் கண்டு அவன் கவலை அடைந்தான். அவன் நடந்தான். மீண்டும் ஒரு முறை சுற்று முற்றும் பார்த்தான். பிறகு கதவைச் சாத்திக் கொண்டு அவன் வெளியே சென்றான்.

அவன் வீட்டைச் சுற்றி நடந்தான். பிறகு கல்லறை இருக்கும் திசையைப் பார்த்தான்.

"போய் வருகிறேன், சிப்பாய்!" என்று முணு முணுத்தான்.

"நான் திரும்பி வந்ததும் மிகச் சிறந்த கல்லறை கட்டுவேன்! பளிங்குக் கற்களாலும், கருங் கற்களாலும் உன்னதமான கல்லறை கட்டுவேன்!"

கோபத்துடன் தலையைக் குலுக்கினான். பிறகு பனி மூடின செந்நிற மேய்ச்சல் நிலத்தில் வேகமாக நடந்தான்.

கானகத்தின் ஓரத்தை அடைந்ததும் அவன் மூச்சு தடைப்பட்டது. அவனுக்கு முன் கரிய, மாயமான மரங் கள் தோன்றின. கோபம் அடைந்த ஜனங்களின் முணு முணுப்பைப் போன்று தேவதாரு மரங்கள் தாழ்ந்த குரலில் பேசின......வேனிற் காலத்தில் துளிர்க்கும் இன் பம் கொஞ்சும் புல்லைத் தான் பார்ப்பதாக அவன் நினைத் தான்......பசுக்கள் அங்கு மிங்கும் அலைந்து திரிந்தன. அவை கழுத்தில் கட்டியிருந்த மணிகள் கிலுங்கின...... இடையர்கள் மதுரமாகக் குழல் வாசித்தனர்......

கற்பனை ஒலிகள் கானகத்தில் கலந்தன. அந்த ஒலி களைப் பின்தொடர்ந்த கிழவனும் கானகத்தின் இருளில் கலந்தான்.

ரோஜா நிறப் பனிக் கட்டி வயல்களில் கலகலவென்று ஒலித்துக் கொண்டு தவழ்ந்து சென்றது; பிரபாதம் சிவப்பு மை தீட்டின கனத்த மேகங்கள் வானத்தில் ஒன்று திரண்டன.

சித்திரம்

[போரிஸ் லாவ்ரானவ்]

விக்டர் ஆன்ட்ரேரியெவிச் லிக்கோஷின் எங்கள் ரெஜிமென்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் நாங்கள் ஆச்சரியப்பட்டோம்; உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நாங்கள் ஆத்திரப்பட்டோம்.

நாங்கள் அத்தனை பேரும் வாலிபர்கள். இருபத்தி ஐந்து வயதுக்கு மேல் யாருக்கும் இராது. நாங்கள் இன்பமாகக் காலம் கழித்தோம். போர் புரியும் பொழுது கூட வேடிக்கையாகப் பேசுவோம். போருக்குப் பிறகு நாங்கள் வேடிக்கையாகப் பொழுதைக் கழிப்போம். வேடிக்கையாகப் பேசுவதில் பெயர் பெற்றவர்கள் எங்களுடன் இருந்தார்கள். இசைக் கருவிகளும் எங்களிடம் இருந்தன. ஒடீஸாவைச் சேர்ந்த மோன்யா கிர்ஷ்மான் ரொம்ப அழகாக பிடில் வாசிப்பான். அவன் சங்கீதத்தைக் கேட்டு விலங்குகள்கூட அசையாது நின்று விடும். சிலர் நன்ருகப் பாடினர்கள். மொத்தத்தில் எல்லோரும் நல்லவர்கள்.

திடீரென்று ஐம்பது வயதான ஒருவன் எங்கள் ரெஜிமென்டுக்கு வந்து விட்டான். அவன் நரைத்த குறுகின தாடி கவர்ச்சி அற்றிருந்தது. அவன் உற்சாகமற்றவன். அவனிடமிருந்த துப்பாக்கி மிகப் பெரிது. நாங்கள்

ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு தோளைச் சுருக்கினோம். எல்லோர் மனமும் ஒரே விதமான கேள்வியைக் கேட்டது: "இதன் பொருள் என்ன? இவனை நாம் போர் முனைக்குச் சுமந்து தான் செல்ல வேண்டும்!"

அவன் துப்பாக்கியைக் கீழே வைத்து விட்டுப் பழைய பாணியில் எங்களை வணங்கினான். பிறகு அவன் மெதுவாகச் சொன்னான் :

"இந்த ரெஜிமென்டுக்கு என்னை அனுப்பினார்கள், தோழர்களே! உங்களைச் சந்தித்ததில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நாம் சந்தோஷமாகக் காலம் தள்ளுவோம் என்று நம்புகிறேன்."

நாங்கள் மௌனமாக நின்றோம். ஆனால், வாஸ்கா பாலானினால் குத்தலாகப் பேசாமல் இருக்க முடியவில்லை. வாஸ்காவின் நாக்கு நீளமானது! அவன் பேச ஆரம்பித்தால் அதற்கு முடிவே இராது. அவன் பேச ஆரம்பித்தான்.

"தாத்தா! நீ திருகாணி கொண்டு வந்திருக்கிறாயா?"

வாஸ்கா கேலி செய்கிறான் என்பதை விக்டர் ஆன்ட்ரெயெவிச் தெரிந்து கொள்ளவில்லை. அவன் இந்தக் கேள்வியை உண்மையானதாக மதித்தான். போர்முனையில் திருகாணி கிடைப்பது மிகக் கஷ்டம். ஒரு வாலிபனுக்கு திருகாணி தேவைப் படுவது நியாயம் தானே! அவன் எதையாவது சுவரில் மாட்ட விரும்பலாம். அவன் கவலையுடன் கூறினான் :

"என்னிடம் திருகாணி இல்லையே! நான் திருகாணி கொண்டு வரவில்லை. என்னிடம் ஒரு ஊசியும், பஞ்சும் இருக்கிறது. அவ்வளவு தான்!"

அதன் பிறகு வாஸ்கா தங்கு தடையின்றிப் பேசினன். சிரித்துக் கொண்டே அவன் சொன்னான் :

" இது வருந்தத்தக்கது, தாத்தா! இது ரொம்ப வருந்தத்தக்கது. நீ திருகாணி கொண்டு வராதது ஆச்சரியம் தான். நீ சின்ன பிள்ளையாகச் சிதறினல் நாங்கள் என்ன செய்வது? உருக் குலைந்த உன் அவயவங்களை எவ்வாறு பொருத்துவது?"

நாங்கள் விழுந்து விழுந்து சிரித்தோம். ஆனல், விக்டர் ஆன்ட்ரெயெவிச் அவனை அமைதியாகப் பார்த்துக் கொண்டே சொன்னான் :

" எல்லோரிடமும் குறைகள் இருக்கின்றன என்பதை உனக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். நான் திருகாணியை வீட்டில் வைத்து விட்டு வந்தேன். ஆனல், உன் நாக்கின் பூட்டை நீ தொலைத்து விட்டாய்! நாம் ஏன் ஒருவரை ஒருவர் கேலி செய்ய வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை."

அவன் சொன்னதைக் கேட்டு நாங்கள் வெட்கித் தலை குனிந்தோம். வாஸ்காவின் முகம் நாணத்தால் சிவந்தது. அவன் தன்னுணர்வு பெற்றான்.

"நான் வருந்துகிறேன், தோழா! உன்னை அவமானப் படுத்த நான் நினைக்கவில்லை. உன்னைக் கொஞ்சம் கேலி செய்ய முயன்றேன். இது என் பலஹீனம்" என்றான் வாஸ்கா.

"நானும் உன்னைப் புண்படுத்த விரும்பவில்லை. எல்லோரும் சேர்ந்து போர்புரிய வேண்டிய காலத்தில் ஏன் ஒருவரை ஒருவர் தாக்க வேண்டும்?"

அவன் எங்கள் மதிப்பைப் பெற்றான். அவனை நாங்கள் நேசித்தோம். அவன் தாராள மனம் படைத்தவன்.

எல்லோரிடமும் அன்பாகப் பேசினன். அவன் பலஹீன மானவனுகக் காணப்பட்டாலும், உண்மையில் அவன் பலஹீனமானவனல்ல. அவன் உரமான வயோதிகன். அவன் எதிலும் பின்தங்கவில்லை. தன் திறமையால் அவன் என் ஹிருதயத்தைக் கவர்ந்தான். அவன் சைத்ரிகன். அவனிடம் சில நோட் புத்தகங்களும், வர்ணப் பென்சில்களும் இருந்தன. ஓய்வு கிடைத்த பொழுதெல்லாம் அவன் சித்திரங்கள் வரைந்தான். அவன் எங்கள் சித்திரங்களை வரைந்தான். அவை தத்ரூபமாக இருந்தன. படத்தைப் பார்த்தால், அதில் நாங்கள் உயிருடன் இருப்பதாகத் தோன்றும். அவன் கிராமக் காட்சிகளையும் வரைந்தான். ஒரு நாள் இறந்து கிடந்த ஜெர்மானியன் படத்தை அவன் வரைந்தான். வீதிக்கு அப்பால் அவன் சாக்கடையில் கிடந்தான். ஆபாசமான, கொழுத்த ஜெர்மானியன் அவன். அவன் கைகள் நீண்டு கிடந்தன. விரல்கள் பூமியைப் பற்றிக் கொண்டிருந்தன. அவன் கண்கள் திறந்திருந்தன. மரணத்தில் கூட அவை ஓநாயின் கண்களைப் போன்றிருந்தன. நாங்கள் அந்தச் சித்திரத்தைப் பார்த்து வியந்தோம். காகிதத்தில் வரையப்பட்ட அந்தச் சித்திரம் ஜெர்மானியனின் கொடிய ஹிருதயத்தைப் படம் பிடித்துக் காட்டிற்று. கொலை செய்யவும், சித்திரவதை செய்யவும், சூறையாடவும் நமது நாட்டிற்கு வந்த ஜெர்மானியனின் சித்திரம் அது. உயிர் ஓவியம் அது. அதைக் கண்டு நாங்கள் வெறுப்பால் துடித்தோம்.

போர்க் களத்திலும் விக்டர் ஆன்ட்ரெயெவிச் வியக்கத்தக்க முறையில் தீரத்துடன் போர் புரிந்தான். நிதானம் தவருத போர் வீரன் அவன். விக்டர் கலங்கினதை நாங்கள் கண்டதே இல்லை. குறி பார்த்துச் சுடுவதில் அவன் நிபுணன். எங்கள் ரெஜிமென்டிலுள்ள தலை சிறந்த போர் வீரர்களில் அவனும் ஒருவன். நாங்கள் நெருங்கிப்

பழகினேம். எனவே வயதிலுள்ள வித்தியாசத்தை நாங்கள் மறந்து விட்டோம். நிலைமைக்குத் தகுந்தவாறு நடந்து கொள்வதில் அவன் நிபுணன். கேலி செய்யவும் அவன் தயங்கவில்லை. அவன் நல்ல ரசிகன். ஆனல், யாராவது கடுமையாகப் பேசினுல் அதை அவன் சகிக்க மாட்டான். அப்படி யாராவது பேசினுல் அவன் வதனம் கவலையால் இருண்டு விடும். அவன் பார்க்கும் பார்வையில் அந்த மனிதன் குறுகுவான்.

அந்தத் தாக்குதல் ஆரம்ப மாவதற்குச் சில வாரங் களுக்கு முன் நாங்கள் பின்னணியில் ஓய்வுக்காகத் தங்கினேம். அன்று மாலை தேநீர் அருந்த நாங்கள் சுரங் கத்தில் ஒன்று கூடினேம். அது கார் காலம். மழை இடைவிடாது பெய்தது. ஆனல், சுரங்கம் வசதியாக இருந்தது. சிலர் வீட்டைப் பற்றியும், உறவினர்களைப் பற்றியும், காதலிகளைப் பற்றியும் பேசினர். பொதுவாக எல்லோரும் காதலைப் பற்றிப் பேச ஆரம்பித்தனர். நாங்கள் எல்லோரும் வாலிபர்கள். எனவே, நாங்கள் தங்கு தடையின்றி வேடிக்கையாகப் பேசினேம். அடுப்பில் விறகை அடுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் விக்டர். அவன் எங்கள் பக்கம் திரும்பி துக்கத்துடன் சொன்னன்:

"காதலைப் பற்றி நீங்கள் இப்படி பேசக் கூடாது! ஒருவன் வாழ்க்கையில் காதலை விடப் பெரிது வேறில்லை. மாதாவை மதிப்பதைப் போன்று, தேசத்தைக் கௌரவிப் பதைப் போன்று காதலையும் மதிக்க வேண்டும். ஏனெனில், காதல்......நாம் பெரிதாக மதிப்பவைகளின்—தேசம், வயல், வீடு, வாழ்க்கை, குழந்தைகள்-பிரதி பிம்பம் காதல்; நாம் எதற்காகப் போர் புரிகிறேமோ அதன் பிரதி பிம்பம் காதல். தேசத்திற்காக இறப்பதைப் பெருமையாக மதிப் பதைப் போன்று காதலுக்காக இறப்பதையும் நாம் பெருமையாக மதிக்க வேண்டும்."

காதலைப் பற்றி வேடிக்கையாகப் பேசின ஸெர் யோஷாநிகோல்ஸ்கி சொன்னான் :

"என் மீது கோபப்படாதே, விக்டர் ஆன்ட்ரெயெவிச், நான் வேடிக்கையாகப் பேசினேன். இளம் ரத்தம் தான் இதற்குக் காரணம் என்று நினைக்கிறேன். நான் யாரை யாவது தழுவ ஆசைப் படுகிறேன். வேடிக்கைக்குக் காரணம் இது தான். இதை நீ புரிந்து கொள்வது சிரமம் தான். ஆனால், உன் வாழ்க்கையில் இது நேர்ந்திருக்கலாம்."

விக்டர் ஆன்ட்ரெயெவிச் எழுந்திருந்து கைகளைத் துடைத்துக் கொண்டே தலையைக் குலுக்கினான்.

"நீ வாலிபன் ஸெர்யோஷா! நீ பல விஷயங்களைக் கற்க வேண்டும். காலம் காதலுக்கு எல்லைக் கோடு கிழிக்க முடியாது. மெய்க் காதல் சிரஞ்சீவித்வம் பெற்றது!"

அப்பொழுது நான் குறுக்கிட்டுச் சொன்னேன் :

"நீ காதலைப் பற்றி இவ்வளவு பெருமையாகப் பேசுவதால் உன காதல் வாழ்க்கையில் இன்பம் கொஞ்சி இருக்க வேண்டும்."

அவன் எனக்கு உடனே பதில் சொல்லவில்லை. அவன் வதனத்தில் புன்னகை பூத்தது. அவன் சட்டைப் பொத்தானைக் கழற்றி, ஒரு தோல் பையை வெளியில் எடுத்தான். அதைத் திறந்து ஒரு படத்தை வெளியில் எடுத்தான். அதை என்னிடம் கொடுத்து விட்டு அவன் சொன்னான்:

"மிஷா! அந்தப் படத்தைப் பார்!"

விளக்குக்கு அருகில் சென்றேன் நான். அதில் ஒரு படம் வரையப்பட்டிருந்தது. அதில் நான் கண்டதை என்னால் வர்ணிக்க முடியாது. ஆனால், என் ஹிருதயத்தை ஏதோ இழுப்பதையும், ரத்தம் வேகமாக ஓடுவதையும்

நான் உணர்ந்தேன். அந்த முகத்தை நான் என்றும் மறக்க முடியாது. அது ஒரு சிறுமியின் படம். அவள் கூந்தல் தலையைச்சுற்றி வளையமாகச் சுற்றப்பட்டிருந்தது. அவள் மெலிந்த கழுத்து மனதிற்கு மகிழ்ச்சி அளித்தது; அவள் தேகம் என்னைக் கவர்ந்தது அவள் வதனம் நிர்மல மானது; அவள் கண்கள் ஒளி வீசின. இந்த ஒளியை நான் வேறு யார் கண்களிலும் கண்டதில்லை. நான் படத்தைக் கையில் வைத்திருந்தேன். எனக்குப் பின்னே இருந்தவர்கள் மூச்சு விடும் சத்தம் எனக்குக் கேட்டது. எல்லோரும் அந்தப் படத்தை இமை கொட்டாது பார்த்தனர். அந்த முகம் எல்லோரையும் சிலிர்க்கச் செய்தது. ஏனெனில், அந்த முகம் அவ்வளவு அழகாக இருந்தது;

"அவள் தேவ கன்னி, விக்டர் ஆன்ட்ரெயெவிச். முன் காலத்தில் தேவ கன்னிகளை இவ்வாறு தான் சித்தரிப்பார்கள்" என்று நடுங்கும் குரலில் சொன்னான் மோன்யா கிர்ஷ்மான்.

படத்தை வாங்கி, அதன் மீது ஜாக்கிரதையாகத் துணியைச் சுற்றி விட்டு கைப் பையில் வைத்தான் விக்டர் ஆன்ட்ரெயெவிச். அந்த முகம் மறைந்ததும் சுரங்கத்தில் இருள் சூழ்ந்ததாக நான் நினைத்தேன். மோன்யாவுக்குப் பதில் சொல்லும் பொழுது விக்டரின் குரலில் துக்கம் தொனிப்பதை நாங்கள் உணர்ந்தோம்.

"இல்லை, மோன்யா! தேவ கன்னிகள் மோசமானவர்கள். இவள் சிறந்த பெண். இது என் மனைவியின் படம்."

சிறிது நேரம் சுரங்கத்தில் அமைதி குடி கொண்டது. பிறகு பெருமூச் செறிந்து கொண்டே ஒரு சிப்பாய் சொன்னான்:

"ஆம்; அவள் பாதகி தான்!"

"நீ இன்றி அவள் தனியே இருப்பது சிரமம் என்று நினைக்கிறேன், விக்டர் ஆன்ட்ரெயெவிச்" என்றான் போன்யா.

உடனே அவன் பதில் சொல்லவில்லை.

"அவள் தனியே துன்புறவில்லை, போன்யா" என்று பெருமூச் செறிந்து கொண்டே சொன்னான் விக்டர். "அவள் போய் இருபத்து மூன்று வருடங்களாகின்றன. 1918ஆம் வருடம் க்ரிமென்சுகில் ஒரு ஜெர்மானியன் அவளைக் கொன்றான்!"

மூச்சைப் பிடித்துக் கொண்டு நாங்கள் இதைக் கேட்டோம். பிறகு, எங்கள் சார்பில் போன்யா சொன்னான்:

"வாஸ்தவமாகவா? இது அசாத்தியம்!"

"வாஸ்தவம் தான்! அவர்கள் அவளைக் கொன்றார்கள்" என்று அவன் கடுமையாகக் கூறினான்.

நாங்கள் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு அவன் நடந்ததைச் சொன்னான்.

"அன்று நான் க்ரெமென்சுகில் வசித்தேன். பெண்கள் சித்திரப் பள்ளிக்கூடத்தில் நான் ஆசிரியாக இருந்தேன். அப்பொழுது நான் வாலிபன்; சைத்திரிகன் பட்டம் பெற்று வெகு நாட்களாகவில்லை. அங்கே தான் நான் ஸோனாவைச் சந்தித்தேன். அவள் மாணவி. நாங்கள் ஒருவரை ஒருவர் காதலித்தோம்."

அந்தக் காதலைப் பற்றி விக்டர் ஆன்ட்ரெயெவிச் பேசின தோரணையை என்னால் வர்ணிக்க முடியாது. அவன் பேச்சைக் கேட்க வேண்டும். அவன் பேசின பொழுது

அவன் வதனம் பிரகாசித்தது. அவன் உள்ளம் தான் அப்பொழுது பேசிற்று!

"லீஸா பட்டம் பெற்ற பிறகு நான் அவளை மணந்தேன். காலம் ஓடி மறைந்தது. உக்ரேனை ஜெர்மானியர் கைப்பற்றினர். எங்கள் புதல்வி நோயால் வாடினாள். அந்தி நேரம். மருந்துக் கடைக்குச் செல்ல நான் விரும்பினேன். ஆனால், நான் போக லீஸா அனுமதி தரவில்லை. "நீ போகாதே!" என்று அவள் கெஞ்சினாள். "நீ ஆண். உன்னை அவர்கள் வெளியில் கண்டால் நீ தொல்லைக்கு ஆளாவாய். நான் போகிறேன். அவர்கள் பெண்ணுக்குத் தீங்கு இழைக்க மாட்டார்கள்!" அவள் போவதை நான் விரும்பவில்லை. இறுதியில் அவள் என்னை இணங்கும்படி செய்தாள். "தெருவின் மறுபக்கத்தில்தான் மருந்துக்கடை இருக்கிறது. நான் நொடிப்பொழுதில் திரும்பி விடுகிறேன்." தோட்டக் கதவு வரையில் நானும் அவளுடன் சென்றேன். அவள் தெருவுக்குக் குறுக்கே ஓடினாள். அவள் திரும்பி வரும் வரையில் அங்கேயே இருக்க நான் முடிவு செய்தேன். எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அங்கங்கே வீதி விளக்குகள் எரிந்தன. லீஸா கடையில் பிரவேசித்ததை நான் கண்டேன். நான் காத்திருந்தேன். திடீரென்று அந்த வீதியில் ஒரு ஜெர்மன் சிப்பாய் நுழைந்தான். துப்பாக்கியைக் கையில் ஏந்திக் கொண்டு அவன் நாரையைப் போன்று உல்லாசமாக நடந்தான். மருந்துக் கடையின் கதவு திறந்தது. லீஸா அவசரமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வீதி விளக்கை அவள் அடைந்து விட்டாள். அப்பொழுது ஜெர்மானியன் துப்பாக்கியை உயர்த்தினான்......டும்! அவள் தள்ளாடிக் கொண்டே மூன்று அடிகள் வைத்தாள். பிறகு என் கரங்களில் விழுந்தாள். அவள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஒன்று, அல்லது இரண்டு முறை சிரமத்துடன் மூச்சு விட்டாள். பிறகு இறந்தாள்......"

நரம்பு அறுந்ததைப் போன்று விக்டர் ஆன்ட்ரெயெவிச்சின் குரல் தடைப்பட்டது. அது ஈடு செய்ய முடியாத நஷ்டம் என்பதை நாங்கள் உணர்ந்தோம். எங்கள் தொண்டையில் ஏதோ திரள்வதைப் போன்று நாங்கள் எதையோ வேகமாக விழுங்கினோம்.

"அப்பொழுது தான் ஜெர்மானியரின் உண்மை உருவம் என்ன என்பதை நான் தெரிந்து கொண்டேன். அன்றிலிருந்து நான் அவர்களை ஹிருதய பூர்வமாக வெறுக்கிறேன். நான் வாலிபன் அல்ல என்றாலும், யுத்தம் ஆரம்பமான அன்றே நான் ராணுவத்தில் சேர்ந்தேன். அவர்களுடன் ஜீவ - மரணப் போராட்டம் நடத்துவதற்காக நான் ராணுவத்தில் சேர்ந்தேன். அவர்கள் மனித உருவில் விளங்குகிறார்கள் என்றாலும், அவர்கள் மனிதர்கள் அல்ல. கீழ்த்தரமான செயல்களில்—கொலை, கற்பழிவு, சூறை-அவர்கள் பண்பட்டவர்கள். அவர்களுக்கு ஹிருதயமில்லை. அந்த இடத்தில் அழுகி நாற்ற மெடுக்கும் ஏதோ ஒன்று இருக்கிறது. வெறி நாயைக் கொல்லுவதைப் போன்று அவர்களைக் கொல்ல வேண்டும். இரக்கமின்றி அவர்கள் எல்லோரையும் அழிக்க வேண்டும். அதன் பிறகு தான் வாழ்க்கை தழைக்கும். அவர்களை அழியுங்கள், நண்பர்களே! நமது தேசத்திற்காக, நமது பெற்றோர்களுக்காக, நாம் ஏற்றிப் போற்றும் காதலுக்காக, நமது பெண்களின் மானத்திற்காக, புனிதமானவைகளை நிலைநிறுத்துவதற்காக அவர்களைக் கொன்று குவியுங்கள். என் கடைசி மூச்சு இருக்கும் வரையில் நான் இதைச் செய்வேன். அவர்களை மன்னிக்கவே முடியாது!"

உணர்ச்சியால் துடித்த விக்டர் அடுப்புக்கு அருகில் உட்கார்ந்தான். நாங்கள் பேசவே இல்லை. ஏனெனில், அப்பொழுது பேச வேண்டிய அவசியமில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். எங்கள் கண் முன்னே லீஸாவின்

வதனம் தோன்றிற்று. நாங்கள் கண்ட அதே வதனம். அவள் வதனத்திற்குப் பின்னே எங்கள் பொன்னடி. நாங்கள் நேசிக்க எல்லாம், நாங்கள் புனிதமாகக் கருதினவை, வாழ்க்கையை விட நாங்கள் பெரிதாக மதித்தவை தெரிந்தன. மெய்க் காதல் என்றால் என்ன என்பதை அன்று மாலை நாங்கள் தெரிந்து கொண்டோம்.

பதினைந்து நாட்களுக்குப் பிறகு நாங்கள் உக்ரமாகப் போர் புரிந்தோம். எங்கள் படையை எதிரிகள் கடுமையாகத் தாக்கினார்கள். சிறிது தூரம் பின்வாங்கி விட்டுப் போர் புரியும்படி கட்டளை பிறந்தது. அங்கேயே தங்கி நாங்கள் பின்வாங்குவதை ஒருவர் சாத்தியமாக்க வேண்டும். இந்த வேலையைச் செய்யப் பலர் முன் வந்தனர். அவர்களில் விக்டர் ஆன்ட்ரெயெவிச்சும் ஒருவன். கமாண்டரிடம் அவன் சொன்னான்:

“ இதைச் செய்யத் தகுந்தவன் நான் தான். இதை யாரும் மறுக்க முடியாது. இங்கே இருப்பவர்களில் நான் தான் அதிக வயதானவன். எனவே, நான் பின்னே தங்குவேன்! ”

அவன் சிறிய சுரங்கத்தில் படுத்தான். அவனிடம் சிறிய யந்திரப் பீரங்கி இருந்தது. நாங்கள் ஜாக்கிரதையாகப் பின்வாங்கினோம். நான் அவனைத் திரும்பிப் பார்த்தேன். பையிலிருந்து லீஸாவின் படத்தை அவன் எடுத்ததையும், தனக்கு முன்னே அதை வைத்துக் கொண்டதையும் நான் கண்டேன். அந்தப் படத்தை அவன் உற்றுப் பார்த்தான். பிறகு, அவன் ஜெர்மானியரைச் சுட்டான்.

நாங்கள் ஒழுங்காகப் பின்வாங்கினோம். விக்டர் ஆன்ட்ரெயெவிச்சின் யந்திரப் பீரங்கி இடைவிடாது நெருப்பைக் கக்கிற்று. அவனிடம் ஏராளமான தோட்டாக்கள் இருந்தன. அவன் அவைகளை வியக்கத் தக்க முறையில் பயன் படுத்திக் கொண்டான். தலையை

உயர்த்துவதற்குக் கூட அவன் ஜெர்மானியருக்கு அவகாசம் அளிக்கவில்லை. பிறகு குண்டுச் சத்தம் நின்றது. ஜெர்மானியர் எங்கள் மீது பாய்ந்தனர். அதே சமயத்தில் எங்களுக்கு உதவி புரிய இன்னொரு படை வந்தது. நாங்கள் குத்து வாளால் அவர்களை நிர்மூலம் செய்தோம். அப்பொழுது போர் புரிந்ததைப் போன்று எங்கள் படை அது வரையில் போர் புரிந்ததே இல்லை. ஜெர்மானியரை நாங்கள் முறியடித்தோம். இழந்த இடத்தை நாங்கள் மீண்டும் கைப்பற்றினோம். போர் நின்றதும் விக்டர் ஆன்ட்ரெயெவிச் இருந்த இடத்திற்கு நாங்கள் ஓடினோம். சுரங்கத்தில் அவன் படுத்திருந்தான். குண்டு அவன் தலையைத் துளைத்தது. அவன் வதனத்திலே சாந்தி குடி கொண்டிருந்தது.

லீஸாவின் படம் அவன் வைத்த இடத்திலேயே இருந்தது. அதன் மீது ரத்தம் சிந்தியிருந்தது.

பூவரசு மரத்தடியில் நாங்கள் விக்டர் ஆன்ட்ரெயெவிச்சைப் புதைத்தோம். அந்தப் படத்தை எங்களிடம் வைத்துக் கொள்ள நாங்கள் விரும்பினோம். அவ்வளவு மகிமை பொருந்திய பொருளைப் புதைப்பது வருந்தத் தக்கது. ஆனால், மோன்யா கிர்ஷ்மான் இதற்கு இணங்கவில்லை. அதை வைத்துக் கொள்ள எங்களுக்கு உரிமை இல்லை என்றும், அது அவனுக்குச் சொந்தமானது என்றும், அவளுக்காகத் தான் அவன் ஜீவத்தியாகம் செய்தான் என்றும், இறுதி வரையில் அது அவனிடம் இருக்க வேண்டும் என்றும் மோன்யா சொன்னான். ஜீவனற்ற விரல்களில் நாங்கள் அந்தப் படத்தை வைத்தோம். பிறகு அவன் கண்களை ரஷிய மண்ணால் மூடினோம்.

மீண்டும் நாங்கள் போர் புரிந்தோம். விக்டர் ஆன்ட்ரெயெவிச்சுக்காக, லீஸாவுக்காக, காதலுக்காக, எங்களுக்கு ஜீவன் அளித்த மகிமைபொருந்திய தேசத்திற்காக

நாங்கள் வீரர்களைப்போன்று அச்சமின்றி, இடைவிடாது போர் புரியச் சபதம் செய்தோம்; ஒரு அங்குல நிலத்தைக் கூட எதிரிகளுக்குக் கொடுக்க மாட்டோ மென்று, ஹிட்லருக்குச் சிறிதும் இடம் அளிக்க மாட்டோ மென்று, எதிரிகளை நிர்மூலம் செய்வோ மென்று நாங்கள் சபதம் செய்தோம்.

தேச பக்தன்

[ஸேர்ஜி க்ருஷின்ஸ்கி]

அவன் ரஷியாவைக் கண்டதில்லை; கணவாய்களின் ஓரங்களை அலங்கரிக்கும் வெண் பூவரசு மரங்களைக் கண்டதில்லை; கடலைப் போன்று குளிர்மையாக இருக்கும் இன்பம் கொஞ்சும் மைதானங்களையும் கண்டதில்லை. சூரியன் வெப்பத்தைத் தாங்க முடியாமல் சோர்ந்திருக்கும் நீண்ட புற்கள் மீது வெட்டுக்கிளிகள் கீச்சிடுவதை அவன் கேட்பதில்லை; மைதானம் தூக்கக் கலக்கத்தில் தாழ்ந்த குரலில் பேசுவதையும் அவன் கேட்டதில்லை. கம்பீரமான வால்காவையோ, வேகமாகப் பாயும் நீப்பரையோ, பாறைகளுக் கிடையில் வெறியுடன் பாயும் தெரெக்கையோ அவன் பார்த்ததில்லை. அவன் அதிக காலம் நமது தேசத்தில் வசித்ததில்லை; நமது வாழ்க்கை அவனுக்கு அவ்வளவாகத் தெரியாது. தன்னலத் தியாகத்துடன் நாம் செய்யும் வேலை, விஞ்ஞானத் துறையில் நாம் செய்யும் புது முயற்சி, நண்பர்களை சகோதர உணர்ச்சியுடன்

நாம் நடத்தும் முறை—இவைகளைக் காணவோ, இவை களின் தன்மைகளைத் தெரிந்து கொள்ளவோ அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

எனினும் சில விஷயங்களை அவன் தெரிந்து கொண்டிருந்தான். பத்தொன்பது வயதான இந்த வாலிபன் பல வியக்கத்தக்க வேலைகள் செய்தான். அவன் எந்த சந்தர்ப்பத்திலும் நிலை குலையவே இல்லை. நோக்கம் நிறைவேறுவதற்காக அவன் தீரத்துடன் இடைவிடாது போர் புரிந்தான். நமது தேசத்தின் அழகும், பெருமையும் கண்ணியமான ஹிருதயத்தைக் கவருகின்றன என்பதற்கு இது சான்று. நமது எல்லையை சமீபத்தில் மிதித்தவர்கள் செய்யும் தீரம் மிகுந்த செயல்கள் நமது ஜனங்களின் பெருமையை அதிகப்படுத்துகின்றன.

* * *

குழந்தையாக இருந்த பொழுது மார்ஜன் லோபிக்குக்கு ஸோவியத் ரஷியாவைப் பற்றி ஒன்றும் தெரியாது. கார் பாத்தியன் மலை அடிவாரத்தில் அவன் வளர்ந்தான். அது குக்கிராமம். அது பழைய போலந்தில் இருந்தது. அந்தப் பகுதியில் உக்ரேனியர்கள் வசித்ததால் ஆளும் வர்க்கம் அந்தப் பகுதியை அசட்டை செய்தது. அவனுக்குப் பதிமூன்று வயதான பொழுது குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும் அறிவூட்டும் சம்பவங்கள், குழந்தைகளையும், வயதானவர்களையும் பழுத்த அனுபவசாலிகளாக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன. 1939 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் இவை நிகழ்ந்தன. ஜெர்மன் ராணுவம் போலந்து மீது படை யெடுத்தது. கார்கோவுக்கு அப்பால்—கார்கோ உலகத்தின் மற்றொரு மூலை என்று பிலிப் லோபிக்கும், அவனைப் போன்ற சாதாரண ஜனங்களும்

நினைத்தார்கள்—போர் நடந்தது. ஒரு வாரத்தில் வார்ஸா விலிருந்தும், க்ராகோவிலிருந்தும் வெளியேறின ஜனங்கள் கானகத்திற்குச் செல்லும் வீதியில் காணப்பட்டனர். அழகிய மோட்டார்கள் ஒன்றன் பின் ஒன்றாக ருமேனியாவுக்குச் சென்றன. அந்த மோட்டார்களில் போலிஷ் சர்க்கார் அதிகாரிகள் பிரயாணம் செய்தனர்!

"நம்மைப் போன்ற சாதாரண ஜனங்களை யாரும் கண்டெடுத்தும் பார்க்கவில்லை. நம்மை அவர்கள் புறக்கணித்து விட்டார்கள்!" என்றான் கிழவன் பிலிப். அவன் எண்ணெய்க் கிணறுகளில் வேலை செய்தான். எண்ணெய்க் கிணறுகளில் இருக்கும் உயரமான வளை குழல்களைத் தன் புதல்வர்களுக்குக் காட்ட அவனுக்கு வெகு நாட்களாக ஆசை.

இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஜெர்மன் டாங்கிகள் காலியாக இருந்த கிராம வீதிகளைக் கடந்து சென்றன. ஆம்; அவை லோவுக்குச் செல்லுகின்றன. அவை பயங்கரமான, எதிர்க்க முடியாத, அழிக்க முடியாத சக்தி என்பதைப் பார்ப்போருக்கு அறிவுறுத்தின. விரைவில் இந்த வலிமை பொருந்திய யந்திரங்கள் திரும்பி வந்தன. அதைத் தொடர்ந்து செம்படையும் வந்தது. ஜனங்கள் ஆனந்தக் கூத்தாடினர். வயது வந்தவர்கள் பொதுக் கூட்டங்கள் கூட்டித் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனர். குழந்தைகளைக் கவர்ந்த பல சம்பவங்கள் நிகழ்ந்தன. கார் காலத்திற்கு முன் புதிய பள்ளிக் கூடம் கட்டப்பட்டது. ஆசிரியர்களின் மகிழ்ச்சியையும், மாணவர்களின் ஆனந்தக் கூச்சலையும் மார்ஜன் என்றும் மறக்கமாட்டான். அவனும் மகிழ்ந்தான். முன்பு ஆரம்பப் பாடசாலை இருந்த இடத்தில் உயர்தரப் பள்ளிக் கூடம் எழுந்தது. அவன் அந்தப் பள்ளிக் கூடத்தில் சேர்ந்து படிக்கலாம் என்பது இதன் பொருள்.

காலம் ஓடி மறைந்தது. புது வாழ்க்கை மலர்ந்து ஒன்றரை வருடம் கூட ஆகவில்லை. எனினும், சோவியத் நாட்டை அவன் ஹிருதய பூர்வமாக நேசித்தான். பக்கு எண்ணெய்க் கிணறுகளைப் பற்றி அவன் தந்தை அடிக்கடி பேசுவார். சாகு முன் அதைக் காண வேண்டுமென்று அவர் சொல்லுவார். சமுத்திரத்தின் அடித்தளத்திலிருந்து அவர்கள் எவ்வாறு எண்ணெய் எடுக்கிறார்கள் என்பதையும், தொழிலாளர்கள் எவ்வாறு கடல் நீரைப் பின்னுக்குத் தள்ளுகிறார்கள் என்பதையும் காண வேண்டுமென்று அவர் அடிக்கடி சொன்னார். தந்தையின் பேச்சைக் கேட்டுப் புன்னகை புரிவான் மார்ஜன். அவன் வட துருவத்திற்குச் செல்ல முடிவு செய்தான். ஆனால், தன் எண்ணத்தைப் பிறரிடம் சொல்ல அவன் துணியவில்லை.

மீண்டும் இரும்பு அரக்கன் மேற்கிலிருந்து வந்தான். பல நாட்கள் - இரவும், பகலும் - குண்டுகளின் சத்தம் அந்தப் பிரதேசமெங்கும் எதிரொலித்தது. பிறகு, ஜெர்மன் டாங்கிகள் மீண்டும் அந்த வீதிகளில் காட்சி அளித்தன.

போர் முடிந்தது. மயான அமைதி அந்தப் பிரதேசத்தில் குடி கொண்டது. ஆனால், பின்னணியில் இருந்த சோவியத் சிப்பாய்கள் இரவில் ரகசியமாகக் கிழக்கே சென்றனர். இரண்டு கால்களிலும் காயம் பட்ட ஒரு சிப்பாயை மார்ஜன் கண்டான். தடியை ஊன்றிக் கொண்டு அவன் முழங்காலில் நகர்ந்தான். ஜெர்மன் டாங்கிகளைத் தொடர்ந்து செல்ல வேண்டும் என்று அவன் ஏன் சொல்லுகிறான் என்பது அவனைப் பராமரித்த கிழவிக்கு விளங்கவில்லை. ஜெர்மன் டாங்கிகளைப் பின் தொடரலாமென்று அவன் நினைக்கிறானா? அவர்களை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை அவன் இன்னும் தெரிந்து கொள்ள வில்லையா?

ஜெர்மன் டாங்கிகளை தான் வெல்ல முடியு மென்
அவன் பரிபூரண நம்பிக்கையுடன் சொன்னான். அவ
டாங்கிப் படையைச் சேர்ந்தவன். அவனுக்குப் புதி
டாங்கி கிடைக்கும்; அவன் மீண்டும் கார்பாத்திய
பகுதிக்கு வருவான்.

ஜெர்மானியர் மார்ஜனை பலாத்காரமாகப் பள்ளி
கூடத்திலிருந்து இழுத்துச் சென்றனர். மோட்டாரி
நிலக்கரியை நிறைக்கும் வேலையை அவனுக்குக் கொடு
தார்கள் ஜெர்மானியர். அவன் சுமார் ஒரு வருடம் இந்
வேலையைச் செய்தான். அந்தக் காலத்தில் அவன் வளர்
தான். அப்பொழுது அவனுக்குப் பதினைந்து வயது தா
என்றாலும் அவன் அனுபவத்தில் பக்குவம் அடைந்தா

சோவியத் பள்ளிக் கூடத்தில் பாசிஸ்டுகளைப் பற்
அவன் கற்றதெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை
பாசிஸ்டுகள் கொள்ளைக்காரர்கள் என்று அவனிட
சொன்னார்கள். அவன் கொள்ளைக்காரர்களை நேரில் க
டான்; தன் வீட்டில் கண்டான். அவன் வீட்டில் ஒரு ப
இருந்தது. அவன் குடும்பம் அந்தப் பசுவை நம்பி வாழ்
தது. அந்தக் குடும்பத்திற்கு ஆயிரம் படி பால் வரி விதி
தார்கள் பாசிஸ்டுகள். அவன் கிழத் தந்தையும், நோயாளி
தாயும் நல்ல மேய்ச்சல் நிலத்தைத் தேடி அந்தப் பகுதியி
நாள் தோறும் அலைந்தார்கள் என்றாலும் ஆயிரம் ப
பால் பாசிஸ்டுகளுக்குக் கொடுக்க அவர்களால் முடி
வில்லை. எனவே, வருடக் கடைசியில் ஜெர்மானிய
பசுவை ஓட்டிச் சென்றனர். ஜெர்மானியர் கொ
காரர்கள் என்று உபாத்தியாயர் சொன்னார். இதுவு
உண்மை தான்! உரெக் கிராம வாசிகளால் போற்
போற்றப்பட்ட பாவ்லோ குன்ட்ரிக்கை அவர்கள் சு
வில்லையா? எதற்காக அவனைச் சுட்டார்கள்? அவ
வீட்டில் திரிகல் இருந்ததற்காக! பாவ்லோ குன்ட்ரிக்

குழந்தைகள் பட்டினியால் பாதவித்தன. பட்டினியால் குழந்தைகள் நாணலைப் போன்று மெலிந்திருந்தன. பசியால் துடிக்கும் குழந்தைகளுக்கு உணவளிக்க முயன்ற குற்றத்திற்காக ஜெர்மானியரைத் தவிர வேறு யாரும் அவனைத் தண்டிக்க மாட்டார்கள்!

ரஷியாவில் போர் இடைவிடாது நடந்தது. உண்மையை மறைக்க ஜெர்மானியர் பெரு முயற்சி செய்தாலும் உண்மை ஜனங்களுக்குத் தெரிந்தது. செம்படை மேற்கே முன்னேறுகிறது என்பதை ஜனங்கள் தெரிந்து கொண்டார்கள். கார்பாத்தியன் மலைக்கும் அவர்கள் வருவார்கள் என்று சிலர் நம்பினர். முடிவு எப்படி இருப்பினும் சோவியத் ரஷியா சாதாரண ஜனங்களைப் புறக்கணித்தது என்று யாரும் சொல்ல முடியாது என்பது பிலிப் லோவிக் தீர்ப்பு. தன் நாட்டு மக்களை விடுவிப்பதற்காக ரஷியா எத்தகைய தியாகம் செய்யவும் தயங்கவில்லை. அது விடுதலைக்காக, ஜனங்களின் க்ஷேமத்திற்காகத் தயக்கமின்றி ரத்தம் சிந்திற்று; அடிமைத் தனத்திலிருந்து ஜனங்களை விடுவிக்க இடைவிடாது முயன்றது.

* * *

1944 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் சோவியத் வேவுகாரன் உரெக் கிராமத்தில் பிரவேசித்தான். அடுத்த மாதம் மார்ஜன் லோபிக்கும், ஏனைய வாலிபர்களும் செம்படையில் சேர்ந்தனர். மார்ஜன் ராணுவப் பயிற்சி பெற்றான். பயிற்சியில் அவன் விசேஷ கவனம் செலுத்தினான். எனினும் அந்த மெலிந்த வாலிபனின் நெஞ்சு எவ்வளவு உரமானது என்பதையும், அவன் ஹிருதயம் சோவியத் தாய் நாட்டை எவ்வாறு பூஜித்தது என்பதையும் அன்று யாரும் தெரிந்து கொள்ளவில்லை.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால்—மார்ஜன் லோபிக் உண்மையை மறைக்கவில்லை—அவன் முதன் முதல் போர்முனைக்குச் சென்றதும் சில சிப்பாய்கள் அவனைச் சந்தேகித்தனர். அவனை அவர்கள் பரிபூரணமாக நம்பவில்லை. இதன் காரணத்தைத் தெரிந்து கொள்வது எளிது. ஒரே குழாயில் புகை குடிப்பதும், ஒரே சிற்றுண்டி சாலையில் உணவருந்துவதும் உண்மையான நட்பின் அறி குறிகள் அல்ல. ஜீவ—மரணச் சங்கிலியால் சிப்பாய்கள் பிணைக்கப்பட்டனர். பக்கத்தில் இருப்பவன் நெருக் கடியான சமயத்தில் கைவிட்டால், அல்லது அவன் கூடக் கத்தில் ஒளிந்து கொண்டால் இருவரும் சாக வேண்டியது தான்!

ஜனவரி மாதம். வானம் மங்கியிருந்தது. போரில் பண்பட்ட சிப்பாய்கள் மார்ஜனுக்குத் தேறுதல் கூறினர். சுரங்கத்திற்கு அருகில் குண்டு வெடித்த பொழுது அவர்கள் அவனை உற்சாகமூட்டினர். அவர்களின் தோழமை உணர்ச்சியை மார்ஜன் பாராட்டினான். ஆனால், அவர்கள் தீர்ப்புக்கூறத் தயங்கினர் என்பது அவனுக்குத் தெரியும். அவன் போரில் தன் யோக்கியதாம்சத்தை நிரூபிக்க வேண்டும். நீண்ட காலமாக எதிர் பார்க்கப் பட்ட தாக்குதல் ஆரம்பமானதும் சோவியத் தாய் நாட் டிற்காக அவன் எவ்வாறு போர் புரிவான் என்பதை அவர்கள் காண விரும்பினர்.

மார்ஜனும் அந்த நாளுக்காகக் காத்திருந்தான். அவன் அமைதியாகக் காத்திருந்தான். அந்தக் காலத்தில் அவன் அனுபவசாலிகளிட மிருந்து பல விஷயங்களைக் கற்றுக் கொண்டான். அவன் குறி பார்த்துச் சுடப் பழகி னான். எறி குண்டை எவ்வாறு எறிவது என்பதைத்

தெரிந்து கொண்டான். எல்லா ஆயுதங்களையும் கையாளக் கற்ருன்.

*   *   *

தாக்குதல் ஆரம்பமாயிற்று. மார்ஜன் சிறிய யந்திரப் பீரங்கிப் படையில் இருந்தான். விஸ்துலாவி லிருந்து ஓடருக்குச் செல்லும் பாதை, ராணுவம் அவனுக்குக் கற்றுக் கொடுக்காத பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தது. அது அவனைப் பண்படுத்திற்று. சோவியத் மக்களைப் பற்றியும், அவர்கள் மூலம் சோவியத் தாய் நாட்டைப் பற்றியும் அவன் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டான். பசிபிக் கரையிலிருந்தும், வட துருவத்தி லிருந்தும் வந்த சிப்பாய்களுடன் அவன் தோளொடு தோள் நின்று தாய் நாட்டின் விடுதலைக்காகப் போர் புரிந்தான். அவர்கள் போர் புரிவதையும், ஓய்வு எடுப்பதையும், இறப்பதையும் அவன் கண்டான். அவர்கள் நட்பை அவன் பெரிதும் போற்றினன்.

நூற்றுக் கணக்கான போலிஷ் நகரங்களிலும், கிராமங்களிலும் ஜனங்கள் குதூகலத்துடன் செம் படையை வரவேற்றனர். இந்த மகிமை பொருந்திய விடுதலை சேனையில் தான் அங்கம் வகிப்பதை எண்ணி எண்ணிப் பெருமை அடைந்தான் மார்ஜன். செங்கொடி யின் கீழ் அவன் ஜெர்மன் எல்லையைக் கடந்தான். இந்த நிமிடத்தை எதிர்பார்த்துக் கொண்டு உலகிலுள்ள கோடானு கோடி மக்கள் கடந்த ஐந்து வருடங்களாக வாழுகிருர்கள் என்பது அவனுக்குத் தெரியும். அவன் ஜெர்மன் மண்ணில் நடக்கிருன்! ஜெர்மன் சிறைகளி லிருந்து விடுதலை அடைந்த ஆயிரக்கணக்கான அவன் நாட்டு மக்கள் வீடு திரும்புகிருர்கள்.

அவன் படை அப்பொழுது ஓடரின் மறு கரையில் இருந்தது. அவன் படை வெகு தூரம் முன் சென்றது.

திடீரென்று எதிரிகள் அவர்களைத் தாக்கி, அவர்களை வளைந்து கொண்டார்கள். எதிரி மீது மார்ஜன் குண்டு மாரி பொழிந்தான். எதிரியைத் துரத்தும் முயற்சியில் அவனிட மிருந்த தோட்டாக்களை யெல்லாம் செலவு செய்தான். ஒரு ஜெர்மன் வீட்டுக் கொல்லையி லிருந்து அவன் சுட் டான். ஜெர்மானியர் வீட்டுக் கதவை அடையும் வரையில் அவன் காத்திருந்தான். பிறகு இடைவிடாது அவன் சுட்டான். சுண்டெலியைப் போன்று அவர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சுருண்டு விழுந்தனர். தனது வலது கையில் குண்டு பாய்ந்ததைப்போரின் வேகத்தில் மார்ஜன் உணரவில்லை அது குளிர்ந்து விறைத்த பிறகு தான் அவ னுக்கு நடந்தது தெரிந்தது. ஜெர்மானியர் கொல்லை யையும், வீட்டில் பாதியையும் கைப்பற்றினர். அப் பொழுது தான் தன்னிடம் தோட்டா இல்லை என்பது மார்ஜனுக்குத் தெரிந்தது.

ஆனால், அவனிடம் ஆறு எறி குண்டுகள் இருந்தன அவன் மேன் மாடத்தின் மீது ஏறினான். கொல்லையில் அங்கு மிங்கும் நடந்த சிப்பாய்கள் மீது அவன் ஐந்து எறி குண்டுகளை எறிந்தான். பிறகு அவன் பீரங்கியை ஒளித்து வைத்து விட்டு நிலவறையில் இருந்த நிலக்கரித் தொட்டியில் ஒளிந்துகொண்டான். ஆறாவது எறி குண்டை அவன் சட்டையில் ஒளித்து வைத்துக் கொண்டான். அதன் வத்தி அவன் இடது கையில் இருந்தது. அந்த வீட்டை ஜெர்மானியர் சோதனை செய்து அங்கே இருந்த காயம் அடைந்த சிப்பாய்களைக் கொன்றனர். அவர்கள் கூச்சலிட் டுக் கொண்டு நிலவறையில் பிரவேசித்தனர். அவன் கண் களை இறுக மூடிக் கொண்டு அங்கே படுத்திருந்தான். ஒரு ஜெர்மானியன் அவன் மீது நிலக்கரித்துண்டை எறிந்தான். அவன் அசையவே இல்லை. கைத்துப்பாக்கியால் சிப்பாய் சுட்ட பொழுது கூட அவன் அசையவில்லை. குண்டு அவன்

நெஞ்சை ஊடுருவிச் சென்றது. அப்பொழுது கூட அவன் அசையவில்லை; கூச்சலிடவும் இல்லை. அவன் பிணத்தைப் போன்று படுத்திருந்தான். ஜெர்மானியர் அப்பால் சென்றனர்: நிலவறையில் குளிர் தாங்க முடியவில்லை. மார்ஜனின் கால்கள் விறைத்தன. எனினும் அவன் அசையவில்லை. செம்படை விரைவில் வருமென்று அவன் நம்பினன். எனவே, கடைசி மூச்சு இருக்கும் வரையில் அவன் போர் புரிய முடிவு செய்தான். நிலைமை மோசமானல், எறி குண்டு அவனிடம் இருந்தது!

தாய் நாட்டின் பெயரில் மார்ஜன் லோபிக் தீரத்துடன் மரணத்தை எதிர்த்துப் போர் புரிந்தான்.

* * *

இரண்டு நாட்கள் மார்ஜன் நிலவறையில் அசையாது படுத்திருந்தான். காயங்களிலிருந்து ரத்தம் பெருகி ஓடிற்று. அவன் உயிருடன் இருப்பதாக நினைத்து அவனை அணுகினர் ஜெர்மானியர். அவன் உடம்பிலிருந்து துணிகளை அகற்றினர். அப்பொழுது கூட மார்ஜன் அசையவில்லை. முழங்காலுக்கு மேலே ஒரு ஜெர்மானியன் அவனைச் சுட்டான். ஆனல், அவன் முனகவில்லை. நிலக்கரியின் கூரிய முனை அவன் தேகத்தை அறுத்தது. பலஹீனத்தால் அவன் இறுதியில் உணர்வு இழந்தான்.

மார்ஜன் லோபிக் சாகவில்லை. மூன்ருவது நாள் காலையில் அவன் ரஷிய அதிகாரியின் குரலைக் கேட்டான்.

"யந்திரப் பீரங்கியை முகப்பில் வை! வீட்டைச் சோதனை செய்! சீக்கிரம்!" என்ருன் அவன்.

...மார்ஜன் ஆஸ்பத்திரியில் இருக்கிருன். அவன் உயிருடன் இருக்கிருன். இது அவனுக்குத் தெரியும்; ஆஸ்பத்திரியில் இருக்கும் எல்லோருக்கும் தெரியும்.

அந்த இரண்டு நாட்கள்—இரவும், பகலும்—அவன் என்ன நினைத்தான் என்று நோயாளிகள் அவனைக் கேட்டனர்.

மார்ஜன் சிந்தித்தான். தந்தையை நினைத்தானா? ஆம்; தந்தையை நினைத்தான். தந்தை இனி நிம்மதியாக வாழலாம். ஏனெனில், எதிரிகளின் சேனை இனி அந்தப் பகுதியில் நடமாடாது. உறவினரை நினைத்தானா? ஆம்; அவர்களை நினைத்தான். வெற்றிக்காகவும், மகன் வருகைக்காகவும் பொறுமையின்றிக் காத்திருக்கும் நோயாளித் தாயாரை அவன் நினைத்தான். கிராம சோவியத்தின் காரியதரிசியாக இருக்கும் தன் மூத்த சகோதரி மரிஜாவை அவன் நினைத்தான். பள்ளிக் கூடத்தில் படிக்கும் தன் இளைய சகோதரன் வாஸிலியையும் அவன் நினைத்தான். ஆனால், சோவியத் தாய் நாட்டைப் பற்றியும், செம்படையைப் பற்றியும், தன் தோழர்களைப் பற்றியும் அவன் அடிக்கடி நினைத்தான். அவர்களில் தன் விமோசனத்தையும், தன்னைச் சேர்ந்தவர்களின் விமோசனத்தையும் அவன் கண்டான்.

மார்ஜன் லோபிக் ஆஸ்பத்திரியில் இருக்கிறான். அவன் தீரத்தைப் பாராட்டி அவனுக்குப் பரிசு அளிக்கப்பட்டது. அவனை நேரில் வாழ்த்துவதற்காக நேற்று கர்னல் பொக்காரோவ் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தான். ஜெர்மன் குண்டால் துளைக்கப்பட்ட நெஞ்சை, உண்மையான சோவியத் சிப்பாயின் நெஞ்சை வீரர் பதக்கம் விரைவில் அலங்கரிக்கும்.

சாகஸம்

[ஸிரில் லேவின்]

நள்ளிரவு. என்னைத் துயில் எழுப்பியது எது என்பதை அறிய நான் முயன்றேன். அந்தக் குரல் மீண்டும் கேட்டது. மெதுவாக, மதுரமாக ஒரு குரல் பேசிற்று; இன்னொரு குரல் மெதுவாகப் பதில் சொல்லிற்று. இரண்டாவது குரல்—தாழ்ந்த குரல்—மேஜர் வெர்ஷி கோராவின் குரல்.

" நீ காலையில் புறப்பட்டால் போதும். அது வரையில் ஓய்வு எடுத்துக் கொள் '' என்றான் மேஜர்.

" காலை வரையில் தாமதிக்க முடியாது. என்னைச் சேர்ந்தவர்கள் எனக்காகக் காத்திருப்பார்கள். உடனே புறப்பட எனக்கு அனுமதி தர வேண்டும், தோழர் மேஜர் !'' என்றான் அவன்.

முகத்தை மூடியிருந்த போர்வையை நான் அகற்றினேன். மங்கின வெளிச்சத்தில் ஒரு அதிகாரி மேஜருடன் பேசிக்கொண் டிருப்பதை நான் கண்டேன். அதிகாரி வாலிபன் ; மீசை அரும்பாத சிறுவன்.

" சரி! நீ போ !'' என்று சொன்னான் மேஜர். "எப்பொழுது நீ திரும்பி வருவாய் ?''

" இரவு திரும்பி வர முடியுமென்று நினைக்கிறேன். ஆனால், நான் எதையும் திட்டமாகக் கூற முடியாது. இரவு நாங்கள் அங்கேயே தங்க நேரலாம். நான் போகட்டுமா?''

மேஜர் தலையை அசைத்தான். மேஜரை வணங்கி விட்டு அதிகாரி வெளியே சென்றான். அவன் சிறந்த சிப்பாய் என்பதை அவன் தோற்றத்திலிருந்து எவரும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். அவன் லாகவமாக நடந்தான். சுரங்கத்தைப் பூனையைப் போன்று எளிதில் கடந்தான்.

"நாம் புறப்படலாமா, தோழர் லெப்டினென்ட்?" என்று கேட்டான் ஒருவன்.

"உடனே புறப்படுவோம். எல்லாம் தயார் செய்து விட்டாயா?" என்று லெப்டினென்ட் அமைதியாகக் கேட்டான்.

"அவர்களைப் பார்! எல்லோரும் தயாராக இருக்கிறார்கள். சுரங்கத்திலேயே எல்லோரும் இருக்கிறார்கள்" என்றான் மேஜர்.

கேள்வி கேட்கும் முறையில் நான் அவனைப் பார்த்தேன். அவன் எல்லாவற்றையும் விளக்கினான்.

"அவர்கள் வேவு பார்ப்பவர்கள். எதற்கும் துணிந்தவர்கள். 'செய்ய முடியாத வேலைகளைச் செய்யும் நிபுணர்கள்' என்று எல்லோரும் அவர்களை அழைக்கிறார்கள். உதாரணமாக, 'பேசக் கூடிய ஒருவன் தேவை' என்றான் கமாண்டர். 'ஒரு அதிகாரி கிடைத்தால் நலமாக இருக்கும்' என்று அவன் வேடிக்கையாகச் சொன்னான். ஏனெனில், ஒரு அதிகாரியைச் சிறை பிடிப்பது அந்தப் பகுதியில் அசாத்தியம். அப்பொழுது லெப்டினென்ட் அங்கே இருந்தான். அவன் கண்கள் பிரகாசித்தன. ஜெனரலிடம் பேசத் தன்னை அனுமதிக்கும்படி அவன் என்னைக் கேட்டான். 'பேசு' என்றேன் நான். 'ஆனால், அதிகம் பேசாதே!'"

"எனக்கு அனுமதி தந்தால் நான் ஜெர்மன் அதிகாரியைச் சிறை பிடிக்கிறேன்" என்ருன் அவன்.

"அப்படியாளுல் ஒருவனைப் பிடித்து வா!" என்ருன் ஜெனரல். "அவனைத் தலைமைக் காரியாலயத்திற்குக் கொண்டு வா! உனக்காக நான் காத்திருப்பேன்" என்று அவன் உல்லாசமாகச் சொன்னுன்.

"ஜெனரல் போன பிறகு நான் லெப்டினென்டிடம் மனம் விட்டுப் பேசினேன்.

"நீ வாக்களித்து விட்டாய். நீ ஒரு ஜெர்மன் அதிகாரியைச் சிறை பிடிக்க வேண்டுமே! நீ இதை எவ்வாறு செய்யப் போகிருய்?" என்று நான் கேட்டேன்.

"எப்படி இதைச் செய்வேன் என்பது எனக்குத் தெரியவில்லை. என் தோழர்களுடன் பேசி விட்டு நான் ஒரு முடிவுக்கு வருவேன்."

"மாலையில் அவன் திட்டத்துடன் வந்தான்."

"அதிகாரியைச் சிறை செய்ய நாங்கள் காலையில் புறப்படுவோம்" என்று அவன் சொன்னுன்.

"பட்டப் பகலிலா? ஜெர்மானியர் விழிப்புடன் இருக்கும் பொழுதா?"

அவன் அமைதியாகத் தன் திட்டத்தை விளக்கினுன்.

"இரவில் அவர்கள் ஜாக்கிரதையாக இருப்பார்கள். ஆனல், பகலில் அவர்கள் எங்களை எதிர் பார்க்க மாட்டார்கள்."

"அது மிகத் துணிகரமான திட்டம்; சரியான திட்டமும் கூட. ஜெர்மானியர் கண்ணில் படாமல் வெண் சட்டை அணிந்த வீரர்கள் எதிரிகள் பாசறையில் பிரவேசித்தார்கள். இரவில் அவர்கள் வெளியே வந்தார்கள்.

ஸெர்ஜன்ட் கார்யாபோவுக்கு ஜெர்மன் பாஷை நன்றாகத் தெரியும். வழியில் சந்தித்த ஜெர்மன் சிப்பாய்களிட மிருந்து தலைமைக் காரியாலயம் இருக்கும் இடத்தை அவர்கள் தெரிந்து கொண்டார்கள். தலைமைக் காரியா லயத்திற்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னான் கார்யாபோவ்.'

மேஜர் கண்கள் விஷமத்துடன் சிரித்தன.

"அந்த அதிகாரியை நீ பார்த்திருக்க வேண்டும்" என்றான் அவன். "அவனுக்கு நாற்பது வயது இருக்கும். அவன் கொழுத்த பன்றியைப் போன்று இருந்தான். அந்த அதிகாரி பீர் கடை சொந்தக்காரன் என்பது பிறகு தெரிந்தது. ஜெர்மானியர் அணிவழியாக அவனை அழைத்து வந்தார்கள். இதை எப்படிச் செய்தார்கள் என்பது அந்த சூரியனுக்குத் தான் வெளிச்சம்! அவன் வாயில் துணியைத் திணித்தார்கள். அவன் மூச்சுத் திணறிற்று. தனக்குத்தெரிந்த விவரங்களையெல்லாம் அந்த அதிகாரி சொன்னான். அவன் பணிவாக நடந்து கொண்டான். ரஷியர்களின் கைதியாக இருப்பது நல்லது என்பது தனக்குத் தெரியுமென்று அவன் பெருமையுடன் கூறி னான். பீல்ட் மார்ஷல் பாலஸும், பிறரும் ரஷியர்களின் கைதிகளாக இருக்கிறார்கள் அல்லவா? இது பெரிய விஷயம்!"

மேஜர் பேச்சை முடித்து விட்டுப் பத்திரிகை படிக்க ஆரம்பித்தான். அப்பொழுது குண்டுச் சத்தம் கேட்டது. கூரையிலிருந்து மண் உதிர்ந்தது; சிறிய ஜன்னலின் கண்ணாடிகள் கலகலத்தன. மண்ணைத் தட்டி விட்டு, குனிந்த தலை நிமிராமல் மேஜர் பத்திரிகையைப் படித்தான். குண்டுச் சத்தம் சமீபத்தில் கேட்டது. விளக்கு அணைந்தது.

அவன் திக்குச்சியைக் கொளுத்தினன். மஞ்சள் ஒளி காற் றைத் தழுவிற்று. மேஜர் மீண்டும் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தான். பிறகு அதை அழகாக மடித்து விட்டு அன்புடன் அதைத் தொட்டான். அவன் பத்திரிகையை வருடுவதைப் போன்றிருந்தது அந்த ஸ்பரிசம்.

"பிராவ்டா—புதிய மலர்" என்றான் வொஷிகோரா. போர் முனையில் இதைப் படிப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி எல்லையற்றது. இது பழைய எண்ணங்களையும், உணர்ச்சி களையும் தூண்டி விடுகிறது. நான் மாஸ்கோவில் இருப் பதைப் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது......... அந்த மகிழ்ச்சியை வர்ணிக்கவே முடியாது......"

துப்பாக்கிப் பிரயோகம் நின்றது. உடைகளைக் கழற்றுமல் அவன் படுக்கையில் படுத்தான்.

அப்பொழுது போர் முனையில் பரிபூரண அமைதி நில விற்று. இது அசாதாரணம். நான் விழித்து எழுந்தேன். எவ்வளவு நேரம் தூங்கினேன் என்பது எனக்குத் தெரி யாது. சுரங்கத்தில் யாரும் தென்படவில்லை. விளக்கு அணைந்து விட்டது. மங்கின ஒளி ஜன்னல் மூலம் அறையில் வீசிற்று. நான் வெளியே சென்றேன். ஒற்றையடிப் பாதை நதிக்குச் சென்றது.

திடீரென்று யந்திரப் பீரங்கி சுட்டது. இன்னும் சூரியன் உதிக்கவில்லை. எனினும், வானம் சிவந்திருந் தது. வாத்துக் கூட்டங்களைப் போன்று கோபத்துடன் கர்ஜித்துக் கொண்டு மேற்கே பறந்தன விமானங்கள். தேவதாரு மரத் தோப்பிலிருந்தும், நதிக்கரையிலிருந்தும் குண்டுகள் பறந்து வந்தன. சிப்பாய்கள் அங்கு மிங்கும் தென்பட்டனர். அந்த இடத்தை நோக்கி நான் பாய்ந் தேன். மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு நடவடிக்கை களைக் கவனித்துக் கொண்டிருந்தான் மேஜர் வொர்ஷி கோரா. கானகத்தில் போர் நடந்து கொண்டிருந்தது.

"அது ஸெமியோனேவாவா?" என்று கோபத்துடன் கேட்டான் மேஜர். "அது அவளாக இருக்க முடியாது."

நான் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தேன். ஸெமியோனேவா யார்?

"காலையில் அவள் எதிரிகள் அணியைக் கடக்க மாட்டாள்" என்று மேஜர் உறுமினன். "எந்த விதமான மறைவிடமு மின்றி அவள் பட்டப் பகலில் வரமாட்டாள். ஆளை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை."

"அவள் தவறான காரியம் செய்யமாட்டாள்" என்று கார்ப்பொரல் எக்ரோசக் மதுரமான குரலில் சொன்னான். அவன் வயது முதிர்ந்தவன்; அடர்ந்த மீசை படைத்தவன். "அவள் திட்டத்துடன் தான் வேலை செய்வாள். அவள் திட்டம் என்ன என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்."

"பொறுத்திருப்பதற்கு என்ன இருக்கிறது? அவளைப் பார்!" என்று கூவினன் மேஜர். "இன்று அவள் ஆபத்திலிருந்து தப்ப முடியாது!"

கானகத்திலிருந்து இருவர் வெளியே வந்தனர். எங்கள் அணியை நோக்கி அவர்கள் வளைந்து வளைந்து நடந்தனர். அவர்களைச் சுற்றி குண்டு மாரி பொழிந்தது. அடிக்கடி பனிச் சுருள்கள் மேலே எழுந்தன. திடீரென்று ஒரு உருவம் கீழே விழுந்தது. அதற்குப் பிறகு அந்த உருவத்தை எதிரிகள் சுடவில்லை. வேடர்களால் துரத்தப்படும் ஓநாயைப் போன்று அந்த உருவம் குண்டுக்கு சாமர்த்தியமாகத் தப்பிற்று. கீழே விழுந்த உருவம் குதித்து எழுந்து ஓட ஆரம்பித்தது. அவர்கள் போக்கு எனக்கு அசாதாரணமாகப் பட்டது. அவர்கள் ஓடினர்கள் என்பது உண்மை தான். ஆனல், அவர்கள்

மறைவிடத்தில் ஒளிந்து கொள்ளவோ, எங்களிடம் வரவோ அவசரப்படுவதாகத் தெரியவில்லை. திடீரென்று அவர்கள் பனிக்கட்டி மீது படுத்தார்கள். வெண் சட்டை அணிந்திருந்த அவர்களை அப்பொழுது அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. பிறகு குதித்து எழுந்து ஓட ஆரம்பித்தார்கள்.

"சீக்கிரம் வந்து விடுங்கள்!" என்று எகோர்சக் கூவி அழைத்தான். "எதற்காக வீண் பொழுது போக்கு கிறீர்கள்?"

மேஜர் நடத்தை எங்களுக்கு விளங்கவில்லை. ஆச்சரி யத்துடன் அவன் முனகினான். மீண்டும் ஓடும் உருவங் களைப் பார்த்தான். பிறகு வலது பக்கம் உற்றுப் பார்த்து விட்டு அவன் சிரித்தான்.

"ஆம்! ஸெம்யோனோவா இதைச் செய்வாள் என் பதை நான் ஊகித்திருக்க வேண்டும்!..." என்று தாழ்ந்த குரலில் சொன்னான் மேஜர்.

"ஸெம்யோனோவாவா?".

அவன் என்னைத் தந்திரமாகப் பார்த்தான்.

"ஆம்; அவள் தான்!" பிறகு எகோர்சக்கை அவன் வெற்றி மகிழ்ச்சியுடன் பார்த்தான். "நன்றாக ஓடு கிறார்கள் இளம் பிசாசுகள்!" அவன் ஆற்றின் அக்கரை யைச் சுட்டிக் காட்டினான். "சிறந்த வேலை, இல்லையா கார்ப்பொரல்?"

"இதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது? வெகு நேரத்திற்கு முன்பே அவர்கள் இங்கே வந்திருக்க லாம்!" என்று அவன் ஆச்சரியத்துடன் கூறினான்.

“அவர்கள் இங்கே வர இவ்வளவு நேரமாவதால் தான் இதைச் சிறந்த வேலை என்கிறேன்” என்று கூறி விட்டு மேஜர் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினான். “அதைப் பார்!” அவன் வடக்கே சுட்டிக் காட்டினான்.

கார்ப்பொரல் வடக்கே பார்த்தான். அவன் முகம் பிரகாசம் அடைந்தது. அவன் ஓடும் சிப்பாய்களை மரி யாதையுடன் பார்த்தான்.

“இப்பொழுது எனக்குப் புரிகிறது, மேஜர்! தலை சிறந்த குழந்தை, லெப்யோனோவா! பிறவி வேவுகாரி!”

“என்ன நடக்கிறது, மேஜர்? விஷயத்தை விளக்கிச் சொல்லுங்கள்!” என்று நான் கேட்டேன்.

“எல்லாம் விரைவில் உனக்கு விளங்கும்” என்று அவன் புன்முறுவலுடன் கூறினான். பிறகு மீண்டும் வடக்கே பார்த்தான். “எல்லோரும் வந்து விட்டார்கள் என்று நினைக்கிறேன்” என்று அவன் திருப்தியுடன் கூறினான். பிறகு அவன் கூவினான்: “எல்லோரும் வருக! அவர்கள் வந்து விட்டார்கள்!”

சில நிமிடங்களில் இருவரும் எங்களை அடைந்தனர். அவர்களில் ஒருவன் சிறுவன். அவன் சட்டையைக் கழற்றி எறிந்துவிட்டு நெடுமூச்சு விட்டான். குளிர்காற்று உக்ரமாக வீசிற்று என்றாலும் அவன் தொப்பியை வீசி எறிந்தான். கை உறையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டு கணீரென்று ஒலிக்கும் குரலில் சொன்னான்:

“நல்ல ஓட்டம்! வீணில் லெப்டினென்ட் எங்களுக்கு ஓடக் கற்றுக் கொடுக்கவில்லை. அவர்கள் வந்துவிட்டார் களா, தோழர் மேஜர்?”

வெர்ஷிகோரா பதில் சொல்லவில்லை. புதர்களிலிருந்து வெளிப்படும் உருவங்களை அவன் உணர்ச்சியுடன்

பார்த்துக்கொண் டிருந்தான். பல வடிவங்கள் மரங்களுக் கிடையே தோன்றின, பிறகு மறைந்தன. ஒரு அதிகாரி அவர்களுக்குத் தலைமை தாங்கினான். மேஜரை அடைந் ததும் அவன் வணக்கம் செலுத்தினான். முன்பு நான் கேட்ட அதே குரலை மீண்டும் கேட்டேன்.

"அந்தப் பேய்களை நன்றாக ஏமாற்றினீர்கள்!" என்று உல்லாசமாகக் கூறினான் மேஜர். "நல்ல வேலை செய்தாய், ஸெம்யோனோவா! இதை மறைப்பதில் பயனில்லை. முதலில் நான் உன்னைச் சபித்தேன். ஏனெ னில் நீ என்ன செய்கிறாய் என்பது எனக்கு விளங்க வில்லை."

நான் ஸெம்யோனோவாவை இமைகொட்டாது பார்த் தேன். அவள் தேகம் வாலிபனின் தேகத்தைப் போன்றி ருந்தது. அவள் குரலும் வாலிபனின் குரல் தான்!

"வாலிபனா? சிறுமியா?"

"அவள் போர் புரிவதைக் கண்டு அவளை வாலிபனாக மதிக்கிறார்கள் ஜெர்மானியர். அவளை உனக்கு அறிமுகப் படுத்துகிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறினான் மேஜர்.

லெப்டினென்ட் ஸெம்யோனோவா கை குலுக்கி விட்டுச் சிரித்தாள். அவள் கரிய, அகன்ற விழிகள் என்னை ஆகர்ஷித்தன. அந்தக் கன்னி விழிகள் போரில் பண்பட்ட சிப்பாயின் கண்கள் தானா?

"நான்கு வருடங்களாக அவள் போர் புரிகிறாள்" என்றான் மேஜர்.

"அவளுக்குப் போர் முறைகள் எல்லாம் தெரியும்— எல்லாம் தெரியும்! விரைவில் அவளுக்கு வீரர் தங்க நட்சத்திரம் அளிப்பார்கள். பொறுத்துப் பார்! அவள்

அனியைக் கடந்ததை நீ காணவில்லையா? எதிரிகளைத் தன் பக்கம் இழுத்தாள். பிறகு ஒரு மைல் தூரம் கடந்தாள்!"

பிறகு எதையோ நினைத்துக் கொண்டு அவன் கோபத்துடன் கேட்டான்:

"நீ ஏன் பட்டப் பகலில் வந்தாய்? மாலை வரையில் பொறுத்திருக்கக் கூடாதா?"

பதில் சொல்லுமுன் அவள் தன் கழுத்தில் தொங்கின சிறிய தோல் பையை வெளியில் எடுத்தாள். அத்தகைய பையை நாங்கள் உபயோகிக்கவில்லை.

"பொறுத்திருக்க முடியவில்லை, மேஜர்! ஜெர்மானியர் எங்களைத் துரத்தினர்கள்! அவர்கள் தலைமைக் காரியாலயத்தை நாங்கள் சூறையாடினேம். அங்கே சில தஸ்தாவேஜிகள் இருந்தன. இதனுல் ஆத்திரம் அடைந்த அவர்களிடமிருந்து நாங்கள் தப்ப வேண்டியிருந்தது. இதோ அந்தத் தஸ்தாவேஜிகள்!"

கன்னிச் சிரிப்புடன் அந்தப் பையை அவள் மேஜரிடம் கொடுத்தாள்.

படு கொலை

[நடான் ரிபாக்]

அவன் நடுங்கிக் கொண்டும், நம்பிக்கையுடனும் அந்த நிமிடத்தை எதிர்பார்த்தான். அந்த நிமிடத்தை எதிர் பார்த்துக் கொண்டு அவன் உயிர் வாழ்ந்தான். போர் உக்ரமாக நடந்த பொழுது, ஜெர்மன் வியூகத்தைச் செம்படை பிளந்த பொழுது, மரணத்தின் இரக்கமற்ற கரம் அவனை அச்சுறுத்தின பொழுது அந்த அச்சுறுத்தும் நிமிடத்தைப் பற்றி அவன் இடைவிடாது நினைத்தான். சிறிது நேரம் அவன் கண்களை மூடுவான். உடனே ஒரு சிறிய வீடு அவன் கண்முன் தோன்றும்; லீஸாவின் இன்பக் கூச்சல் அவனுக்குக் கேட்கும்; வால்யா அவனைத் தழுவுவாள். உருக்குலைந்த கற்பனை அடிக்கடி வேறு விதமான சித்திரங்களையும் தீட்டும். உடனே பீதி அவனை ஆட்கொள்ளும். பயங்கரமான சித்திரத்தை அவன் உறுதியுடன் துரத்தினான். இன்பம் கொஞ்சும் சந்திப்பைப் பற்றி மாத்திரம் தான் அவன் உள்ளம் நினைத்தது. இதை அவன் யாரிடமும் சொல்லவில்லை. எனினும் லெடிசெவ் என்னும் சிறிய உக்ரேனிய நகரில் கர்னலின் மனைவியும், புதல்வியும் வசிப்பது அந்த யூனிட்டைச் சேர்ந்த எல்லோருக்கும் தெரியும். வேதனை அளிக்கும் இத்தகைய எண்ணம் கர்னல் ஸெர்பிசென்கோவின் யூனிட்டைச் சேர்ந்த பலருக்கும் பொது. எல்லோரும் நல்ல முடிவை எதிர்

பார்த்தனர். ஆனால், விடுதலை அடைந்த நகரங்களில் அவர்கள் கண்ட காட்சி இந்த நம்பிக்கையை அடித்துத் தகர்த்தது. வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாக்க மனிதன் நன்மையை எதிர் பார்ப்பான் என்று மேஜர் ஸெர்ஜியெவ் சொல்லுவது வழக்கம்!

மேஜரின் பேச்சைக் கேட்டு ஸெர்பிசென்கோ புன்னகை புரிவான். ஆனால் மேஜர் சொன்னதை அவன் மறுக்க மாட்டான். அவன் கட்சிக் கார்டில் லீனவின் படமும், வால்யாவின் படமும் இருந்தது. அவர்கள் இருவரும் ஸெர்பிசென்கோவை உற்றுப் பார்த்தனர். புன்னகை அவர்கள் அதரங்களில் மங்கவே இல்லை. அவன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த பொழுது அந்தப் படத்தை இமை கொட்டாது பார்த்தான். அவர்கள் புன்னகை புரிந்து அவனை உற்சாக மூட்டினர். "கவலைப்படாதே!" என்று படம் சொல்லிற்று. "கவலைப்படாதே! எல்லாம் ஒழுங்காய் விடும். வேண்டுமானால் பொறுத்துப் பார்!" உடனே இருண்ட மேகம் மறைந்து விடும். அவன் ஹிருதயம் இன்பத்தால் நிறையும். அவர்களுடன் அவன் வாழ்ந்தான்; அவர்களுடன் அவன் பேசினான்; தன் இன்பத்தையும், துன்பத்தையும் அவர்களிடம் சொன்னான். செய்தி அறிக்கையில் லெடிசெவ் பெயர் இருக்கிறதா என்று அவன் ஆர்வத்துடன் ஆராய்ந்தான். ஆனால், அது மிகச் சிறிய நகரம். அந்தப் பெயர் அறிக்கையில் இடம் பெறவில்லை.

தலைமை அதிகாரிக்கு அடிக்கடி கடிதம் வந்தது. ஓம்ஸ்க் நகரிலிருந்த அவன் மனைவி அடிக்கடி கடிதம் எழுதினாள். அந்தக் கடிதங்களையும், தான் எழுதின பதிலையும் தலைமை அதிகாரி கர்னலுக்கு வாசித்துக் காட்டினான். அவள் ஸெர்பிசென்கோவுக்குப் கடிதம் எழுதினாள். தலைமை அதிகாரியின் மனைவி ஸெர்பிசென்

கோவுக்குத் தேறுதல் கூறினாள். யுத்தம் முடிந்ததும் மனைவியுடனும், புதல்வியுடனும் தன் ஊருக்கு வரும்படி அவள் கர்னலைக் கேட்டுக் கொண்டாள். அப்பொழுது அவன் அந்த நிமிடத்தைப் பற்றித் தான் சிந்தித்தான். அமைதி நிலவும் லடிசெவ் வீதியில் அவன் நடப்பான்; வெளிக்கதவைத் திறந்து கொண்டு உள்ளே பிரவேசிப்பான்; மெதுவாகக் கதவைத் தட்டுவான். ஆனால், இது கனவு. கனவைப் பரிபூரணமாக நம்பிவிடக் கூடாது என்பது அவனுக்குத் தெரியும். ஒருக்கால் நிலைமை வேறு விதமாக இருக்கலாம்; துன்பமும், இன்னலும் அவனுக்காகக் காத்துக்கொண் டிருக்கலாம்.

மாதங்கள்—மகிழ்ச்சி அளிக்கும் சம்பவங்கள் நிறைந்த மாதங்கள்—ஓடி மறைந்தன. ஜெர்மானியர் எல்லா முனைகளிலும் முறியடிக்கப் பட்டனர்; ஆயிரக் கணக்கான ஜெர்மானியர் சிறை செய்யப்பட்டனர். இந்த போராட்டங்களில் செர்பிசென்கோவின் யூனிட் வியக்கத்தக்க முறையில் போர் புரிந்தது. வேலை அதிகமாக இருந்ததால் அந்தப் படத்தை அடிக்கடி பார்க்க கர்னலுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஆனால், மனைவி, புதல்வி ஆகியவர்களின் உருவம் அவன் மனதைவிட்டு அகலவே இல்லை. பூகோள படத்தில் லெடிசெவ் இருக்கும் இடத்தில் அவன் சிவப்புப் பென்சிலால் கோடு கிழித்திருந்தான். அந்த யூனிட்டைச் சேர்ந்த எல்லோரும் லெடிசெவ்வின் தலைவிதியை அறிய ஆசைப்பட்டனர். கர்னல் ஸெர்பி சென்கோவின் யூனிட் நோவோக்ராட்—வோலின்ஸ்கைக் கைப்பற்றின. அன்று செம்படை லெடிசெவ் நகரைக் கைப்பற்றி விட்டதாக மாஸ்கோ ரேடியோ அறிவித்தது. இந்தச் செய்தியை கேட்ட ரேடியோ—ஆப்பரேட்டர் கர்னலிடம் சந்தோஷச் செய்தியைச் சொன்னான். இன்பத்தில் அவன் கர்னலுக்கு வணக்கம்

செலுத்தக்கூட மறந்து விட்டான். கர்னல் போர்க்களத்தில் இருந்தான். நாற்புறமும் பீரங்கிகள் கர்ஜித்தன. அவன் ஆர்வத்துடன் ரேடியோ-ஆப்பரேட்டரின் கையைப் பிடித்தான். கர்னல் அவனுக்கு நன்றி செலுத்தினன். ஆனால், கர்னலின் முகத்தில் துக்கக் குறி தென்பட்டதைக் கண்டு அவன் வியந்தான். நகரை செம்படை கைப்பற்றி விட்டது. ஜெர்மானியர் புறமுதுகிட்டு ஓடுகின்றனர். லெடிசெவ் விடுதலை பெற்று விட்டது. இன்னும் என்ன வேண்டும்? அவன் திரும்பினன். மேஜர் ஸொர்கியெவ் கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்தான். அவன் தூங்குகிறன? அவன் கரங்கள் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தன. பொட்டிலிருந்து காது வரையில் ரத்தம் ஒரு கோடு கிழித்திருந்தது.

அன்றிரவு கர்னல் ஸொர்பிசென்கோ ஓம்சுக்கு ஒரு கடிதம் எழுதினன். உண்மையை அவன் ஏன் மறைக்க வேண்டும்? நெருக்கடியான சமயத்தில் ஸொர்கியெவ் தாக்குதலுக்குத் தலைமை தாங்கினதாகவும், போரில் அவன் வீர மரணம் எய்தினதாகவும் ஸொர்பிசென்கோ எழுதினன். இந்த வார்த்தைகள் அவன் இருதயத்தின் அடித்தளத்திலிருந்து வந்தன. ஸொர்கியெவ்வின் புன் முறுவல் தவழும் முகம் ஸொர்கிசென்கோவின் மனக்கண் முன் தோன்றிற்று. போருக்கு முன் அவன் குதூகலத்துடன் சொன்னன்: "இன்று கண்டிப்பாக நம்மவர்கள் லெடிசெவ்வைக் கைப்பற்றுவார்கள்!"

விரைவில் லெடிசெவ் செல்ல ஸொர்பிசென்கோவுக்கு அனுமதி கிடைத்தது. தலைமைக் காரியாலயத்திலிருந்து அவனுக்கு அளித்த அனுமதிச் சீட்டில் கீழ்க்கண்ட வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன: "லெடிசெவ்வில்

வசிக்கும் குடும்பத்தைச் சந்திக்க கர்னல் ஸொர்பிசென் கோவுக்கு நான்கு நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது.''

போமிசென்கோவை கர்னல் தன்னுடன் அழைத்துச் சென்றான். மே மாத இரவில் அவர்கள் பிரயாணம் செய்தனர். பொழுது புலருமுன் அவர்கள் லெடி செவ்வை அடைந்தனர். அந்த வீதியை அவர்கள் அடைந்தனர். வீதியின் இரு மருங்கிலும் எலுமிச்சைச் செடிகள் வரிசையாக நின்றன. தோட்டங்களுக்கு மத்தியில் இருந்த குடிசைகளை வெண் திரை மூடியிருந்தது.

வேலிக்கு அருகில் மோட்டார் நின்றது. ஒரே தாவில் கர்னல் வாசற்படியைக் கடந்தான். அவனை வரவேற்க வீட்டில் யாரும் இல்லை என்பதை அவன் உடனே தெரிந்து கொண்டான். உணர்ச்சியுடன் அவன் சுற்று முற்றும் பார்த்தான். காலைக் கதிரவனின் கிரணங்கள் வீதியை அழகு படுத்தின. எல்லா வீடுகளும் இடிந்து கிடந்தன. வீதியில் யாரும் தென்படவில்லை. அவன் முகப்பை அடைந்தான். ஏணி உளுத்திருந்தது. அவன் கிராதியில் கை வைத்ததும் அது தூள் தூளாயிற்று. அவன் கதவைத் திறந்ததும் திடுக்கிட்டு நின்றான். அதோ இருக்கிறது, உணவருந்தும் அறை. இன்பம் கொஞ்சின எத்தனை நாட்களை, உல்லாசமான எத்தனை மாதங்களை அவன் அந்த வீட்டில் கழித்தான்! அப்பொழுது தூசியும், சிலந்திப் பூச்சிகளின் வலைகளும் அங்கே நிறைந்திருந்தன. அடுத்த அறையில் வால்யாவின் படுக்கை அலங்கோலமாகக் கிடந்தது. பீரோ நொறுங்கிக் கிடந்தது.

அவன் அதரங்கள் உலர்ந்தன. வேதனை அவனை வாட்டி வதக்கிற்று. பச்சை வடிவங்கள் அவன் கண்முன் நர்த்தனமாடின. பயங்கரமான, விலக்கமுடியாத ஏதோ

ஒன்றை நினைத்து அவன் ஹிருதயம் விறைத்தது. ஆம்; அங்கே மனிதன் வசித்துப் பல மாதங்களாகின்றன. இந்த வீட்டில் வீருவும், வால்யாவும் அவனை வரவேற்பார்கள் என்று அவன் எதிர்பார்த்தது எவ்வளவு சிறுபிள்ளைத்தனம்—எவ்வளவு முட்டாள்தனம்! ஆம்; அது சிறுபிள்ளைத்தனம் தான்! அது அசட்டுத்தனம் தான்! பாழ்பட்டு நின்ற க்ரெஷ்காடிக்கையும், இடிந்து கிடந்த பெல்கொரோடையும், ஹிட்டோமிரின் சாம்பலையும் கண்ட பிறகு கூட அவனுக்கு உண்மை விளங்கவில்லை என்றால்? அவன் நம்புவதற்கு என்ன இருக்கிறது? நல்ல காரியத்தை எதிர்பார்ப்பது மனித இயற்கை! மேஜரின் தத்துவம் அவன் நினைவிற்கு வந்தது......

அப்பொழுதும் ஸெர்பிசென்கோ நம்பிக்கையை இழக்கவில்லை. அவன் யாரையாவது சந்திக்கவேண்டும்; அவர்களிடம் பேசி உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாம் அடையாளம் கூட இல்லாமல் மறைந்து விட முடியாது!

"யாரையாவது சந்திக்க முயலுகிறேன்! என் நண்பர்களைச் சந்திக்க முயலுகிறேன்!" என்று அவன் போமிசென்கோவிடம் கூறினான். "புறப்படு!" என்றான் மோட்டார் டிரைவரிடம்.

அவர்கள் காலியாக இருந்த வீதியில் அலைந்து திரிந்தனர். இறுதியில் அவர்கள் ஒரு கிழச் செம்படவனைச் சந்தித்தனர். அவன் செவிடன். அவர்கள் சொன்னது அவனுக்குக் கேட்கவில்லை. ஆனால், திடீரென்று அவன் கூச்சலிட்டான். பிறகு கர்னலைக் கட்டிக் கொண்டான். அப்பொழுது தான் ஸெர்பிசென்கோ கிழவனை அடையாளம் கண்டுபிடித்தான். அவன் தான் வீருவின் ஆசிரியர் க்வோரோஸ்டோவ். அடிக்கடி அவன் கர்னல் வீட்டிற்கு விஜயம் செய்தான், முன் காலத்தில்.

அன்று மாலை லீனுவும், வால்யாவும் பட்ட கஷ்டத்தை ஸெர்பிசென்கோ கேட்டான். அப்பொழுது சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. வானம் செக்கச் செவே ரென்று இருந்தது. அது மாலைக் கதிரவனின் கிரணங் களின் விளையாட்டா? அல்ல! அந்த நகரத்தில் ஓடின ரத்தத்தால் வானம் செந்நிறமாக மாறியிருந்தது. பின் வாங்குமுன் ஜெர்மானியர் காவல் சிறையிலிருந்த எல் லோரையும்—அவன் மனைவியும், புதல்வியும் அந்தக் காவல் சிறையில் இருந்தனர்—மேற்கே ஓட்டிச் சென் றனர்.

ஜெர்மானியர் அடித்ததால் ஆசிரியன் செவிடானன். அவன் இன்பக் கண்ணீரும், துன்பக் கண்ணீரும் வடித் தான். அவன் இடைவிடாது பேசினன். ஸெர்பிசென் கோவும், அவன் நண்பர்களும் கிழவன் சொன்னதைக் கவனமாகக் கேட்டனர். கர்னலின் ஹிருதயம் சூன்ய மாயிற்று. இந்த நிமிடத்திற்காக அவன் எத்தனை மாதங்கள் காத்திருந்தான்? இன்பகரமான சந்திப்பை அவன் எத்தனைதரம் கனவு கண்டான்? அவன் முன்னே சந்தேகம் என்னும் கனமான சுவர் தோன்றிற்று. அந்தப் பயங்கரமான சுவரை அவன் தகர்க்க முடியாது; அதன் மீது ஏறவும் முடியாது! இது தான் முடிவு! இனி நம்பிக் கைக்கு இடமில்லை. கிழவனிடம் விடைபெற்ற பொழுது அவன் மனம் கண்ட முடிவு இது. அவன் போர்முனைக்குத் திரும்பினன்.

மறுநாள் ஜெனரலிடம் நடந்ததைச் சொன்னன் ஸெர்பிசென்கோ. திடீரென்று நம்பிக்கை மீண்டும் அவன் மனதில் இடம் பெற்றது. இதை ஆதரிப்பதைப் போன்று ஜெனரல் சொன்னன்:

"கவலைப்படாதே! நீ அவர்களை விரைவில் காண்பாய்! நாம் ஜெர்மானியரைத் துரத்துகிறோம். எனவே, புதிய

காவல் சிறைகளைக் கண்டுபிடிக்க அவர்களுக்கு நேரம் இருக்காது!''

ஸெர்பிசென்கோ நம்பிக்கையுடன் காத்திருந்தான்.

அந்தக் காலத்தில் ஸெர்பிசென்கோ சந்தோஷப்படத் தக்க பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. செய்தி அறிக்கையில் அவன் பெயர் அடிக்கடி இடம் பெற்றது. பத்திரிகைகள் அவனைப் பற்றிக் குறிப்புகள் எழுதின. அந்த முனையிலிருந்த படைகளில் அவன் படை சிறந்ததென்று மதிக்கப் பட்டது. அவன் சட்டையை சுவரோவ் பதக்கம் அலங்கரித்தது. ஆம்; அவை இன்பம் கொஞ்சின நாட்கள். ஆனால், அவன் மனம் சாந்தி அடையவில்லை. போரின் தன்மை மாறிற்று. வெற்றி தன் வலிமை மிக்க சிறகை விரித்தது. ஆனால், அவன் மனம் சாந்தி அடையவில்லை. மீண்டும் அவன் காத்திருந்தான்; பொறுமையுடனும், உறுதியுடனும் அவன் காத்திருந்தான். வற்றாத ஊற்றைப் போன்று நம்பிக்கை அவனுக்கு உயிர் வாழ உதவி புரிந்தது.

ஜூன் மாதம் சம்பவங்கள் துரிதமாக நிகழ்ந்தன. ஸெர்பிசென்கோவின் யூனிட் ஸான் நதியைக் கடந்து ஜெர்மானியரின் கோட்டையைப் பிடித்தது. பக்க வாட்டில் எதிரிகளைத் தாக்கிக் கொண்டிருந்த படையின் வருகைக்காக அவர்கள் அங்கே தங்க நேர்ந்தது. ஸ்டராயாபோடில் யாஸ்காவில் ஸெர்பிசென்கோ தங்கினான். அந்த ஊர் லெடிசெவ்வை அவனுக்கு ஞாபக மூட்டிற்று. ஸ்டராயா போடில் யாஸ்காவுக்கு அருகில் இருந்த காட்டில் ஜெர்மன் சிறை முகாம் இருந்தது. அந்தச் சிறையைப் பார்வையிட ஸெர்பிசென்கோ விரைந்து சென்றான். அது ஏனைய ஜெர்மன் சிறைகளைப் போன்றிருந்தது. அங்கே எலும்புக் கூடுகள் மலைபோல் குவிந்து

கிடந்தன. இன்னொரு மூலையில் விறைக்காத பெண்களின் பிணங்களையும், குழந்தைகளின் தேகங்களையும் அவர்கள் கண்டனர். பிணங்களை எரிப்பதற்காகப் பல அடுப்புகள் அங்கே இருந்தன. சிறைக் காவற்காரர்கள் தப்பி ஓட முயன்றனர். ஆனால், ஒருவன் கூடத் தப்பிச் செல்லவில்லை. உயிருடன் தப்பினவர்கள் சிறை செய்யப் பட்டனர். ஒரு கொட்டகையில் ஏராளமான தஸ்தாவேஜிகள் இருந்தன. அவைகளைப் பரிசீலனை செய்யும்படி ஸெர்பிசென்கோ கட்டளை இட்டான்.

ஒரு ஜெர்மன் மேஜர் ஸெர்பிசென்கோவிடம் பேச விரும்பினான். அவனுக்கு ரஷிய பாஷை நன்றாகத் தெரியும். பேச அவனுக்கு அனுமதி அளித்தான் ஸெர்பிசென்கோ.

"கர்னல்! என் ஹிருதயத்தைத் திறந்து காட்ட நான் விரும்புகிறேன். நான் கண்டதையெல்லாம் சொல்லி விடுகிறேன். உண்மையை சோவியத் அதிகாரிகளிடமிருந்து மறைப்பது முட்டாள்தனம் என்று நான் கருதுகிறேன். என் பெயர் பாமர்!" என்று அவன் ரஷிய பாஷையில் சொன்னான்.

ஜெர்மானியன் கர்னலின் கண்களை உற்றுப் பார்த்தான். அவன் முகம் வெளுத்திருந்தது. அவன் மூக்குக் கண்ணாடி கீழே தொங்கிற்று. அவன் சட்டை கிழிந்திருந்தது. இரண்டு பதக்கங்கள் அவன் சட்டையில் தொங்கின.

கர்னல் ஸெர்பிசென்கோ அவனை ஏற இறங்கப் பார்த்தான். இத்தகைய பல ஜெர்மன் அதிகாரிகளை கர்னல் கண்டிருக்கிறான். நிலைமை பாதகமாக மாறினதும் ஹிருதயத்தைத் திறந்து காட்ட அவர்கள் துடித்தனர்.

அவர்கள் யோக்கியதாம்சம் என்ன என்பது கர்னலுக்கு நன்ருகத் தெரியும்.

"கைதியைத் தலைமைக் காரியாலயத்திற்கு அழைத்துச் செல்!" என்று கர்னல் உத்தரவிட்டான். பிறகு அவன் நடந்தான். அந்தப் பிரதேசம் எங்கும் அழுகின பிணம் நாறிற்று. கிழிந்த துணிகளும், பூட்சுகளும் அங்குமிங்கும் கிடந்தன.

"ஒருக்கால் அவர்களும் இங்கே சித்திரவதை செய்யப்பட்டிருக்கலாம்!" என்று நினைத்து நடுங்கினன் கர்னல். இந்தச் சிறை முகாமில் ஏதாவது நிகழலாம், இந்தச் சிறை முகாம் எல்லாவற்றையும் தெளிவுபடுத்தும் என்று அவனிடம் ஏதோ சொல்லிற்று. இந்த எண்ணத்தை அகற்ற அவன் பெருமுயற்சி செய்தான். காரியாலயத்திற்கு அவன் திரும்பினன். ஆனல், அவனல் தூங்க முடியவில்லை. அவன் ஒன்றும் சொல்லவில்லை. ஆனல், அவன் பேசாமலே எல்லோரும் நிலைமையைத் தெரிந்துகொண்டனர்.

அதிகாலையில் போமிசென்கோ அங்கே வந்தான்.

"அவன் தூங்குகிருனு?" என்று அவன் ஒரு சிப்பாயைக் கேட்டான்.

"இல்லை! சிறிது நேரத்திற்கு முன்புதான் என் சரித்திரத்தைச் சொல்லும்படி அவன் கேட்டான். இரவு முழுதும் அவன் அறையில் விளக்கு எரிந்தது."

போமிசென்கோ உள்ளே ஓடினன்.

"நமது சந்தேகத்தைத் தீர்க்கும் தஸ்தாவேஜுகள் அகப்படவில்லை" என்ருன் போமிசென்கோ.

"எல்லா தஸ்தாவேஜிகளும் நமக்குத் தேவை!" என்றான் கர்னல். "அவர்கள் எல்லோருக்கும் உறவினர்கள் இருக்கிறார்கள். நான் காத்திருப்பதைப் போன்று அவர்களும் காத்திருக்கிறார்கள்!"

"கைதியை எப்பொழுது அழைத்து வரவேண்டும்?"

"பத்து மணிக்கு" என்றான் கர்னல்.

பத்து மணிக்கு பாமர் கர்னலுக்கு முன் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அவன் நிதானமாகச் சொன்னான்:

"நான் எதையும் மறக்க மாட்டேன், கர்னல்! இரண்டு மாதங்கள் நான் 157 காவல் சிறையில் வேலை செய்தேன். ஒஸ்ட்லாண்டிலுள்ள தலைமைக் காரியாலயம் பிறப்பிக்கும் உத்தரவுகளை நான் நிறைவேற்றினேன். நான் கண்டதை யெல்லாம் சொல்லி விடுகிறேன்!"

"நீ சம்பவங்களைக் கண்டாய்! அவ்வளவு தானே?"

"அவ்வளவு தான்!" என்றான் பாமர்.

"உன் சிறையில் இருபதாயிரம் சோவியத் பிரஜைகள் கொல்லப் பட்டார்கள், அல்லவா?"

"இருபதாயிரம் பேர் அல்ல, கர்னல்! இருபத்திரெண்டாயிரத்தி எழுநூற்றி ஐம்பத்தி மூன்று பேர்! அவர்கள் மிருகத்தனமாக, காட்டுமிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டார்கள்!" என்றான் ஜெர்மானியன்.

"அந்தப் படுகொலையில் நீயும் பங்கெடுத்துக் கொண்டாயா?" என்று கேட்டான் கர்னல்.

"இல்லை! சத்தியமாக நான் அதில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. நான் அதைக் கண்டேன்!" என்று ஆர்வத்துடன் கூறினான் ஜெர்மானியன்.

"நீ இன்னும் என்ன சொல்ல வேண்டும்?" என்று வெறுப்பை அடக்க முடியாமல் கேட்டான் ஸெர்பி சென்கோ.

"பிணங்களை எரிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட அடுப்பைப்பற்றி நான் பேச விரும்புகிறேன், கர்னல்......"

"சிறையில் எத்தனை குழந்தைகள் இருந்தன?"

"எனக்குத் தெரியாது, கர்னல்!"

"இனி நீ போகலாம்!" என்றான் ஸெர்பிசென்கோ.

ஜெர்மானியன் எழுந்தான். அவன் கைகள் நடுங்கின. கலக்கத்தில் அவன் ஒரு பொத்தானை அவிழ்த்தான்—மீண்டும் பொருத்தினான். அவன் செய்கையைக் கூர்ந்து கவனித்தான் கர்னல். அடுத்த பொத்தான் காணப்படவில்லை. அந்த இடத்தில் ஒரு துவாரம் தெரிந்தது.

"கைதியை அழைத்துச் செல்!" என்றான் கர்னல்.

"வழக்கமான கதை!" என்றான் கர்னல். "தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முயலுகிறான்!" அதற்குப் பிறகு அவன் அந்த ஜெர்மானியனைப் பற்றி நினைக்கவில்லை. தஸ்தாவேஜிகளை எடுத்துக் கொண்டு அவன் வெளியே சென்றான்.

போமிசென்கோ முகப்பில் நின்றுகொண்டிருந்தான். அவன் கர்னலை நிராதரவாகப் பார்த்தான்.

"இன்னும் எதையாவது கண்டு பிடித்தீர்களா?"

"தோழர் கர்னல்! தோழர் கர்னல்!........."அவனால் பேச முடியவில்லை! அவனால் அதைச் சொல்ல முடியவில்லை!

"என்ன?"

"கிணற்றில் நாங்கள் பல குழந்தைகளைக் கண்டோம்......"

ஸெர்பிசென்கோ மோட்டாரை நோக்கி ஓடினான்.

அவன் கிணற்றுக்கு அருகில் நின்றான். தரையில் குழந்தைகளின் பிணங்கள் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன. சின்னஞ்சிறிய முகங்கள்! முறுகின வாய்கள் உருக்குலைந்த கரங்கள்! பீதி நிறைந்த கண்கள்...... வலது புறத்தில் இருக்கும் அந்தக் குழந்தை யார்? வால்யா! உடனே வால்யாவை அவன் அடையாளம் கண்டு பிடித்தான். அவள்—ஸெர்பிசென்கோவின் புதல்வி—அங்கே விறைத்துக் கிடந்தாள். வால்யா இறந்து விட்டாள். கர்னல் மண்டியிட்டு உட்கார்ந்தான். அன்னிய நாட்டு மண்ணில் தன் புதல்வியை அவன் இந்தக் கோலத்தில் சந்தித்தான். மரணத்திலே உருக்குலைந்த அந்த அழகிய வதனத்தை அவன் உற்றுப் பார்த்தான். அவன் இன்பத்துடன் காத்திருந்த நாட்களை நினைத்தான்.

"வீனா? நீ எங்கே இருக்கிறாய்?" என்று அவன் மனம் கேட்டது.

இனி நம்பிக்கைக்கு இடமில்லை என்பதை அவன் உணர்ந்தான். வால்யா அங்கே படுத்திருந்தாள், தன் சிறிய முஷ்டியை உயர்த்திக் கொண்டு. மூடியிருந்த கையை அவன் திறந்தான். குழந்தையின் கையில் ஒரு பொத்தான் இருந்தது. ஜெர்மன் சிப்பாயின் பொத்தான் அது. உடனே கர்னலுக்கு எல்லாம் விளங்கிற்று. கைதியாக இருக்கும் மேஜர் தன் கையால் வால்யாவைக் கிணற்றில் தள்ளினான். அவள் அவனைத் தடுக்க முயன்றாள்; அவன் பொத்தானைப் பிடித்தாள். கீழே விழுந்த பொழுது அவள் பொத்தானைக் கிழித்து விட்டாள்!

"கைதியைக் கொண்டு வா!" என்று மந்தமான குரலில் கூறினான் கர்னல். தாழ்ந்த குரலில் அவன் இட்ட கட்டளை கூச்சலிடுவதை விட அதிக வலிமை படைத்திருந்தது.

கைதி வந்தான். கிணற்றுக்குச் சில அடிகளுக்கு அப்பால் அவன் நின்றான். "அருகில் வா!" என்றான் கர்னல். சிப்பாய் ஜெர்மானியனை முன்னே தள்ளினான்.

கர்னல் ஜெர்மானியனை அணுகினான். வால்யாவின் கையிலிருந்த பொத்தானை அவன் சட்டையில் பொருத்தினான். கர்னலின் பார்வையைக் கண்ட ஜெர்மானியன் மண்டியிட்டு உட்கார்ந்தான். பீதியுடன் அவன் ஊளையிட்டான். கோபத்தால் துடித்த சிப்பாய் துப்பாக்கியை ஓங்கினான்.

"வேண்டாம்!" என்றான் கர்னல்.

ஜெர்மானியன் அழுது கொண்டும், ஊளையிட்டுக் கொண்டும் கீழே ஊர்ந்தான். இதனால் அவன் வெறுப்பைத் தான் தூண்டி விட்டான்.

புராதன நகரில்

[லியோனிவ் பேர்வோ மெய்ஸ்கி]

குன்றின் உச்சியில் இருந்தது அந்தப் புராதன நகரம்.

அந்த நகரம் பல யுத்தங்களைப் பார்த்திருக்கிறது. சிப்பாய்கள் அந்த நகர வீதிகளில் உக்ரமாக எத்தனையோ தரம் போர் புரிந்தனர். பல நூற்றாண்டுகள் அங்கே

இடைவிடாது போர் நடந்தது. சுதந்திர கோஸாக்கு களின் தீரம் மிகுந்த செயல்களைப் பற்றியும், பல முற் றுகைகளைப் பற்றியும், தேச பக்தியைப் பற்றியும், தேசத் தின் மானத்தைக் காப்பதற்காக கோஸாக்குகள் செய்த தியாகங்களைப் பற்றியும், இரக்கமற்ற குண்டுகளைப் பற் றியும் அந்தப் புராதனக் கோட்டையின் கோபுரங்கள் பல கதைகள் சொல்லும்.

இரவில் கண்களை மூடிக் கொண்டு குண்டுச் சத்தத் தைச் செவி மடுத்தால் கோஸாக் முகாமில் ஆர்ப்பாட் டமும், வண்டிச் சக்கரத்தின் கிறீச்சிடும் சத்தமும், குதிரைகளின் சீறலும், போர் முரசின் வெற்றி முழக்கமும் கேட்கும்.

இரவில் பீரங்கி கர்ஜனை செய்தது; பெரிய பறவை யைப் போன்று குண்டு காற்றில் பறந்து சென்றது. சிறிது நேரம் எங்கும் அமைதி நிலவிற்று. மீண்டும் குண்டுச் சத்தம் கேட்டது. குண்டுகள் தீமை நிறைந்த குரலில் உறுமின.

•

மை இருட்டு. உலகைக் கரிய மேகம் மூடிவிட்டதைப் போன்றிருந்தது அந்தக் காட்சி. பனிக்கட்டி கூட அந்த இருளில் கண்ணுக்குத் தெரியவில்லை. வீதி இருளில் மறைந்து விட்டது. முகத்திற்கு முகம் தெரியாது அந்த இருளில். அந்த இரவில் தடுமாறிக் கொண்டும், சபித்துக் கொண்டும் பாழ்பட்ட கிராமத்தில் வீடு வீடாக ஏறி இறங்குகிறவன் எதிரியா, நண்பனா என்பதை எவ்வாறு நிர்ணயிப்பது?

"நில்! அங்கே போவது யார்?"

"போர்பிரி டுர்யோனேக்! இரண்டாவது படையின் கமான்டர்......என்னை உனக்குத் தெரியவில்லையா?"

"மனைவியைக் கூட அடையாளம் தெரிந்து கொள்ள முடியாது இந்த மை இருட்டில்! கர்னல் உன்னைத் தேடுகிறான். இரண்டு தரம் உன்னைக் கூப்பிட்டான்..."

கதவைத் திறந்து கொண்டு கமாண்டர் உள்ளே பிரவேசித்தான்.

"டுர்யோனேக்! நீ பெரிய வேலையைச் செய்ய வேண்டும்......இந்தப் பொறுப்பை நீ ஏற்பாயா?"

"வேலையின் தன்மையைத் தெரிந்துகொண்ட பிறகு தான் நான் வாக்குக் கொடுக்க முடியும் தோழர் கர்னல்" என்று வெட்கத்துடன் கூறினான் டுர்யோனேக். அவன் மனம் பரம திருப்தி அடைந்தது. பெரிய வேலையை அவனிடம் ஒப்படைக்கப் போகிறார்கள்! "பெரிய வேலையைச் செய்ய நான் தகுதி உடையவனா?"

கர்னல் அவன் கேள்வியைக் கேட்கவில்லை; அல்லது அதைக் கேட்க விரும்பவில்லை. மேஜை மீது பூகோளப் படம் இருந்தது, பெரிய மேஜைத் துணியைப் போல். மேஜை மீது முழங் கைகளை ஊன்றிக் கொண்டு நின்றான் கர்னல்.

"அந்த இரண்டு வீதிகளைப் பார், டுர்யோனேக்! தற்பொழுது ஜெர்மானியருக்கு இருக்கும் வீதிகள் அந்த இரண்டு தான். ஏனையவை நம்மிடம் இருக்கின்றன. நீ அங்கே சென்று ஒரு ஜெர்மானியனைச் சிறை பிடிக்க வேண்டும். உயர்ந்த அதிகாரியாக இருந்தால் நலம். ஏனெனில், நமக்குத் தகவல் வேண்டும். இதை உன்னால் செய்ய முடியுமா?"

"என் முடியாது? இரவில் ஜெர்மானியர் வீதியில் நடமாடுவார்கள்" என்றான் டுர்யோனேக். ஒரு நிமிடம் யோசித்து விட்டு அவன் சொன்னான்: "அங்கே குண்டு

எளிதில் நம்மைத் தாக்கும்......நமது பீரங்கிப் படை வீதிகளைக் காவல் காக்கிறது. நமது துப்பாக்கியே நமக்குப் பரிசளிக்கும். எனவே, ஒரு வீதியை நோக்கி மாத்திரம் சுடும்படி நீ உத்தரவிட்டால் எங்கள் வேலை எளிதாகும்..."

இதைச் செய்ய இசைந்தான் கர்னல். கமாண்டரின், போரில் பண்பட்ட இளம் முகத்தில் கர்னல் இன்பத்தைக் கண்டான். அதைக் காண அவனுக்கு ஆசை. சொல்ல வேண்டிய விஷயங்களை யெல்லாம் கர்னல் சொல்லி விட்டான் என்றாலும், டுர்யோனேக்கின் ஒளி வீசும் கண்களையும், செக்கச் செவேரென்றிருந்த கன்னத்தையும், சிறிய மீசையையும் இன்னும் சிறிது நேரம் காண வேண்டும் என்பதற்காக அவனை அங்கேயே இருக்கும்படி சொன்னான்.

"என்னுடன் ஒரு கிழவன் இருக்கிறான்" என்றான் டுர்யோனேக். "அவனை அழைத்துச் செல்ல எனக்கு அனுமதி கொடு. அவனுக்கு இந்த ஜில்லாவின் ஒவ்வொரு மூலையும் தெரியும். அவன் ஜெர்மானியருடன் கணக்குத் தீர்க்க விரும்புகிறான்."

"அவன் உன்னைக் கைவிட மாட்டேனே?" என்று கூறிப் பெருமூச்சு விட்டான் கர்னல். டுர்யோனேக்கைப் பிரிவதில் அவனுக்கு அளவு கடந்த வருத்தம்.

"அவன் என்னைக் கைவிட மாட்டான். அவனை நம்பலாம்."

"நீ போகலாம்!"

டுர்யோனேக் வெளியே சென்றான். அவன் கொடிய காற்றில் அந்த மை இருட்டில் மறைந்தான்.

அரைமணி நேரத்திற்குப் பிறகு குதிரைப் படையைச் சேர்ந்த முப்பது வீரர்கள் டுர்யோனேக் மேஜையைச்

சுற்றி நின்றனர். அது சிறிய அறை. சிப்பாய்களின் தலை கூரையில் இடித்தது. மேஜை மீது முழங்கைகளை ஊன்றிக் கொண்டு டுர்யோனேக் சொன்னான் :

"இது ரொம்ப ஆபத்தான வேலை. இதை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். நானும், இந்தக் கிழவனும்—இவன் பெயர் டிமோபீ இவானேவிச்—உங்களுக்குத் தலைமை தாங்குவோம். இவனை நீங்கள் நம்ப வேண்டும். சென்ற யுத்தத்தில் இவன் நான்கு பதக்கங்கள் பெற்ருன், தீரத்திற்காக. தெரிகிறதா ?"

பலர் மூச்சு விட்டதால் அகல் விளக்கு நடுங்கிற்று. பெஞ்சில் உட்கார்ந்திருந்த அந்தக் கிழவனை—அவன் தாடி நரைத்திருந்தது—எல்லோரும் உற்றுப் பார்த்தனர். குழப்பத்துடன் கிழவன் மீசையை முறுக்கினான். அவன் அடிக்கடி கடைக்கண்ணால் அடுப்பைப் பார்த்தான். அங்கே ஒரு கிழவி கையை மோவாயில் ஊன்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"கிழவன் இந்த வேலையை விட்டு விட்டு இறந்தவர்களுக்கு வழி காட்டட்டும்!" என்று கூட்டத்தில் இருந்த ஒருவன் சொன்னான். இதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் சிரித்தார்கள். உடனே டுர்யோனேக் குறுக்கிட்டுக் கூறினான்:

"போதும்! குதிரை இருக்கும் இடத்திற்குச் செல்லுங்கள் !"

குதிரைப் படை வீரர்கள் வெளியே சென்றனர்.

"நில், கோஸ்டிரின் !" கிழவனைக் கேலி செய்தவன் இவன்தான். "டிமோபீ இவானேவிச்சுக்கு நல்ல துப்பாக்கியும், பட்டாக் கத்தியும் கொடு! ....."

இது தனக்கு விதிக்கப்பட்ட தண்டனை என்பதை கோன்டிரின் உணர்ந்தான். அவன் மறைந்ததும் கிழவி குதித்து எழுந்தாள். நிர்யோனேக்கைச் சிறிதும் சட்டை செய்யாமல் அவன் கிழவனிடம் சென்றாள்.

"நீ எங்கே போகிறாய், முட்டாள்? பிறர் உன்னைக் கேலி செய்யவா? அவர்கள் உன்னைக் கேலி செய்தார்கள். நானும் சிரிக்க வேண்டியிருக்கிறது, முட்டாள்! எப்படி நீ குதிரை சவாரி செய்கிறாய் என்பதை ஜெர்மனியருக்குக் காட்டப் போகிறாய்? அது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்! முடிவான பிரயாணத்திற்கு நேரமாய் விட்டது. இந்த வேளையில் போர்க்களத்திற்குப் போகிறாயாக்கும், கிழமே!......"

பயத்துடன் டிமோபி இவானேவிச் கிழவியைப் பார்த்தான். பிறகு தும்மப் போகிறவனைப் போல் விழித்தான்......தான் டிமோபியை இழக்க நேருமென்று நிர்யோனேக் கருதினான். அப்பொழுது கிழவன் மேஜை மீது குத்தினான். அந்த வேகத்தில் மேஜை மீதிருந்த கோப்பை குதித்தது! அவன் அச்சுறுத்தும் குரலில் சொன்னான்:

"உன் இடத்திற்குப் போ, பெண்ணே! இது உன் வேலை அல்ல!"

கிழவி பதில் சொல்லுமுன், மிலைமா நெருக்கடியாகு முன் கோன்டிரின் ஆயுதங்களுடன் அங்கே வந்தான். டிமோபி இவானேவிச் உறுதியுடன் பட்டாக் கத்தியைக் கம்பீரமாகப் பிடித்தான். இதைக் கண்டு உடைந்த பலூனைப் போன்று அவன் மனைவி ஒடுங்கினாள். வெற்றிக் குறியுடன் டிமோபி நிர்யோனேக்கைப் பார்த்தான். அவன் உடைகள் அணிந்து கொண்டான்.

"நான் தயார்!"

அவர்கள் வெளியே சென்றனர். கிழவி கூச்சலிட்டாள்:

“உன் குதிரை சாகட்டும்! நீயும் தொலை!”

ஆனால், அவள் சொன்னது கிழவனுக்கும், டுர்யோனேக்குக்கும் கேட்கவில்லை. அவர்கள் குதிரை மீது ஏறினர். குதிரை மீது ஏற டுர்யோனேக் கிழவனுக்கு உதவி புரிந்தான்.

அவர்கள் மௌனமாகச் சவாரி செய்தனர். புகை குடிக்கக் கூடாது என்பது உத்தரவு. எனவே, அவர்கள் புகை குடிக்கவில்லை. டிமோபி அவர்களுக்கு வழி காட்டினன். அவன் அரளிச் செடிகள் நிறைந்த பாதையில் அவர்களை அழைத்துச் சென்றன். அதன் கிளைகள் அவர்கள் முகத்தைத் தாக்கின. பிறகு அவர்கள் செங்குத்தான பாதையில் இறங்கினர். இரு மருங்கிலும் குன்றுகள் உயர்ந்து நின்றன. விரைவில் ஆழமான நீர்க்கால் குதிரைப் படையை ஆட்கொண்டது. பூமி அவர்களை விழுங்கி விட்டதைப் போன்று தோன்றிற்று. வானம் அவர்களைத் திரையிட்டு மூடிற்று. அவர்கள் ஒருவர் பின் ஒருவர் நடந்தனர். இருளில் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. திடீரென்று ஒரு குதிரை சீறிற்று; அல்லது கையால் வாயை மூடிக் கொண்டு ஒருவன் இருமினன். பட்டாக் கத்தியின் கல்கல வென்ற சத்தமோ, வேறு சத்தமோ அமைதியைக் குலைக்கவில்லை.

மை இருட்டு! வெல்ல முடியாத இருள்! எத்தனை எண்ணங்களையும், செயல்களையும் இருள் மறைத்து வைக்கிறது! உலகம் உயிரற்று விட்டதாகக் காணப்பட்ட நேரத்தில் வீரர்கள் செய்த எத்தனை தீரம் மிகுந்த செயல்களை இருள் திரையிட்டு மூடுகிறது! நீர்க்காலில் பிரயாணம் செய்யும் அந்த வீரர்கள் எதற்காக ஆயத்தம் செய்கிறார்கள்? அவர்கள் மனம் எதை நினைக்கிறது? அவர்கள்

கூட்டமாகப் பிரயாணம் செய்தாலும் அவர்கள் மனம் எதை நினைக்கிறது? அவர்கள் யாரை நினைக்கிறார்கள்? துன்பகாமான இருளில் உறுதி படைத்த, வீரம் செறிந்த அவர்கள் உள்ளங்கள் எதை நினைக்கிறது?

அந்த நள்ளிரவில் பிரயாணம் செய்யும் வீரர்கள் தந்தையை நினைக்கிறார்களா, தாயை நினைக்கிறார்களா, அல்லது காதலியை நினைக்கிறார்களா? அவர்கள் வீட்டை நினைக்கிறார்களா, அல்லது அவர்கள் ஹிருதயத்தை நிறைத்த காதலியின் மதுரமான பேச்சை நினைக்கிறார்களா? குதிரைமீது அசைந்தாடும் அவர்கள் பலவிஷயங்களை நினைத்தார்கள். அவர்களில் யாரும் பேச விரும்பவில்லை.

வழிகாட்டியைப் பின் தொடர்ந்த இளம் கமாண்டர் போர்பிரி டுர்யோனேக்கும் சிந்தனைக் கடலில் மூழ்கினான். இருளும், காற்றும் அவனை உற்சாக மூட்டின. சிறுவனாக இருக்கும் பொழுது புத்தகத்தில் படித்த நகரத்திற்கு முக்கியமான வேலையை முன்னிட்டுப் போகிறோம் என்னும் எண்ணம் அவனுக்கு மகிழ்ச்சி அளித்தது.

தன் மூதாதைகள் கைப்பற்றின பழைய பாதையில் அவன் நள்ளிரவில் பிரயாணம் செய்கிறான்! சுதந்திர ஆர்வம் படைத்த கோஸாக்குகள் உக்ரேனின் மூலை முடுக்கி லிருந்தெல்லாம் அன்று அந்தக் கோட்டைக்குச் சென்றனர். அங்கே எதிரியை உக்ரமாக எதிர்த்துப் போர் புரிந்து, தன்னலத் தியாகத்தாலும் தீரத்தாலும் எதிரியைத் துரத்தினர். இரவில் கண்ணுக்குக் தெரியாத கோட்டை அவன் மனக்கண் முன் எழுந்தது. அதன் வீதிகளும், உயரமான சுவர்களும் அவன் மனக்கண்ணுக்குத் தெரிந்தன. அந்த அமைதியில் போர்க் கீதம் அவனுக்கு நன்றாகக் கேட்டது.........

திடீரென்று டிமோபீ இவானேவிச் நின்றான். குதிரையிலிருந்து கீழே இறங்கி நடக்கும்படி டுர்யோனேக் கட்டளை இட்டான். அவர்கள் அப்பொழுது சதுப்பு நிலத்தில் நடந்தார்கள். அங்கே அடர்த்தியான புதர்கள் வளர்ந்திருந்தன. குதிரைகள் ஜாக்கிரதையாக நடந்தன. அவை குளம்புகள் பட்டு பனிக் கட்டிகள் நொறுங்கின. குதிரை டுர்யோனேக் மீது மூச்சு விட்டது. குதிரை அடிக்கடி இடறிற்று. நீண்ட பிரயாணத்தால் தளர்ந்த மனிதனைப் போல் குதிரை நெடுமூச்சு விட்டது. குறித்த நேரத்தில் குறித்த இடத்தை அடைய வேண்டும் என்பதை உணர்ந்த குதிரை தொடர்ந்து நடந்தது.

ஜெர்மானியரைத் தாக்கிக் கொண்டிருந்த பீரங்கி ஓய்ந்தது. வேவுகாரர்களின் வெற்றியை எதிர் பார்த்துக் கொண்டு கர்னல் தலைமைக் காரியாலயத்தில் வீற்றிருப்பான். அவன் பெரிய தாக்குதலுக்கு ஏற்பாடு செய்கிறான் என்பதில் சந்தேகமில்லை. தேவையான தகவல் சேகரிக்கும் வேலையில் டுர்யோனேக் அடையும் வெற்றியைப் பொறுத்திருக்கிறது அந்தத் தாக்குதலின் முடிவு. சிரமமான வேலைதான்! இந்தச் சிரமமான வேலையில் தோல்வி அடைவதை விட மரணத்தை வரவேற்பான் டுர்யோனேக்! பாதியில் நின்று விடும் வழக்கம் அவனுக்கில்லை.

ஜாக்கிரதையாக முன்னே சென்று டுர்யோனேக் வழிகாட்டியிடம் கேட்டான்:

"இன்னும் வெகு தூரம் இருக்கிறதா?" டிமோபீ இவானேவிச் ஒரு மேட்டிலிருந்து இன்னொரு மேட்டிற்குத் தாவினன். இருளில் அவன் ஜாக்கிரதையாக நடந்தான்.

"நான் அவளைக் கண்டு பயப்படுகிறேன் என்று நினைக்கிருயா?" என்று டுர்யோனேக்கின் கேள்விக்குப் பதில் கூருமல் கேட்டான் டிமோபி. கிழவன் தன் மனைவியைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிருன் என்பது ஒரு நிமிடத்திற்குப் பிறகு தான் டுர்யோனேக்குக்குத் தெரிந்தது. "பேயைக் கண்டு அஞ்சாதவன் பெண்ணைக் கண்டு அஞ்சுவானு?... நாற்பது வருடங்களுக்கு முன் நாங்கள் வாழ்க்கைப் பிரயாணத்தை ஆரம்பித்தோம். நாற்பது வருடங்களாக அவள் என்னைத் துன்புறுத்துகிருள், நாற்பது ஈக்கள் என்னைக் கடிப்பதைப் போல்! அந்த யுத்தத்தில் நான் ஈடுபட்ட நான்கு வருடங்களில் தான் நான் அமைதியைக் கண்டேன்......"

"உன்னைத் துன்புறுத்துகிருள், அல்லவா?" என்று மனதிற்குள் சிரித்துக் கொண்டே கேட்டான் டுர்யோனேக்.

"துன்புறுத்துகிருளா என்ரு கேட்கிருய்? அவள் நாக்கு சவுக்கைப் போன்றது! அவள் என் தோலை உரித்து விடுகிருள்..."

அவர்கள் சதுப்பு நிலத்தைக் கடந்து விட்டார்கள். கிழவன் குதிரை மீது ஏறினுன்.

"அந்த மரம் உனக்குத் தெரிகிறதா? அது தான் இடம்!"

அந்த மரத்தைப் பார்க்க முயன்ருன் டுர்யோனேக். ஆனுல், அது அவனுக்குத் தெரியவில்லை. இருளைத் தவிர அவன் வேறு எதையும் காணவில்லை. அவ்வளவு கூர்மையான பார்வை படைத்த கிழவன் மீது அவன் பொருமைப் பட்டான். மைதானம் முடிந்தது. இலைகளற்ற அரளிச் செடிகள் திடீரென்று அவர்கள் முன் தோன்றின. அதே

சமயத்தில் குதிரைகளின் குளம்புச் சத்தம் கணீரென்று ஒலித்தது. அவர்கள் வீதியை அடைந்து விட்டனர்.

உணர்ச்சி டுர்யோனோக்கை ஆட்கொண்டது. நீர்க் காலிலும், சதுப்பு நிலத்திலும் நடந்தபொழுது அவனுக்கு இருந்த மந்த உணர்ச்சி மறைந்தது. அவன் விழித்தான். ஆபத்தைப் பின்தொடரும் உற்சாகம் அவனை ஆட்கொண்டது. அவன் தனியே இருக்கவில்லை. தலை சிறந்த முப்பது இளம் வீரர்கள் அவனுக்குப் பின்னே இருக்கிறார்கள்! தன் மனைவியைத் தவிர வேறெதையும் கண்டு அஞ்சாத வழிகாட்டி அவனுக்கு அருகில் இருந்தான். இந்த முயற்சியின் வெற்றி டுர்யோனோக்கின் திறமையைச் சார்ந்திருந்தது.

குதிரைகள் முறையாக அடி வைத்து நடந்தன. இருள் குறைந்தது. இதற்குக் காரணம் என்ன? வீதியின் இரு மருங்கிலும் குவிந்து கிடந்த பனிக் கட்டிகளின் ஒளியால் வீதியை வெண் ஓரத்துடன் விளங்கும் கறுப்பு நாடாவாக்கின பனிக்கட்டிகளின் ஒளியால், இருள் குறைந்தது.

ஐம்பது கஜங்களுக்கு அப்பால் வீதி ஓரத்தில் மோட்டார்கள் வரிசையாக நின்றன. ஒரு வேலை தான் பாக்கி இருந்தது. கமாண்டர் தணிந்த குரலில் பின்னே இருந்தவனுக்கு ஏதோ சொன்னான். அவன் தனக்குப் பின்னே இருந்தவனுக்குச் சொன்னான். விஷயம் எல்லோருக்கும் தெரிந்தது. அவர்கள் ஜாக்கிரதையாக மோட்டார்களைக் கடந்து சென்றனர். மோட்டார்களுக்கு முன் ஜெர்மன் காவற்காரர்கள் நின்றனர். மோட்டார் டிரைவர்கள் பரபரப்புடன் அங்கு மிங்கும் நடந்தனர். ஜெர்மானியரின் குரலை அவர்கள் கேட்டனர். மோட்டார்களைக் கடந்ததும் அவர்கள் குதிரைகளைத் தட்டிவிட்டனர். அவர்கள் குறித்த இடத்தை அடைந்தனர்.

காவற்காரர்கள் இருளிலிருந்து வெளிப்பட்டு குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்தனர். ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் டுர்யோனேக்கும், டிமோபீயும் காவற்காரர்களைப் பட்டாக்கத்தியால் வெட்டினர். சிப்பாய்கள் ஜெர்மானியரை பாலத்திற்கு இழுத்துச் சென்றனர். வீடுகள் அவர்களுக்குத் தெரிந்தன. அவர்கள் கீழே இறங்கினார்கள். குதிரைகளைப் பாதுகாக்கும் வேலை ஐவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏனையோர் டுர்யோனேக் தலைமையில் நகரத்திற்குச் சென்றனர். அதன் பிறகு சம்பவங்கள் துரிதமாக நிகழ்ந்தன.

ஜாக்கிரதையாக நடந்த டுர்யோனேக் இடறி விழுந்தான். சாக்கடையில் கம்பிகள் குவிந்து கிடப்பதை அவன் கண்டான். அந்தக் கம்பிகளை அவன் பின் தொடர்ந்தான். ஒரு சிறிய வீடு தெரிந்தது. அது தந்திக் காரியாலயம்! காவற்காரன் கூடுமுன் செம்படை வீரர்கள் காவற்காரனையும், வீதியிலிருந்த ஏனையோரையும் நிர்மூலம் செய்தனர். டிமோபீயின் நரைத்த தாடி உணர்ச்சியால் துடித்தது. அவனும் டுர்யோனேக்கும் காரியாலயத்தில் பிரவேசித்தனர். கமான்டரின் கடும் சொல்லால் வருந்தின கோஸ்டிரின் அவர்களைப் பின் தொடர்ந்தான். கையில் எறி குண்டுகளை வைத்துக் கொண்டு அவன் கதவுக்கு முன் நின்றான். தூக்கமின்றிச் சிவந்த கண்களால் தந்தி-ஆப்பரேட்டர் செம்படை வீரர்களைப் பார்த்தான். டிமோபீ துப்பாக்கி முனையால் தந்திக் கருவியை உடைத்தான்; பட்டாக் கத்தியால் கம்பிகளை அறுத்தான். டுர்யோனேக் செய்தித் தாள்களைப் பொறுக்கினான்.

இது மிகப் பெரிய வெற்றி; ஒரு ஜெர்மானியனைச் சிறை செய்வதை விட மிகப் பெரிய வெற்றி. எனினும், டுர்யோனேக் இதனால் திருப்தி அடையவில்லை. அவன்

ஒரு ஜெர்மானியனைச் சிறை செய்ய முடிவு செய்தான். "பெரிய அதிகாரியாக இருந்தால் நல்லது!" இது கர்னலின் கட்டளை. உத்தரவுகளை நிறைவேற்ற டுர்யோனேக் அதுவரையில் தவறினதில்லை!

வீதியில் குண்டுகள் பறந்தன. டுர்யோனேக்கும், டிமோபீயும் வெளியே ஓடினர். ஜெர்மானியர் பயத்தால் தாறுமாருகச் சுட்டனர். நகரின் மத்தியிலிருந்து ஆகாச வெடிகள் உயரக் கிளம்பின....................

இருளில் டுர்யோனேக் புன்னகை புரிந்தான். அவன் டிமோபீயின் தோளைக் குலுக்கினுன். தாமதிக்க நேர மில்லை. கோஸ்டிரின் இன்னும் வன் தந்திக் காரியால யத்தில் இருக்கிருன்?

பீதி, தாக்கும் படைக்குச் சாதகம். ஆனல், பீதி குறைந்ததும் தாக்கும் படையின் நிலை ஆபத்திற்கு உள்ளாகும். அந்த நிலையில் பீதி அடைந்த எதிரி என்ன செய்வான் என்பதை நிர்ணயிப்பது கஷ்டம்.

தொடர்ந்து இரண்டு எறி குண்டுகள் வெடித்தன. கண்ணுடிகள் நொறுங்கின. அதே சமயத்தில் கோஸ்டி ரின் வெளியே ஓடி வந்தான்.

"தயார்! லாயத்தில் எல்லாம் தயார்!"

அவர்கள் ஓடினர்.

"அற்புதமான வேலை!" என்றுன் டுர்யோனேக் சாக்கடையைத் தாவிக் கடந்ததும், அவன் ஒரு கம்பத்தில் மோதிக் கொண்டான். அவன் சபித்தான்; தன்னை யாரோ சபிப்பதைக் கேட்டு அவன் வியந்தான். அது கம்பம் அல்ல. ஒரு ஜெர்மானியன் வீதியில் நின்று கொண்டு டெலிபோனில் பேசினுன்.

"இங்கேவா!" என்றான் டுர்யோனேக். அவன் ஜெர்மானியன் மீது பாய்ந்தான். கோஸ்டிரின் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான்; டிமோபீ அவன் கால்களைப் பிடித்துக் கொண்டான். மூவரும் சேர்ந்து அவன் கைகளையும், கால்களையும் கட்டி அவனை இழுத்துச் சென்றனர்.

குதிரைப் படை வீரர்கள் அங்கே ஓடி வந்தனர். எல்லோரும் குதிரைகள் மீது ஏறினர். குண்டுகள் பறந்தன. அவர்கள் கைதியுடன் சூறுவளியைப் போன்று பாய்ந்து சென்றனர்.

காலையில் டுர்யோனேக்கும், அவன் தோழர்களும் கைதியுடன் கிராமத்தை அடைந்தனர். அவர்கள் போரில் ஒருவனைக் கூட இழக்கவில்லை. தன் வீட்டை அடைந்ததும் டிமோபீ கீழே இறங்கினான்.

"பொறு!" என்றான் டுர்யோனேக் "கர்னலிடம் நாம் போகலாம்! உனக்குக் கண்டிப்பாகப் பரிசு கிடைக்கும்......"

கிழவன் காதைச் சொறிந்தான். பிறகு தன் வீட்டைச் சுட்டிக் காட்டிவிட்டு அவன் தணிந்த குரலில் சொன்னான்:

"என் கர்னல் அங்கே இருக்கிறான்.........அவனிடம் நான் ஜெர்மானியனை வெட்டினதாகச் சொல்லாதே! ரத்தம் என்றாலே அவனுக்குப் பயம். ஆனால், அது நமது வேலை! அதை நாம் செய்துதான் தீரவேண்டும்."

காலைக் காற்று மூடு பனியைக் கலைத்தது. டுர்யோனேக் கிழக்கே பார்த்தான். தங்க மயமான சூரியன் உதித்துக்கொண் டிருந்தது. அவன் மேற்கே பார்த்தான். புராதன நகரத்தின் கோபுரங்கள் வானத்தை முட்டின.

"அதை நாங்கள் கைப்பற்றுவோம்!" என்று சபதம் செய்தான் டுர்யோரேக். பிறகு, புன்னகையுடன் அவன் கர்னல் வீட்டை நோக்கி நடந்தான்.

சிறுவன்

[வாண்டா வாஸி லேவ்ஸ்கா]

யாரைப்பற்றி எழுதலாம்? பல வீரர்கள் சரித்திரத்தை அலங்கரிக்கிறார்கள். நாள் தோறும் வீரர்களின் வீரச் செயல்கள் சரித்திரத்தில் பொறிக்கப்படுகின்றன. சாதாரண ஜனங்கள் திடீரென்று பெருமையின் சிகரத்தைத் தாவிப் பிடிக்கிறார்கள். சாதாரண வாலிபன் மகா புருஷனாக மாறுகிறான். சாதாரண கிழவி பிரசித்தி பெற்ற வீராங்கனையாக விளங்குகிறாள். அமானுஷ்ய முயற்சியையும், விரிந்த உள்ளத்தையும், தீரம் மிகுந்த செயல்களையும் இன்று தேசமெங்கும் காணலாம். பத்திரிகைகள் இந்தச் செய்திகளைப் பிரசுரிக்கின்றன; ரேடியோக்கள் இந்தச் செய்திகளைப் பறை அறைகின்றன. ஆனால், சில சம்பவங்கள் ரத்தத்தாலும், நெருப்பாலும் எழுதப்படவில்லை என்றாலும், வானத்தை நோக்கிப் பாயும் ஆகாச வெடியைப் போன்று இவை பல வர்ணங்களை அள்ளி வீசவில்லை என்றாலும், இவை தீரம் மிகுந்த செயல்கள் தான்! உண்மையில் தேச பக்தியால் தூண்டப்பட்ட இந்தச் செயல்கள் தன்னலத் தியாகத்தின் சிகரத்தைக் கட்டித் தழுவுகின்றன. இந்தச் சம்பவங்களுக்கு முன் வாழ்க்கையின் முக்கியத்துவம் மங்கி மறைகிறது.

வீரர்களின் சரித்திரத்திலே குழந்தைகளுக்குத் தனி இடம் ஒதுக்கப்படும்.

பனிரெண்டு வயதான இந்தக் குழந்தையின் பெயர் அவ்வளவு முக்கியமானதல்ல. இவனைப் போன்ற எத்தனையோ சிறுவர்கள் இப்பொழுது தேசத்தில் இருக்கிறார்கள். அப்படியானால், இந்தக் குழந்தையின் சரித்திரத்தை நான் ஏன் எழுதுகிறேன்? இந்தக் கவர்ச்சி அளிக்கும் சரித்திரத்தை நேரில் கண்டவர் என்னிடம் சொன்னார்!

வீதியில் வந்து கொண்டிருந்த ஜெர்மன் டாங்கிகளின் சத்தம் வெகு தூரம் வரையில் கேட்டது. எந்த நிமிடத்திலும் இரும்பு அரக்கர்கள் கிராமத்தில் பிரவேசிக்கலாம். அது பழைய உக்ரேனிய கிராமம். இருபது வருஷங்களுக்கு முன் ஜெர்மானியரை எதிர்த்து ஜனங்கள் நடத்தின யுத்தத்தை அந்தக் கிராமம் மறந்துவிடவில்லை. காடு அருகில் இருந்தது. அந்த அடர்ந்த கானகத்தில் ஒளிந்து கொண்டு எதிரியை எளிதில் தாக்கலாம்.

ஆண்கள் காட்டுக்குப் போகிறார்கள். அவர்கள் போகும் பொழுது தூசிப் படலத்தைக் கிளப்பிக் கொண்டே போனார்கள். குதிரைகள் மீது சவாரி செய்த கிராமவாசிகள் அசைந்தாடினார்கள். தூசிப் படலத்தினூடே பனிரெண்டு வயதுச் சிறுவன் தென்பட்டான். பார்ட்டிசான்கள் போகிறார்கள். அவர்கள் சிறுவனை கிராமத்திலே விட்டுவிட்டுப் போகிறார்கள்.

குழந்தைக் கரங்கள் குதிரையின் பிடரி மயிரைப் பிடித்தன. ஆனால், பனிரெண்டு வயதுச் சிறுவனை அவர்கள் கானகத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது. ஏனெனில், அந்த வாழ்க்கை சிரமமானது; மரணம் எந்த நிமிஷத்திலும் அவர்களைத் தழுவலாம்; வயது வந்தவர்

களால்தான் துன்பத்தைச் சகிக்கமுடியும்; அவர்களால் தான் சகிப்புத் தன்மையுடன் செயலாற்ற முடியும்.

அழுதுகொண்டே குதிரையைப் பின்தொடரும் சிறுவனுக்காக, துணிவுடன் பிடரி மயிரைப் பிடித்துக் கொண்டு தொங்கும் சிறுவனுக்காக அவர்கள் வருந்தினார்கள். அந்தக் குழந்தை உள்ளம் வேதனையால் துடித்தது. பார்ட்டிசானாக அவன் தகுதியற்றவன் என்று அவர்கள் கருதினார்கள்; ஆயுதம் ஏந்த அவனுக்கு வலிமை இல்லை என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால், ஏனைய பார்ட்டிசான்களுடன் தானும் போர் புரிய முடியுமென்று அவன் இருதய பூர்வமாக நினைத்தான். அவர்களைப் போன்று வாழ அவன் விரும்பினான். குதிரைகள் வேகமாக ஓடின. அந்தப் புழுதி நிறைந்த பாதையில் குதிரைகளுடன் ஒத்து ஓட அவர்களால் முடியவில்லை. அவன் குரலில் இரக்கம் தொனித்தது.

அந்தச் சிறுவனைக் கண்டு இரங்கினான் ஒரு பார்ட்டிசான். அவன் குனிந்து சிறுவனிடம் ஒரு பொருளைக் கொடுத்தான்.

“இந்த எறி குண்டை வைத்துக்கொள். நீ கிராமத்திலேயே இரு. உனக்குக் கிடைக்கும் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்து. எப்பொழுதும் விழிப்புடன் இரு. நெருக்கடியான கட்டத்தில் இதன் ருசியை அவர்கள் அனுபவிக்கும்படி செய்.”

உடனே கண்ணீர் நின்றது. குழந்தைக் கரம் எறி குண்டை இறுகப் பிடித்தது. எல்லாம் சீர்பட்டு விட்டன. பார்ட்டிசான்களைப் போன்று அவனிடமும் ஒரு எறி குண்டு இருக்கிறது. அவர்கள் அவனுக்கு ஒரு வேலை கொடுத்திருக்கிறார்கள்; வயது வந்தவர்களுக்கும் இத்தகைய வேலைதானே கொடுக்கப்படுகிறது?

எறிகுண்டை அவன் சட்டைக்குள் வைத்துக் கொண்டான். பிறகு அவன் திருப்தியுடன் கிராமத்திற்குத் திரும்பினான். அவர்கள் கட்டளை இட்டதைப் போன்று அவன் எல்லாவற்றையும் கவனித்தான். நிலைமையை இன்னும் ஜெர்மானியர் தெரிந்துகொள்ளவில்லை. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் கிராமத்தின் கோடியில் வசித்தனர்.

சிறுவன் சுற்றுமுற்றும் பார்த்தான். வீதிக்கு அப்பால் உள்ள குடிசையில் இருக்கிறது ராணுவ தலைமைக் காரியாலயம். ஜெர்மன் அதிகாரிகள் அங்குமிங்கும் நடக்கிறார்கள். கதவுக்குமுன் நிற்கிறார்கள் காவற்காரர்கள். எறிகுண்டு அவன் தேகத்தை ஸ்பரிசித்தது. எனினும், அது அங்கே இருக்கிறதா இல்லையா என்பதை ஊர்ஜிதம் செய்வதற்காக அவன் சிறிய கரங்கள் எறிகுண்டைத் தொட்டன. அது அங்கே இருக்கிறது. அதை அவன் இழக்கவில்லை. கிராமத்தின் கோடியில் இருக்கிறது தலைமைக் காரியாலயம். ஜெர்மன் அதிகாரிகள் அங்கே வசிக்கிறார்கள்.

உடனே அந்தக் குடிசைக்குச் செல்ல அவன் முடிவு செய்தான். அவர்கள் கிராமத்தைச் சூறையாடுமுன், வீடுகளை எரிக்குமுன், குழந்தைகளையும், பெண்களையும் கொல்லுமுன், கிராமத்தை நகரமாக மாற்றுமுன் அவர்களைத் தடுக்க அவன் முடிவு செய்தான். அவர்கள் கிராமத்தை ஒரு பாலைவனமாக மாற்றுவார்கள் என்பது வாலிபர்களுக்கு நன்றாகத் தெரியும். அவன் கீச்சுக் குரலில் காவற்காரனை அழைத்தபொழுது அவன் குரல் நடுங்கவில்லை; அவன் கண்கள் அசையவும் இல்லை. தலைமைக் காரியாலயத்திற்கு உடனே ஏதோ தகவல் தெரிவிக்க வேண்டும் என்பதைச் சைகைமூலம் அவன் காவற்காரனுக்குத் தெரிவித்தான். உடனே ராணுவ அதிகாரிகளிடம்

அவன் பேசவேண்டும் என்பதை அவன் காவற்காரனுக்கு அறிவுறுத்தினான்.

ஒரு அதிகாரி வெளியில் வந்தான். சிறுவனுக்கு என்னவேண்டும் என்று அவன் கொச்சைப் பாஷையில் கேட்டான். சிறுவனின் குரல் தடுமாறவில்லை. அதிகாரியின் கண்களை அவன் இமை கொட்டாது பார்த்தான். ஆம்; பார்ட்டிசான்கள் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவன் தெரிவிக்க விரும்புகிறான்.

குடிசைக்குள் அவனை அழைத்துச் சென்றார்கள். உள்ளே மேஜையைச் சுற்றி ஆறு அதிகாரிகள் வீற்றிருந்தனர். அவர்கள் படத்தைப் பார்த்துக்கொண்டு எதையோ விவாதித்தனர். சிறுவனை அவர்கள் நிமிர்ந்து பார்த்தனர்.

அவர்களுக்கு நன்மை பயக்கும் தகவலைச் சொல்ல அவன் வந்திருக்கிறான். ஆனால், சிறுவன் அந்த அறையை நுணுக்கமாகப் பரிசீலனை செய்தான். அங்கே ஆறு அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் சட்டைகளைப் பதக்கங்கள் அலங்கரித்தன. வீரத்திற்காக அளிக்கப்பட்ட பரிசுகள் அவை. அவர்கள் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள். இதில் சந்தேகமே இல்லை!

சட்டைக்கு உள்ளே இருந்த எறிகுண்டு அவன் தேகத்தை ஸ்பரிசித்தது. அது குளிர்ந்திருந்தது. அவன் குழந்தைக் கண்களும் குளிர்ந்திருந்தன. அவன் அவர்களை எண்ணினான். எங்கே நின்றால் அவன் முயற்சி பரிபூரண வெற்றிபெறும் என்பதைப்பற்றி யோசித்தான். அவன் அமைதியாகவும், புத்திசாலித்தனமாகவும் பதில் சொன்னான். அவர்கள் பார்ட்டிசான் படையில் சேருவதற்காகக் கிராமத்திலிருந்து வெளியேறினர். எல்லோரும் போய் விட்டார்கள்.

பொறுமை இழந்த குரல்கள் அவனைப் பல கேள்விகள் கேட்டன. சிறுவன் மெதுவாக பற்றற்றுப் பதில் கூறினான். விவசாயிகளின் வழியில் அவன் பேசினான். அவன் காலம் கடத்தினான். விஷயங்களை விவரமாகச் சொன்னான். அவன் காலம் கடத்த விரும்பினான்; மேஜையைச் சுற்றி இருப்பவர்கள் மனதில் சந்தேகம் இடம் பெற்றிருந்தால் அதை நீக்க முயன்றான்.

மத்தியில் உட்கார்ந்திருந்த அதிகாரி—அவன்தான் தலைமை அதிகாரி—கையை வீசினான். இந்தத் தகவல் போதும். அவனுக்கு எல்லாம் தெரிந்துவிட்டது; கிராம வாசிகள் எப்படிப் போனார்கள் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டது?

இன்னும் ஒரே கேள்வி: அவர்கள் எங்கே?

துவிபாஷிகன் இந்தக் கேள்வியைச் சிறுவனிடம் கேட்டான்: "பார்ட்டிசான்கள் எங்கே?"

சிறுவன் ஒரு அடி முன்சென்றான். அவன் மேஜையை அணுகினான். அப்பொழுது அவன் குழந்தைக் குரலில் பேசவில்லை. அமைதியாக அந்த ஆறு அதிகாரிகளைப் பார்த்து அவன் சொன்னான்:

"பார்ட்டிசான்கள் எங்கும் இருக்கிறார்கள்!"

இமைப்பொழுதில் அவன் எறிகுண்டை வெளியில் எடுத்தான். மறுகணம் அவன் எறிகுண்டை அதிகாரிகள் மீது எறிந்தான். அவர்கள் எழுந்திருக்குமுன், அவர்கள் கூச்சலிடுமுன், என்ன நடக்கிறது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளுமுன், மரணம் அவர்களை நிர்மூலம் செய்தது.

அவர்களுடன் பனிரெண்டு வயதுச் சிறுவனும் மறைந்தான். ஆறு அதிகாரிகளுக்காக ஒருவன் பலி

யானன். மரணத்தில் அவன் குழந்தை வதனம் முறுக் கேறிற்று. வீரனின் பெருந்தன்மை அவன் வதனத்தில் இடம் பெற்றது!

கல்லறை அவனை ஆட்கொள்ள முடியாது. உணர்ச்சி யால் சுடர்விட்டு எரிந்த அவன் ஹிருதய விளக்கை அவன் தாய்நாடு அவிக்காது. அந்த விளக்கு உக்ரேனிய கிராமங்களில் பொன் கிரணங்களை வீசும்; பழிவாங்கும் படி அது ஜனங்களைத் தூண்டும்.

இதனல்தான் சிறுவனின் பெயர் அவ்வளவு முக்கிய மானதல்ல என்றேன். வயல்களில் அவன் விளையாடின பொழுது அவன் அன்னை அவனை எந்தப் பெயரில் அழைத் தால் என்ன? அவனைப்போன்று நூற்றுக் கணக்கான சிறுவர்கள் இருக்கிருர்கள்—உணர்ச்சி நிறைந்த ஹிருதயம் படைத்த, வயது வந்தவர்களைப் போன்று தேசத்தை ஆர் வத்துடன் நேசிக்கிற, வயது வந்தவர்களைப் போன்று பெருமையுடன் போர்க்களத்தில் மடிகிற தீரம் மிகுந்த சிறுவர்கள் தேசத்தில் இருக்கிருர்கள்!

ஆர். ராமனுதன்

எழுதிய நூல்கள்

அறிஞர் மார்க்ஸ் ரூ. 1-8

லெனின் அச்சில்

சோவியத் குடியரசுகள் அச்சில்

இந்தப் புத்தகம்

ஒரு அரிய கதைத் தொகுப்பு. ஸ்டாலின் பரிசு பெற்ற 'வானவில்', 'காதல்' என்ற இரண்டு நாவல்களை எழுதிய ஸ்ரீமதி வாண்டா வாஸிலெவ்ஸ்கா எழுதிய தேச விடுதலைக்காக, சிறுவன்; அடைடோல் ரூஸ்ஸோ எழுதிய கல்லறை; போரிஸ் லாவ்ரானவ் எழுதிய சித்திரம்; ஸெர்ஜி க்ருஷின்ஸ்கி எழுதிய தேச பக்தன்; ஸிரில் லெவின் எழுதிய சாகஸம்; நடான் ரிபாக் எழுதிய படுகொலை; லியோனிவ் பெர்வோமெய்ஸ்கி எழுதிய புராதன நகரில்—ஆகிய கதைகள் அடங்கியிருக்கின்றன. 'வானவில்' என்ற அரிய நாவலை தமிழில் மொழிபெயர்த்த ஸ்ரீ ஆர். ராமநாதன் இந்தக் கதைத் தொகுப்பையும் மொழிபெயர்த்திருக்கிறார்.